
பக்கங்கள்: 14

Registered as a Newspaper

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை
ரூ. 5-00

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

மலை: 5 சுக்கில ஞூ மாசி மீ 26 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 12 (10—03—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 5

★ இந்தியப்படை வெளியேறிய பின்னர்

# இலங்கை ராணுவம் குவிக்கப்படமாட்டாது

## சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 10

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து இந்தியப்படை வெளியேறிய பின்னர் அங்கு இலங்கை இராணுவம் குவிக்கப்படமாட்டாது.

பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கொழும்பில் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

இதே வேளை —

விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே தற்செயலாகக்கூட மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை இருதரப்பினரும் கூட்டாக தயாரித்துள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வரும் இவ்வேளையில் —

வடக்கு, கிழக்கில் படைகளைக் குவித்து முறுகல் நிலையை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்காது என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே தற்செயலாகக்கூட மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது குறித்து —

கடந்த திங்கட்கிழமை அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீதுடன் விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக் குழு நடத்திய பேச்சுக்களின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்புக்களிலும் உள்ள ''இராணுவ சக்திகள்'' ஆளை ஆள் மோதாமல் பார்த்துக்கொள்வதை உறுதி செய்வதே இப்பேச்சுக்களின் நோக்கமாக அமைந்தது.

அரச துருப்புக்களின் நடமாட்டத்தின்போது விடுதலைப் புலிகள் சுடாமலும்,

(5ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 10ஆயிரம் பேருக்கு ரூபா 4 ஆயிரம் நிவாரணம்

### காசோலைகள் வங்கிக்கு அனுப்பப்பட்டன

யாழ். மாவட்டத்தில் மேலும் 10 ஆயிரம் பேருக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப்பணம் (ரூபா 4ஆயிரம்) வழங்கப்பட இருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் ஒன்பது உதவி அரசாங்க அதிபர்

(5ஆம் பக்கம் பார்க்க)

## வரதருக்கு வழங்கப்பட்ட தொலைபேசி துண்டிப்பு?

திருகோணமலை, மார்ச் 10

வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாளுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட தொலைபேசி இணைப்பு வெட்டப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

திரு. வரதராஜப்பெருமாளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு விசேடமாக கொழும்பு தொலைபேசி இணைப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்தஇணைப்பு கடந்த இரண்டு தினங்களாக இயங்கவில்லை.

அந்த தொலைபேசி இணைப்பு அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் வெட்டப்பட்டி

[5 ஆம் பக்கம்பார்க்க]

## எய்ட்ஸ் பெண்ணுக்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 10

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட நிறைமாதக் கர்ப்பிணியை கொழும்பு டி சொய்சா மருத்துவமனையில் அனுமதியளிப்பதற்கு அங்கு பணி புரியும் டாக்டர்களும் ஊழியர்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(இ - அ)

## ரஞ்சனுக்கு மேலதிக பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 10

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் பாதுகாப்புக்கு 12 பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இரு ஜீப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவலை அமைச்சர் விஜேரத்னாவே நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். (ஒ - எ)

## யாழ் மாவட்ட உணவு முத்திரைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் மாவட்டத்துக்கான உணவு முத்திரைகள் இம்மாதஇறுதிக்குள் கொழும்பில் இருந்து வரஇருப்பதாக சமூக சேவைப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள 4ஆம் இலக்கத் தொடர் உணவு முத்திரை இம்மாதத்துடன் முடிவடைகிறது. (இ 3)

## தொலைபேசி இணைப்பு வடமராட்சிக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடமராட்சிக்கு இன்னும் ஆறுமாத காலத்தினுள் நூறு இணைப்புக்களைக் கொண்ட தொலைபேசிச் சேவை கிடைக்கும்.

தற்போது யாழ். நகரில் இயங்கி வரும் தொலைபேசி இணைப்புகளுக்குப் பதிலாக நகருக்கு கூடிய எண்ணிக்கையுடைய, தரம் உயர்ந்த தொலைபேசிச் சேவை ஒன்று வழங்கப்படும்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தற்போது செயற்பட்டு வரும் இணைப்புகள் வடமராட்சிக்கு மாற்றப்படும் எனத் தெரியவருகிறது.

யாழ். நகருக்கு எண்ணிக்கை கூடிய தொலைபேசிச்சேவை கிடைத்ததும், தற்போது யாழ். பண்ணையில் செயற்பட்டு வரும் —

நூறு தொலைபேசிகளின் 'தொலைபேசி பரிவர்த்தனை இயந்திரம் (சுவிச் போர்ட்)' — நெல்லியடி மாலி சந்திக்கு அண்மையில்உள்ள தொலைத்தொடர்பு திணைக்கள கட்டடத்தில் பொருத்தப்படும் என்றும் —

அங்கிருந்து வடமராட்சியின் முக்கிய இடங்களுக்கு இணைப்புகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## வர்த்தக நிலையங்கள் திறக்கும் நேரம் என்ன?

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். மாவட்டத்தில் புதிய சாப்புச் சட்டத்தின்படி எத்தனை மணிதொடக்கம் எத்தனை மணிவரை வியாபார நிலையங்கள் திறக்கவேண்டும் என்பதுபற்றிய அறிவித்தல் அடுத்த வாரம் வெளிவர இருக்கிறது.

சாப்புச் சட்டத்தின்படி காலை 10 மணிமுதல் இரவு

(5ஆம் பக்கம் பார்க்க)

நாட்டைவிட்டு வெளியேறும்

# ஈழத் தமிழரை ஏற்க தமிழகத்தில் மறுப்பு!

சென்னை, மார்ச் 10

இலங்கையிலிருந்து இந்தியப் படை வாபஸாவதை அடுத்து நாட்டை விட்டு வெளியேறும் நோக்குடன் தமிழகத்துக்கு கப்பல் ஒன்றில் சென்ற ஈழத் தமிழ் குழுவினரை ஏற்க தமிழக அரசு மறுத்துவிட்டதாக அறியவருகிறது.

850 இளைஞர்களுடன் சென்ற கப்பல் ஒன்றையே சென்னைத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அங்குள்ள இந்திய அதிகாரிகள் அனுமதியளிக்க மறுத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துறைமுகத்தில் இருந்து கப்பலை வெளியே கொண்டு போகுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் அறியவந்தது.

இதேவேளை 750 இலங்கைத் தமிழரையும், தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் பேரையும் ஏற்றிக்கொண்டு வந்த மற்

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஒரிஸ்ஸாவில் தஞ்சம்!

இலங்கையில் இருந்து வரும் தமிழ் அகதிகளில் ஒரு பகுதியினருக்கு ஒரிஸ்ஸா மாநிலத்தில் தஞ்சம் அளிக்கப் போவதாக அம்மாநில முதலமைச்சர் பிஜூபட்நாயக் நேற்று அறிவித்தார்.

''தமிழகத்தின் சுமையை இலகுவாக்க எனது சிறுமுயற்சி இது''- என்று சொன்னார் திரு. பட்நாயக்.

இதன் அடிப்படையில் சுமார் ஆயிரத்து 600 தமிழ் அகதிகள் சென்னைத் துறைமுகத்தில் இருந்து ஒரிஸ்ஸா மாநிலத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் ஆயிரம் இலங்கைத் தமிழ்க் குடும்பங்கள் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரிஸ்ஸா மாநில சட்டசபைத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது தெரிந்ததே.

இம்மாநிலத்தில் தற்போது பிரதமர் வி. பி. சிங்கின் தலைமையிலான ஜனதா தள் கட்சியே ஆட்சி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடத்தி வந்தது. [ஒ-எ]

## சுப நேரம்

10 - 3 - 1990

சனிக்கிழமை மாசி 26

சுப நேரம்:
3-24 முதல் 4-54 வரை

ராகுகாலம்:
9-24 முதல் 10-54 வரை

மாசி மகம்
நடேசரபிஷேகம்

# மினிபஸ் சேவைகள் தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு!

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

மினிபஸ்சேவையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் மினிபஸ் சேவை தொடர்பாக பல கட்டுப்பாடுகளை விதிக்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது,

இது சம்பந்தமாக கூட்டமொன்று நேற்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். மனோகரா தியேட்டரில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

யாழ். மாவட்டத்தில் சேவையிலீடுபடும் மினிபஸ்களினது உரிமையாளர்களும் மினிபஸ் சேவையில் ஈடுபடும் ஊழியர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் மினிபஸ் சேவை சம்பந்தமான அசௌகரியங்கள், பிரச்சினைகள், குறை, நிறைகள் என்பன விவாதிக்கப்பட்டன.

கூட்டத்தின் இறுதியில் மினிபஸ் சேவை தொடர்பாக பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

★ மிதிபலகையில் பிரயாணிகளை ஏற்றிச் செல்வது

(5ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் ஹெலி மீது தாக்கு!

கொழும்பு, மார்ச் 10

நேற்று முன்தினம் அம்பாறை குமண கடற்கரைக்கு மேலாகப் பறந்த ஹெலிக்கொப்டர் ஒன்றின் மீது திடீரென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதை அடுத்து ஹெலியில் இருந்த ஸ்ரீலங்கா சிப்பாய்களும் பதில் தாக்குதலை நடத்தினர்.

குமண கடற் பகுதியில் ஒரு படகில் பயணம் செய்தவர்களே ஹெலிக்கொப்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

அப்படகில் நீல நிறச் சீருடை அணிந்த சுமார் 25 பேர் வரை இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர் என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை நேற்றுமுன்தினம் கண்டி, அக்குரம்புறவில் இரண்டு கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன. [ஒ-து]



கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம். கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களையும் கூட்டத்தில் திருமதி அல்ட்ரா பாலசிங்கம், டாக்டர் அன்ரன் பாலசிங்கம், முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) ஆகியோர் உரையாற்றுவதையும், முன்னணியின் பிரதித் தலைவர் திரு. எஸ். கரிகாலன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (உ)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட் றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 யார் தூரம் இணுவில் வீதியில், 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வீ.கனகசபை இணுவில் வீதி, மானிப்பாய். (2827)

ஏழாலை உளரங்குணை என்ற இடத்தில் மூன்று பரப்புக் காணியும், அடிப்படை வசதிகள் கொண்ட கல்வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Saraswathy, Elalai North, Urangnai, Elalai. (2828)

Hyline சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் (பிலிமத்) கறுப்பு வரிச்சேவல் குஞ்சு, புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். லக்கி பாம் கவுஸ், மதவடிலேன், திருநெல்வேலி. (12020)

உடன் விற்பனைக்கு Plat Form Avery- England, Made 5 அந்தர் தராசு சி. நாகலிங்கம், ஸ்ரீ கிருஷ்ணா, பர அறிவு ஆலை, கண்டி வீதி, பளை. (2838)

Yamaha Chappy மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஏற்றது. Bala இல. 18 றக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம். (12009)

3 மாத றொடேசியன் றிச்பாக் (Rhodesion Ridge Back) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பின்வரும் விலாசத்தில் 11-3-90 ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 2 மணிவரை பார்வையிடலாம். N. N Mariampillai, No. 27, Convent, Road Lane, Jaffna. (2831)

### கோழிக்குஞ்சு விநியோகம் [Uplands Farm]

(Unsexed) தனி சிகப்பு, கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு வரி சேவல் (ohmann) பிறவுண் சேவல், வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் (14-3-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9. கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலைய அருகில்) (2837)

### நாடக நூல்கள்

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய இரண்டு நாடக நூல்கள்: கெட்டிக்காரர்கள் ரூபா. 25 முதலாம் பிள்ளை ரூபா 30 பாடசாலைப் பிள்ளைகளும் நடிப்பதற்கும், படிப்பதற்கும் ஏற்ற 19 வானொலி நாடகங்கள் எங்கும் கிடைக்கும். (2834)

### புத்தகம்

இந்திய எழுத்தாளர்களான லக்ஸ்மி, சிவசங்கரி, அனுராதாரமணன், பாலகுமாரன், ரமணிச் சந்திரன் மேத்தா, உதயமூர்த்தி, த சி.கணேசன், வரதராசன், கண்ணதாசன், சிறுவர் புத்தகங்கள், ஜோதிடம், சித்தமருத்துவம், புத்தகங்கள் வந்துள்ளன பிரதி கட்குமுந்துங்கள் நூலகங்கள், தொகையாக கொள்வனவு செய்வோர், வியாபாரிகட்கு, விசேட கழிவு. ஸ்ரீ காந் புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3488)

### தேவை

கல்பணிஸ் செய்யும் திறமை உள்ள இரண்டு பெண்பிள்ளைகள் தேவை. முருகன் பேக்கரி நீர்வேலி. (கந்தசாமி கோயில் முன்பாக) (12022)

### புத்தகம்

பங்குனி அம்புலிமாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (11927)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் கார்ட்டுகள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

ஈழத்தின் பிரபல இசைத் தென்றல் பரமேஸ் கோணேஸ் குழுவின் மன்னணிப் பாடகர் வின்ரோ மகேந்திரா ஆரம்பிக்கும் இசைக்குழுவிற்கு பாடகர்கள், பாடகிகள், இசைக்கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. இல 6, நவீன சந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம், 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். [12008]

### தேவை

அச்சக வேலைகளில் அனுபவமுள்ள எழுத்துக் கோர்க்கத் தெரிந்த வேலைகள் பயில்வதற்கான படித்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (2836)

புடவை வியாபார ஸ்தாபனத்துக்கு பெண் காசாளர் ஒருவரும், வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும். ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ். பலாலி வீதி, திருநெல்வேலி. (2820)

### மணமகள் தேவை

U. K. இல் இருந்து வரவிருக்கும் H. N. D. Engineer இற்கு மணமகள் வேண்டும். சைவ, வேளாள குல, B Sc, Accountancy செய்தவர்கள், அழகுடையவர்கள், செவ்வாய்க்குற்றமற்ற 1960 இற்கு பின் பிறந்தவர்கள் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். முகவரி 'திருவுளம்' அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேஷன் றோட், கொக்குவில். (2829)

### மணமக்கள் தேவையா?

இருபாலாரின் ஜாதகக் குறிப்புகளுடனும், விபரங்களுடனும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். K.K. நாதன், C/o R. சேகர், 5 முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (2814)

### மணப்பெண் தேவை

செவ்வாய் குற்றமுள்ள யாழ் இந்து வேளாள அரசாங்க உத்தியோகத்தருக்கு 28-35 வயதுக்கிடைப்பட்ட ஆசிரியையும், செவ்வாய் குற்றமுள்ள லண்டனால் வந்த எக்கவுண்டனுக்கு 30-35 வயதுக்குட்பட்ட பெண்ணும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2839)

### தவறிவிட்டது

மினிபஸ்சில் திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் பயணம் செய்தபோது ஒரு உடுப்புப்பெட்டி தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து திருமதி இரத்தினசிங்கம் 139, கோயில் வீதி நல்லூர் அன்றி 77, முதலியார் வீதி திருகோணமலையில் ஒப்படைக்கவும். (11967)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு காலை 9.00 மாலை 4.00 மணிக்கு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். எஸ். ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (2583)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2832)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 02-1936

உதிர்வு: 05-03-1985

திதி: 10 - 03 - 1990

அமரர்

**கணபதிப்பிள்ளை மயில்வாகனம்**

(பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம், கணேசபுரம் கிராமமுன்னேற்ற சங்கத் தலைவர்)

''உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் அன்பின்

மனைவி, பிள்ளைகள்.

கரடிப் போக்கு,
கிளிநொச்சி. (2752)

## COMPUTER PROGRMMING

Super Basic Programming
New Batch Starting on
10-03-1990 (Sat & Sun Batch)
2p.m.

**U. C. M. A. Academy**
**Hospital View**
(Hospital Junction)
ATCHUVELY.

(2751)

## 6ஆம்மாதநினைவஞ்சலி

**திரு. சந்தியாப்பிள்ளை ஏணெஸ்ற்**
(வர்த்தகர்)

அன்னையின் மடியில் 19. 12. 1940 — அழிப்பு 9. 9. 1989

ஆசைப் பப்பாவே! அன்பின் உறைவிடமே!
பாசங் கொண்ட குடும்பத்திற்கு
பரிசுப் பொருளாய் நீ இருந்தாய்!
நீங்காத நினைவலைகள் நெஞ்சை
விட்டு போகாதப்பா!
மாதம் ஆறு ஆனாலும் அழுது நெஞ்சம் ஓயாது,
ஆறுதல் கூற நீ இல்லாமல் தாய் நெஞ்சம்வாடுதப்பா.

உங்கள் பிரிவால் துயறுரும்
மனைவி பிள்ளைகள், தாய், மாமா, மாமி,
சகோதர சகோதரிகள், மச்சான், மச்சாள்மார்,
மக்கள், மருமக்கள்மார்.

சரம்பொன் மேற்கு
ஐந்தாம் புலம் வீதி,
ஊர்காவற்றுறை

(2755)

## பொது அறிவுப் போட்டி இல. 34

பரிசு பெற்றவர்கள் விபரம்

**முதலாவது பரிசு பெறுபவர்**
சி. நித்தியகலா, 'ஸ்ரீ வேலானந்த வாசம்' வியாபாரி மூலை, பருத்தித்துறை.

**இரண்டாம் பரிசு பெறுபவர்**
ஏச். உஷா, இல. 90 (42), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

**மூன்றாவது பரிசு பெறுபவர்**
வி. சசிதரன், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

**பொது அறிவுப்போட்டி இல. 34 சரியான விடைகள்**

1. 27 ஆண்டுகள் 2. பெர்லின் சுவர் 3. துருவன் 4. சீனாவில் 5. நீர் 6. பஞ்சாப் 7. ரஷ்யாவில் 8. காந்தி 9. மனம் 10. ரஷ்யாவில் 11. எகிப்து 12. சஹாரா பாலைவனம்.

## நன்றி நவிலல்

**அன்புச்செல்வம் அருந்தவராணி**
(ஹற்றன் நஷனல் வங்கி)

01-02-90 ல் நடைபெற்ற அன்புச்செல்வம் அருந்தவராணி திருமண வைபவத்தில் கலந்து கொண்டு எம்மைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வைபவத்தில் அன்பளிப்புகள் வழங்கியும், கடிதம் மூலமாகவும், தந்தி மூலமாகவும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்து நல்லாசி கூறியவர்களுக்கும், உங்கள் திருமணம் போல் எம்மை மகிழ்வித்த உறவினர்களுக்கும் அன்புகலந்த நன்றியை கூறிக்கொள்கிறோம்.

திரு. திருமதி. அன்புச் செல்வம் தம்பதிகள்

இ சின்னத்துரை(கயிலாயர்)
இருபாலை

திரு. திருமதி. சு. கனக சபை தம்பதிகள்
இளைப்பாறிய கிராமசேவையாளர்
கருகம்பனை

2749

## ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப் போல் நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள் புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி - தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

### Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

★ தங்களின் ஆங்கில பயிற்சி நிலையத்தின் மூலம் பயன் அடைந்த மாணவர்களில் நானும் ஒருவன் என பெருமையுடன் கூறுகிறேன். தங்களின் பயிற்சி புது முறையில் அமைந்து இருந்தமையால் ஆங்கிலத்தை படிப்பது மிக இலகுவாக இருந்தது. தபால் மூலமே இவ்வளவு இலகுவாக ஆங்கிலத்தை படிக்கலாம் என்பதை தங்களின் பயிற்சி நிரூபித்துவிட்டது.

செல்வன் த சண்முகநாதன்
சரசாலைமத்தி,
சாவகச்சேரி. (BTC-1982)

★ நாங்கள் பிறைட் ஸ்ரோக்கின் இங்கிலீஸ் மூலம் முன்னர் இருந்ததை விட தற்போது திறம்பட பேசக் கூடியதாக உள்ளோம். ஆங்கிலம் பேசும் வல்லமையை எமக்கு அளித்த பிறைட் பயிற்சி நிலையத்துக்கு எமது நன்றிகள்.

S. கீதா, S. சுகந்தி
632, கொக்குவில் றோட்,
துணுக்காய். (BTC-2243, 2245)

★ I am pleased to inform you namely I have got progress in English study through your English lesson. Thanks a lot for your help I am very greatful to those who Contributed to my betterment.

Miss Pathmini Kumarakuru,
Vallai Road,
Thondaimanaru.
(BTC - 2375)

★ எனக்கு தெரிந்த வரையில் ஓர் ஆசானில்லாமல் சரியாகக் கற்க முடியுமா? என்று அஞ்சுவோருக்கு சிறந்த பதில் அளிக்க வல்ல ஒரே நிறுவனம் பிறைட் ரெயினிங் சென்ரரேயாகும். தபால் மூலம் ஆங்கில கல்வியில் நம்பிக்கையற்றவளாகவே இருந்தேன் ஆனால் உங்களின் உளவியல் ரீதியான பயிற்சிகள் எனக்கு நம்பிக்கை ஊட்டியதோடு ஆங்கிலம் பேசும் வல்லமையையும் அளித்துள்ளது.

Miss M. Zeenathun Nissa,
316/1, Main Street,
Gandara. (BTC-2381)

### Method of Book Keeping (தபால் மூலம் கல்வி)

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இதற்கு மொத்த கட்டணம் ரூபா 500.00 மாத்திரமே,

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர் (புக்கீப்பர்) கணக்கு லிகிதர் (எக்கவுன்ஸ் கிளார்க்), கணக்கு பரிசோதகர் (ஓடிட் கிளாக்) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்ளுவதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் இங்கிலாந்து (லண்டன்) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப் பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப் பயிற்சியினை திறப்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினை தேடித்தரக் கூடிய சிறந்த சான்றிதழ் வழங்கப்படும்.

### SPOKEN SINHALA

சிங்களத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம். ஆனால் தவறாக பேசி விடுவோமா என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை - கவலை வேண்டாம். மூன்றே மாத காலத்தில் உளவியல் ரீதியில் மிகத் திறம்பட சிங்களம் பேசக்கூடியதாக கற்றுத் தேற முடியும். விபரங்களை அறிய விரும்புவோர் ''ஸ்போக்கன் சிங்ஹள'' என இடது பக்க தபால் மூலையில் எழுதி அனுப்பவும்.

### BUSINESS ENGLISH

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத் திட்டம் - இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விண்ணப்பப்படிவம் எப்படி தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றாட பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

### புது அறிவொளி

வெளிவந்து விட்டது. எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தக கடைகளில் கிடைக்கும். நேரடியாக பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்கட்கு பல விசேட வசதிகள் செய்துள்ளோம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:-

**BRIGHT TRAINING CENTRE**
**P. O. BOX 162,** **COLOMBO.**
SRI LANKA

[சி-3969]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டெழுத்தாளர் தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு ஆண் தட்டெழுத்தாளர் தேவை. தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கும் Stencil Cutting மொழி பெயர்க்கும் திறமை உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

20 - 03 - 1990 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

635, C/o உதயன் யாழ்ப்பாணம்.

[சி-3958]

## O/L 1990 (March) மாணவர்களுக்கு

## இலவச பயிற்சி பரீட்சை

1. பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்படும்.
2. இவ்வருடம் காலம் போதாததால் மாணவர்களுக்கு [சணிதம், விஞ்ஞானம்] இரண்டு பாடமும் மட்டுமே நடாத்தப்படும்.
   பரீட்சை பின்போடப்பட்டால் அனைத்து பாடங்களும் நடைபெறும்.
3. O/L பரீட்சைக்கு புதிய பழைய பாடத்திட்டத்தின் படி தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்றலாம்.
4. (March) 12 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்தின் காரியாலயத்தில் சுட்டெண்ணை அடையாள அட்டை காட்டி பெற்றுக் கொள்ள வேண்டும்.
5. பரீட்சைக்கான நேர அட்டவணை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

Free Exam Unit

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி [illegible] றோட்,
யாழ்ப்பாணம்.

Red - No — 12141

[சி-3953]

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★



### தேவராசா - தர்மசீலன்

காங்கேசன்துறை குரு வீதியை சேர்ந்த தேவராசா தர்மசீலன் 10 – 03 – 1990 சனிக்கிழமை தனது 18 ஆவது பிறந்த நாளை ஜேர்மனியில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அன்ரி, சித்தப்பா, மாமன்மார், மாமிமார், மச்சாள்மார், பெரிய அப்பாமார் பெரிய அம்மாமார், அண்ணன்மார், அக்காமார், தங்கச்சிமார் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[12015]

### மாசி மகம்

யாழ்ப்பாணம், மார்ச் 10 காங்கேசன்துறை - முதலி வளவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை காலை 6 மணிக்கு மாசி மகத்தை ஒட்டி விசேட அபிஷேகமும் விசேட பூசையும் நடைபெறும். (க)

### அலங்கார உற்சவம்

கொழும்பு, மார்ச் 10 கொழும்பு - கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் 8 ஆம் திகதிஆரம்பித்தது 17 ஆம் திகதி வரை நடைபெறும். (க)

### குருகுலம் கொடி தினம்

யாழ்ப்பாணம் மார்ச் 10 கிளிநொச்சி குருகுலத்தின் ஆண்டுவிழாவும் கொடிதினமும் நாளைஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணிக்கு நடைபெறும்.

தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க. துரைராசா தலைமையில் நடைபெறும், இவ் விழாவில் சர்வோதய நிவாரண புனர்வாழ்வுப் பணிப்பாளர் திரு. ஏ. ஜே. செந்தில் நாதன் பிரதம விருந்தினராகவும் கரைச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. க. வேலுப்பிள்ளை, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (க)

## இதோ!
## அஷ்டலக்ஷ்மி வெளியீடுகள்

வெளிவந்து விட்டன!

எங்கும் கிடைக்கும்!

பாலர் தமிழ் ரூபா 12/- (இரண்டாம்பதிப்பு)
(சீர்திருத்த எழுத்துக்களுடன்)

பொது அறிவு ரூபா 41/-
(Latest General Knowledge)

மூவாயிரத்துக்கும் அதிகமான விஷயங்கள் உண்டு

(சி/3435)

இன்று மாலை

## கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம்

யாழ்ப்பாணம்.

### "பெற்றோர் நிகழ்ச்சி"

[பெற்றோர் / இளைஞர்]

FIG மண்டபம் [சென் ஜோன்ஸ் ஆலய மண்டபம்]

பி.ப. 3.30 மணிமுதல் 5.30 மணிவரை

அனைவரையும்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

(2745)

## RUSH!

For Quickest Delivery
of
Your Documents, Letters, Parcels Etc
to
Any Country, Any Time

DHL WORLDWIDE EXPRESS®

337, KASTHURIAR ROAD, JAFFNA.

[C-39 43]

## உங்கள் தேவை!
## எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகளுக்கு

* * *

### "ஷப்றா" (சேவைப் பகுதி)

இல. 19. 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### முருகுப்பிள்ளை இராசதுரை

(சின்னமயில்)

தோற்றம்: 11-11-1934 மறைவு 08-02-1990

எங்கள் அன்புக்கு தெய்வமாக விளங்கிய நீங்கள் —இன்று அத் தெய்வத்துடன் சேர்ந்த மாயம் என்ன. நாட்களிங்கே நகரமறுக்கின்றன. பிள்ளைகளோ தந்தையை காணாமல் துடிக்கின்றனர். மருமக்களோ மாமனின் இனியமுகம் காணாமல் தவிக்கின்றனர். பேரக் குழந்தைகள் இங்கு விம்மி அழுகின்றனர். இந்த அன்பான இதயங்களை வாடவிட்டு பறந்ததென்ன.

10-03-90 சனிக்கிழமை இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி சபிண்டிகரணக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வியாபாரி இ. விசயறட்ணம்
(சகோதரர்கள்)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விநாயகர் வீதி.
மயிலிட்டி.

(2739)

## SPOKEN ENGLISH

பேச்சு ஆங்கிலப் பயிற்சியில் ஆயிரக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற

## BRIGHT TRAINING CENTRE

அடுத்த கல்வி முயற்சி

### கடைக்கணக்கு எழுதும் முறை
### (Method of Book - keeping)

### ★ தபால் மூலம் கல்வி ★

கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்தில் இருந்து கற்றுத் தரப்படும். இது ஆறு மாத கால டிப்ளோமா பயிற்சியாகும்.

இன்று நாட்டில் கணக்கு பதிவாளர், (Book-keeper) கணக்கு லிகிதர் (Accounts -Clerk), கணக்கு பரிசோதகர் (Audit Clerk) ஆகிய வேலைகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்வது மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கணக்கு பதிவியல் துறையில் லண்டன் (London) பட்டம் பெற்றவரும், பதினைந்து வருட கால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடன் இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்.

இப்பயிற்சியினை திறம்பட செய்து முடிப்பவர்கட்கு சிறந்த தொழிலினைத் தேடித் தரக்கூடிய சிறந்த நற்சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் சுய விலாசத்தையும் எழுதி தொடர்பு கொள்க.

METHOD OF BOOK - KEEPING

## BRIGHT TRAINING CENTRE

P. O. Box 162, Colombo.

(சி-3964)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10-01-1935

மறைவு: 20-02 1989

திதி: 11 - 03 - 1990

### திருமதி. சபாரத்தினம் மகேஸ்வரி

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்களை நாம் எக்கணமும் மறவோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவஞ்சலி 11 - 03 – 90 இல் 29, கன்னார் ஒழுங்கை, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நிகழும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் வஞ்சலியில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

29, கன்னார் ஒழுங்கை,
நல்லூர்.

(2696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கொம்பியூட்டர் கல்வி ★

COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம் 3 மாதம்

| இடம்: | ஆரம்ப திகதி, நேரம்: |
|---|---|
| 1. பருத்தித்துறை (வேலாயுதம் மகாவித்தியாலயம் முன்பாக) | 12-03-90 திங்கள் மாலை 2 மணி |
| 2. வல்வைக் கல்வி மன்றம் (வல்வெட்டித்துறை) | 14-03-90 புதன் பகல் 12 மணி |

I.B.M (Compatible) இல் பயிற்சி வழங்கப்படும் **Computer Instructor** (பெண்) பதவிக்கு **Director, Computer Centre, VVT** என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

[2738]

# Sri Meenakshii Commercial College.

(Pioneers of Commercial Education)

11 B Momsac Building,
Stanley Road, JAFFNA.

Specialists in:

**I. A. B.** (Found, Inter, Advanced)

Weekdays and Weekend Classes
London Pitmans' Examinations

**Book-keeping; Shorthand & Typewriting**

**A. A. T.** (Sri Lanka) STAGE I

**New Classes From 15 - 03 - 1990**

Also at:

**Wellknown Centre**

**Station Road, Kondavil.**

KC. Satiyamoorthy.

[C-3483]

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ச. கனகரெட்ணம்
(காலம் சென்ற தம்பி நாதபிள்ளை சண்முகம் தம்பதிகளின் புதல்வர்)

**தோற்றம்:**
24- 06-1921
**மறைவு:**
10-03-1978

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கும்

மனைவி
மேர்ஸி லீலாவதி
பிள்ளைகள்
ஷிராணி வினோவினி வரலஷ்மி வரராஜன் பிரிய தர்ஷன்.
பேரப்பிள்ளைகள்
டினேஸ் அஜந் ஷகிலா
சகோதரர்
தம்பையா துரைசிங்கம்
'சண்முகவாசா'
தேவாலய வீதி,
சங்கானை.

(2627)

# வாருங்கள் தேவனை துதிப்போம்

Assembly Of God Church
அசம்பிலி ஒவ் கோட் (தேவசபை)

**மானிப்பாய்:**

ஞாயிறு காலை 8.30 ஜெபம்/விடுதலை
ஞாயிறு மாலை 4.30 ஜெபம்/விடுதலை
ஒவ்வொரு வெள்ளியும் 8·00 மணி முதல் முழு இரவு ஜெபம்.

**அராலி கிழக்கு:**

காலை 8.30 ஜெபம்/விடுதலை.

**பண்டத்தரிப்பு: (சந்தியில்)**

18 ஆம் திகதி ஞாயிறு முதல் மாலையில் 4.30 மணி ஜெபம்/விடுதலை.

தீராத வியாதியா? பிரச்சினையா? பிசாசின் பிடியா?
இயேசு இன்று இலவச ஆத்மீக விடுதலை தருகிறார்.

(2757)

# New Science Academy

In front of
B.M.C. JAFFNA.

DAY CLASS
Mon → Fri
PHYSICS
By
மணியம் B.Sc. [Hons]

**HEAT**
9.30 — 10.30
**SOUND**
8.30 — 9.30
**ELECTRICITY**
6.30 — 7.30

ஆரம்பம்
12 - 03 - 1990

[சி-3983]

# New Science Academy

**Kannathidy Road, Jaffna.**

WEEKEND
PAPER CLASS
ZOOLOGY
By
தங்கராஜா BSc.

**EMBRYOLOGY**
ஆரம்பம்: 11 - 03 - 1990
Sunday - 3.00 p.m

Classification
Sat & Sun - 7.30 — 8.30

(சி-3981)

# பதவி வெற்றிடங்கள்

## துண்டுக்கூலி அடிப்படையில்

## தையலாளர்களுக்கான விண்ணப்பம்

எமது தையல் நிலையத்திற்கு துண்டுக்கூலி அடிப்படையில் தையலில் தேர்ச்சிபெற்றவர்களிடமிருந்து கல்வித்தகமை, அனுபவம் போன்ற விபரங்களுடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பாண், பிஸ்கட் தயாரிப்பாளர்களுக்கான

## விண்ணப்பம்

எமது சங்கப் பாண்சாலைக்கு மேற்படி வேலைகட்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுத்திகதி 23. 03. 1990 மாலை 4. 00 மணி**

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என விலாசமிடப்பட்டு கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பப் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

C/ 3973

# இதோ

# உடனடிப் பயணம்

## ★ சவூதி அரேபியா

**தொடர்பு கொண்டு 15 நாட்களில் உறுதிப்படுத்தப்பட்ட பயணம்**

✶ பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.

★ பாஸ்போட் 6 படங்களுடன் மற்றும் சான்றிதழ்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| லேபரர் | 500 | SR |
| ஜெனிற்றர் | 500 | SR |
| சுப்பவைசர் | 650 | SR |

(உணவு, இருப்பிடம் இலவசம்)

எதிர்வரும் 12ந் திகதி திங்கட்கிழமை கொழும்பில் வெளிநாட்டுப் பிரதிநிதியால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் கொழும்புக்குச் செல்லக் கூடிய ஆயத்தத்துடன் எம்மை எமது அலுவலகத்தில் சந்திக்கவும்.

18ம், 19ம் திகதிகளில் உதயனில் எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட வெற்றிடங்களிற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் 14ந் திகதி புதன் கிழமை பயணமாக இருக்கின்றனர். நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும் போது அவர்களை நேரில் சந்திக்கலாம்.

(முற்பணம் அறவிடப்படமாட்டாது)

## 156, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

**பணிப்பெண்களாகச் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.**

முஸ்லீம் பணிப்பெண்களுக்கு இலவச பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

(1 கிழமைக்குள் பயணம் மேற்கொள்ளலாம்)

● கடந்த இரண்டு மாதங்களுக்குள் எமது காரியாலயத்தாலும் எமது தலைமைக் காரியாலயத்தாலும் பயணம் மேற்கொண்டோர்.

விபரம்:-

**அல்ராஜ் அல்சாக் கொம்பனி மூலம் பயணமானவர்கள்**

1. S. பரமு — மீசாலை தெற்கு
2. V. தவபாலசிங்கம் — கைதடி வடக்கு J 0488121
3. K. கந்தையா — கைதடி J 0648523
4. S. சிவலிங்கம் — வேலணைமேற்கு H 0389223
5. K. இதயரூபன் J 0596563
6. M. P. ராஜலிங்கம்— கோண்டாவில் வடக்கு J 0534217
7. M. தனராசா — மல்லாகம் H 0029445
8. P. ஜெயசீலன் — K. K. S. J 0783437
9. V.K. ரட்ணகுமார்— யாழ்ப்பாணம் J 0691855
10. S. தியாகராஜா — யாழ்ப்பாணம் J 0691864
11. S. பார்த்திபன் — கொக்குவில் J 0677072
12. S. சதீஸ்குமார் — யாழ்ப்பாணம் J 0571975
13. S. N. நடனச் சந்திரன் — கோப்பாய் J 0773655
14. V. மங்களேஸ்வரன்— கொடிகாமம் J 0665067
15. I. சத்தியலிங்கம் — கொடிகாமம் J 0696456
16. P. கமலதாஸன் — கோண்டாவில் J 0671676
17. M. சக்திவடிவேல் — வேலணை J 0130652
18. S. கனகநாயகம் — காரைநகர் J 0787543
19. A. கணேசன் — கொழும்பு J 0450014
20. J. ஜோன்சன் — கொக்குவில் J 0794731
21. K.M. பரம்சோதி — கொடிகாமம் H 0315667
22. R. ரவீந்திரன் — மயிலிட்டி J 0625733
23. K. சிறீகரன் — புலோலி J 0673457
24. K. கந்தசாமி — மட்டுவில் J 0659248
25. S. கதிர்காமலிங்கம்— யாழ்ப்பாணம் J0795484
26. K. தம்பிராஜா — ,, J 0794359
27. T. பாலசூரியன் — ,, J 0176912
28. மகேந்திரராஜா — திருநெல்வேலி J 0699249
29. J.C.R. தங்கராஜா— கொழும்பு J 0699885
30. P. சுரேன்திரா — புத்தளம் J 0479985
31. S. பிரேமகுமார் — மட்டக்களப்பு H 0261745
32. S. கந்தசாமி — கச்சேரி J 0400392
33. A. சிவபாதம் — K. K. S. J 0635095
34. V. செல்வராஜா — கொடிகாமம் J 0638877
35. K. ரமணன் — மயிலிட்டி J 0815232
36. K. உருத்திரநாதன்— கொடிகாமம் J 0815229
37. N. பரமேஸ்வரன் — சாவகச்சேரி J 0815229
38. S. தவசீலன் — யாழ்ப்பாணம் J 0801902

[சி-3984]

# 93ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

## ஐயம்பிள்ளை தவராசா (தவம்)

(யாழ் / கொக்குவில் இந்துக் கல்லூரி ஊழியன்)

| அவதரிப்பு: | அழிப்பு: |
|---|---|
| 14 - 10 - 1968 | 07 - 12 -1989 |

தெய்வக் குழந்தையே தவராசா!
அன்புக் கடலே தவமே!
பொது நலவாதியே சமுதாய சீர்திருத்த சிற்பியே!
அநியாமாக அறியாமையில் அழிக்கப்பட்டாயே!
மனம் ஆற முடியாது மண்ணில் புரளுகின்றோம்
கண்ணீர் சிந்துகின்றோம்.

தவம்! யாழ்/பருத்தித்துறை வீதியிலே சிந்திய உன் செந்நீரெல்லாம் தங்கத்தமிழ்ச் செடிக்குத் தண்ணீராம்.

மறைவுச் செய்தியை நாட்டுச் சூழ் நிலை காரணமாக அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். 10 - 03 - 90 (சனிக்கிழமை) கீரிமலையில் நடைபெறும் கிரியைகளிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

இங்ஙனம்:
**பெற்றோர், சகோதரர் சகோதரிகள்.**

கோண்டாவில் வடக்கு,
மத்திய கிராம முன்னேற்றச் சங்கம்,
கோண்டாவில்.

(2746)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வேலுப்பிள்ளை கந்தையா

(கந்தமுத்து)
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் வட்டுக்கோட்டை)

**தோற்றம்:- 3-11-1925**
**மறைவு:- 26-2-1986**
**திதி:- 10-3-1990**

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் துயருறும்

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

திருமதி பாக்கியலட்சுமி கந்தையா (கந்தமுத்து)
''யோக வாசம்''
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(2741)

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. வல்லிபுரம் - பொன்னுத்துரை

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

10. 03. 1990

''எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீங்கள் மறைந்து ஏழாண்டுகள் - ஆனாலும் இன்றும் எம் ஒவ்வொருவருடனும் ஒன்றிணைந்து வாழ்கிறீர்கள். எங்கள் குடும்பம் சீர்பெற்று வாழ வானில் இருந்தே வாழ்த்துகிறீர்கள்'' ஆன்மசாந்திக்காக பிரார்த்திக்கும்

**மனைவி மக்கள்**
**மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

'வசந்தகிரி'
மயிலிட்டி வடக்கு
மயிலிட்டி

(11966)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்

## வெளிவாரிப் பட்டமாணிப பரீட்சைகள்

கல்வியாண்டு 1990/91

பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

★ **ஆரம்பம்: 31 — 03 — 90** ✶

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**கலைமாணி (B. A) விஞ்ஞானமாணி (B. Sc) வர்த்தகமாணி (B. Com)**
(புள்ளி விபரவியல்)

விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

● பல்கலைக்கழக பதிவுகள் யாவும் நிறுவனத்தால் செய்து தரப்படும்.

பதிவாளர்:-

# ASTAN INSTITUTE

**156/1, Hospital Road, JAFFNA.**

(... சங்கரப்பிள்ளை ... 2ஆம் மாடி.)

[சி-3468]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வடக்கு, கிழக்கில்

# நிர்வாக அதிகாரிகள் தெரிவு செய்வதற்கு விசேட பரீட்சை!

யாழ்ப்பாணம், மார்ச் 10
வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் நிர்வாக அதிகாரிகள் பற்றாக் குறையைப் போக்க விசேட பொதுப் பரீட்சை ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் உத்தரவையடுத்து இந்தப் பொதுப் பரீட்சை விரைவில் நடாத்தப்படவிருக்கிறது.

கொழும்பு ஜனாதிபதிசெயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காணிப் பங்கீடு சம்பந்தமான மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் பேசிய ஜனாதிபதி, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணியற்றவர்களுக்கு காணி கிடைக்க உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அச்சமயம் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், ''வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாக அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் வேலைகள் யாவும் தடைப்படுகிறது. போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தி நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்ய வேண்டும்'' என்று கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு பொதுப் பரீட்சை ஒன்றை நடத்தி, நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்து, வெற்றிடங்களை நிரப்பி, வேலைகள் ஒழுங்காக நடக்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். [உ-3]

## வரதருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கலாம் என மாகாண சபை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

எனினும் திரு. வரதராஜப் பெருமாளின் வாசஸ்தலத்துக்கு வழங்கப்பட்டிருந்த உள்ளூர் தொலைபேசி இணைப்பு தொடர்ந்து இயங்குகிறது. (உ)

## மேலும் 19ஆயி...

பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப்பணம் வழங்கப்பட இருக்கிறது.

இதற்கான காசோலைகள் அரசாங்க செயலகத்தால் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஓ-3)


**New Science Academy**
Kannathidy Road
Jaffna

Botany A/L
திரு. செல்வநேசன்
90 A/L -PAPER
Sat } Sun } 9 . 30 - 10.30
91 A/L
உடற்றொழிலியலும், இழையவியலும்
Sat } Sun } 1 . 30 - 2.30
(சி/3982)


## பதவியை விட்டு ஓடுபவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்

### இப்படிக் கூறுகிறார் ரஞ்சன்

கொழும்பு, மார்ச் 10
தமதுபதவியை விட்டுவிட்டு ஓடும் அரச அதிகாரிகள் தங்கள் நடவடிக்கைக்குப் பதில் சொல்லியாகவேண்டும். அன்றேல் அவர்கள் பதவி விலகியவர்களாகக் கருதப்படுவர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலையில் அரச அதிகாரிகள், செயலகளர்கள் உட்படப் பலர் ஓடுவதாகக் கூறப்படுவது பற்றியே கேள்வி எழுப்பப்பட்டது.

ஏனைய சில கேள்வி, பதில்கள் வருமாறு:-

கேள்வி: திரு. வரதராஜப் பெருமாளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் வாங்கப் பட்டுவிட்டதா?

அமைச்சர்: இன்னும் இல்லை. பாதுகாப்பை விலக்கிக்கொள்வது தொடர்பாக மத்திய அரசின் அனுமதி பெற்றபின்னர் தொலைபேசி மூலம் அறிவிப்பதாக இந்தியத் தூதர் மெஹ்ரோத்ரா எனக்கு அறிவித்திருக்கிறார்.

கேள்வி: வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் கொழும்புக்கு அழைக்கப்பட்டார். இதன் அர்த்தம்மாகாணசபைகலைக்கப்படப்போகின்றது என்று எடுத்துக்கொள்ளலாமா?.

அமைச்சர்: இல்லை. நாம் அரசமைப்பு விவகாரங்களைத்தான் பார்த்து வருகிறோம். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கச்சேரி மற்றும் திணைக்களங்கள் இயங்குகின்றன அங்கு ஒரு பிரச்சினையும் இல்லை.

கேள்வி: யாரின் கட்டுப்பாடு அங்கு நிலவுகிறது?

அமைச்சர்: கச்சேரிகளுக்குப் பொறுப்பாக அரச அதிபர்கள் இருக்கிறார்கள்.

கேள்வி: முதலமைச்சரின் அனுமதியுடன்தான் அரச அதிகாரிகள் போவதாகச் சொல்லப்படுகிறதே.

அமைச்சர்: அங்கு முதலமைச்சரேகிடையாது. எந்த முதலமைச்சரிடம் அவர்கள் அனுமதி பெற்றனர்? (ஓ-எ)

## வர்த்தக...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
10 மணிவரை கடைகள் திறக்க வேண்டும் என்று கூறு சுற்று நிருபம் யாழ். தொழில் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்தது.

அதில் உள்ள விடயங்களில் உள்ள சில மயக்க நிலையை நீக்கும் வகையில் விடயங்களை அறிந்துவர கொழும்புக்கு அதிகாரி ஒருவர் சென்றுள்ளார்.

அவர் திரும்பியதும் உதவித் தொழில் ஆணையாளர் இந்த விடயம் குறித்து இவ்வாரம் அறிவிப்பார்.

தொழில் திணைக்கள உதவித் தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் இதனைத் தெரிவித்தார். (இ-3)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



இராசலிங்கம் பஞ்சலிங்கம்
( பஞ்சன் )

ஈசன் அருளிய திருமலர் 15 - 5 - 1969
அரக்கன் அழித்த உதிமலர் 08 - 02 - 1990

இமயத்திற்கும் எட்டாத எங்கள் அன்பின் பஞ்சாமதி இழந்து பித்தராய் எங்களை புலம்பித் தவிக்க விட்டு எங்கே ஐயா போனாய்? உன்னை இழந்து உன்னை நினைத்து கண்ணீர் எல்லாம் நெந்நீராய் உன் வரலாறு கூறி நிற்கும் ஐயா.

இடம் ;-
மாயெம்பதி
சண்டிலிப்பாய்.

உனது பிரிவால் வாடும்
அன்பு மாமி, ராஜி அக்கா

(2750)


## யாழ் அரச அதிபரின் முதல் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ் அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற பின் திரு. அன்ரன் அல்பிரட் முதல் கூட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை கூட்டுகிறார்.

தமிழ்-சிங்கள புதுவருட நிகழ்ச்சிகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு செய்யவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர் (இ- 3 )

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10
இலங்கை வங்கியின் விசா கார்ட் திட்டம் குறித்து விசேட கருத்தரங்கு ஒன்று இன்று பகல் மூன்று மணிக்கு ஹோட்டல் ஞானம்ஸில்நடைபெறவிருக்கிறது.

வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் இக் கருத்தரங்கில் கலந்துரையாற்றுவார், ( உ 3 )

## இலங்கையில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தின் போது இலங்கைப் படையினர் சுடாமலும், இரு தரப்பினரும் ஆளை ஆள் அடையாளங் கண்டு தவிர்த்துக் கொள்வது பற்றிய நடைமுறைகளும் அப்போது இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஆராயப்பட்டன.

விடுதலைப் புலிகள் ஜனநாயக பாதைக்கு வந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் தவறாக இருதரப்பினரும் விளங்கிக் கொள்வதைத் தவிர்ப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது— இப்படிக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ[

## மினிபஸ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தவிர்க்கப்படல் வேண்டும்.

★ எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மினிபஸ்களில் சிக்னல் லைட், பிறேக் லயிட் என்பன வீதி ஒழுங்குப்படி செயற்படக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

★ பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் என்பனவற்றிற்கு முன்பாக 15 மையில் வேகத்திற்கு மேலும் நகர பகுதிகளில் 30 மைல் வேகத்திற்கு. மேலுலும் மினிபஸ்கள் செலுத்தப்படக் கூடாது.

★ எந்தச் சந்தப்பத்திலும் மினிபஸ்கள் 60 மைல் வேகத்திற்கு மேல் செலுத்தப்படக் கூடாது.

★ மினிபஸ்ஸில் பயணம் செய்யும் பயணி யாரேனும் தகாத முறையில் நடந்தால் அவரை அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமிலோ அல்லது எதிர்ப்படும் பேராளியிடமோ ஒப்படைக்கப்பட வேண்டும்.

★ மினிபஸ் சாரதி மதுபோதையில் வாகனம் ஓட்டுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

- இந்தக் கட்டுப்பாடுகளை மீறி ஓடும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-9)

## ஈழத்தமி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
றைய சில கப்பல்களையும் தமிழ்நாட்டில் நங்கூரமிடவோ—

அல்லது அவர்களை தமிழகத்தில் இறங்கவோ—

அனுமதி அளிக்க தமிழக அரசு மறுத்துவிட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் அனுமதி மறுக்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை, அதில் பயணம் செய்த ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை உறுதிப்படுத்தக்கூடிய சுயாதீனமான செய்திகள் எதுவும் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

திருகோணமலையிலிருந்து புறப்பட்ட ''ஹர்ஷவர்த்தன்'', ''திப்பு சுல்தான்'' ஆகிய இரு கப்பல்களிலும் சென்றவர்களுக்கே தமிழகத்தில் இறங்க அனுமதி மறுக்கப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஆனாலும் ஈழத் தமிழர்களை ஏற்றி வந்த கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டதை இந்திய மத்திய அரசின் தகவல், ஒலிபரப்புத்துறை அமைச்சர் பி. உபேந்திரா ஊர்ஜிதப்படுத்தினார்.

''அந்தக் கப்பலில் வந்தவர்கள் உண்மையிலேயே அகதிகள் தானா? அல்லது ஈ. பி. ஆர். எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களா? இந்த விடயம் தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது'' — என்று அமைச்சர் சொன்னார்.

இலங்கையில் இருந்து வரும் அகதிகளால் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் பற்றி முதலமைச்சர் கருணாநிதி தன்னிடம் தெரிவித்திருப்பதாகவும்—

இதுபற்றி தான் பிரதமர் வி. பி. சிங்குடனும் பேசவிருப்பதாகவும்—

அமைச்சர் உபேந்திரா [illegible] களிடம் தெரிவித்தார் (உ-எ)

★யாழ் பல்கலைக்கழகத்தின்

# வைத்திய பீடத்துக்கு ரூ.3 கோடி நிதி உதவி!

## பிரிட்டிஷ் கவுன்ஸில் வழங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு பிரிட்டிஷ் கவுன்சில் மூன்றுகோடி ரூபாவை வழங்கவிருக்கிறது.

யாழ் வைத்திய பீடத்திற்கு கடந்தவாரம் விஜயஞ்செய்த பிரிட்டிஷ் கவுன்சில் உயர் அதிகாரிகள் இந்த உதவியை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர். மரவள்ளியில் இருந்து குளுக்கோஸ் தயாரிக்கும் ஆரம்ப திட்டத்துக்கு 150 லட்சம் ரூபாவும், உயிரியல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு 150 இலட்ச ரூபாவும் என இந்நிதி பகிர்ந்து வழங்கப்பட இருக்கின்றன.

அடுத்த மாதமளவில் இந் நிதியுதவி வந்துசேருமென வைத்தியபீட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [ஓ-3)

# வாழப்பாடி கைது 15 நாள் விளக்க மறியல்

சென்னை, மார்ச் 10
தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவரும் திண்டிவனம் தொகுதி எம். பியுமான திரு. வாழப்பாடி இராமமூர்த்தி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மதுரையில் கைது செய்யப்பட்ட அவர் பின்னர் சேலம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை 15நாள் விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

சேலத்தில் உள்ள பல்லவர் சமூக நலன் அறக்கட்டளை நிதியை மோசடி செய்ததாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து வாழப்பாடி இராமமூர்த்தி மீது குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாக தமிழக பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## ரயில் மறிப்பு போர்; தமிழகத்தில் 3,000பேர் கைது

சென்னை, மார்ச் 10
தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் நடத்தப்போவதாக அறிவித்திருக்கும் ரயில் மறிப்புப் போராட்டத்தை அடுத்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை தமிழகம் முழுவதும் பொலீஸார் நேற்றுக் கைது செய்து காவலில் வைத்தனர்.

இந்த ரயில் மறிப்புப் போராட்டம் நேற்று நள்ளிரவு முதல் ஆரம்பமாகவிருந்தது.

மறைமலைநகர் ரயில் நிலையத்தை ''காமராஜர் நகர்'' ரயில் நிலையம் என மாற்ற வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதில் அதிக தீவிரம் காட்டி வந்த தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுக் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## மினிவான்கள் அபகரிப்பு!

திருகோணமலை, மார்ச் 10
திருகோணமலையில் இரு மினிவான்கள் நேற்று முன்தினம் பறித்துச் செல்லப்பட்டன.

உள்துறைமுக வீதியில் வைத்து துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான மினிவான் ஒன்று ஆயுதபாணிகளால் பறிக்கப்பட்டது.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான மினிவான் ஒன்றும் ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டது (ஓ-150)

## ஷப்றா, வங்கி அணிகள் கிரிக்கெட் ஆட்டம் நாளை

ஷப்றா கிரிக்கெட் அணிக்கும், ஹட்டன் நஷனல் வங்கி, யாழ். கிளை, இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை ஆகியவற்றின் கூட்டு கிரிக்கெட் அணிக்கும் இடையிலான வருடாந்த சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் நாளை நடைபெறும்.

நாளை காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும். (உ)

## ஆற்காடு வீராசாமி ராஜினாமா!

சென்னை, மார்ச் 10
தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் பதவியில் இருந்து திரு. ஆற்காடு வீராசாமி நேற்று இராஜினாமாச் செய்தார்.

உடல்நலக் குறைவு காரணமாக பதவி விலகுவதாக திரு. வீராசாமி தனது இராஜினாமாக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

முதலமைச்சர் கருணாநிதியின்சிபார்சின் பேரில் ஆளுநர் அலெக்ஸாண்டர் இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்டார்.

மின்சாரத்துறை அமைச்சையும் தானே ஏற்றுக்கொள்வதாக திரு. கருணாநிதி அறிவித்தார்.

கடந்த நவம்பர் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் தி. மு. க. படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து ஆற்காடு வீராசாமி இராஜினாமாச் செய்ததும்—

பின்னர் அதனை அவர் வாபஸ் வாங்கியதும் தெரிந்ததே. (உ-எ)

## தெற்கில் 28 பேர் கைது

கொழும்பு, மார்ச்10
பாதுகாப்புப்படையினர் நேற்று நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது தீவிரவாத சந்தேகநபர்கள் எனக் கருதப்படும் 20பேர்மொனறாகலையிலும் எட்டுப்பேர் அநுராதபுரத்திலும் கைது செய்யப்பட்டனர்.

சரணடைந்த தீவிரவாதசந்தேக நபர் ஒருவர் கொடுத்த தகவலைத்தொடர்ந்து படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

அநுராதபுத்தில் தீவிரவாதிகளின் பதுங்கிடம் ஒன்றிலிருந்து ஆயுதங்கள் மற்றும் பிரசாரங்களைப் படையினர் கைப்பற்றியதாகக் கூறப்பட்டது. [உ10]


1939-1989 50 YEARS

## விநியோக நிலையங்கள் தேவை

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எஸ் - லோன் ரக பி.வி.சி. குழாய்கள் மற்றும் இணைப்புகளுக்கான தேவையை சமாளிக்குமுகமாக வடமத்திய மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் எமது விநியோக நிலையங்களைத் திறக்கவுள்ளோம்.

மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து எமது விற்பனை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்:
எஸ் - லோன் லங்கா
(பிறைவேட்) லிமிட்டெட்
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2
T. P. 685252, 693716 - 9

S-lon



The No.1 PVC pipe.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மணிகளே!

தகிக்கும் வெய்யிலில் இருந்து உங்களைப் பாதுகாக்க,
எடுப்பான தொப்பி ஒன்றை அணிந்து கொள்ளலாமே,
மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 200 திருக்குறளை எம்மிடம் சேர்ப்பித்து தொப்பி ஒன்றை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

-மில்க்வைற், யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

10-03-1990 சனிக்கிழமை

நேரம்... பணம்... சிரமம்
விரயத்தைத் தவிர்க்க
எதுவித அழுக்கையும் அகற்றிடப் பளிச்சிடும் வெண்மையைத் தரும்
**மில்க்வைற் பார் சோப்**
இரு அளவுகளில் கிடைக்கின்றது
ரூபா 20/-, ரூபா 10/-
5 மேலுறைகளை அனுப்பி யோகாசன விளக்கப் புத்தகத்தையும், படங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

### சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து சென்று

# சட்டவிரோதமான செயல்களில் தமிழ் தேசிய இராணுவத்தினர்!

## பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 10

தமிழ் தேசிய இராணுவத்தை விட்டு ஓடிய தமிழ் இளைஞர்கள் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு துணைஅமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றக்கூட்டத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நுவரெலியாவில் நேற்று முன்தினம் நகைக்கடை ஒன்றில் 28 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது.

கொள்ளையடித்து விட்டு ஆயுதங்களுடன் ஓடிய இரண்டுபேரைப் பொதுமக்கள் கலைத்தனர். அப்போது கொள்ளையர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

கொள்ளையர்களில் ஒருவரைப் பொலீசார் மடக்கிப் பிடித்தனர்.

பொலீஸார் நடத்தியவிசாரணையில் அந்த நபர் தமிழ்த் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்திருக்கிறது. அந்த நபரின் பெயர் நாராயணன் விஜயபாலன். வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்தவர்.

இதேபோன்று நாட்டின் பலபகுதிகளில் சிறுசிறு குழுக்களாக இயங்கி சட்டவிரோத செயல்களில் தமிழ் தேசிய இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால் அறிமுகம் இல்லாதவர்களையும் சந்தேகத்துக்கு இடமானவர்களையும் விடுதிகளிலோ, வீடுகளிலோ தங்க அனுமதிக்கவேண்டாம் என்றும் அமைச்சர் ரஞ்சன் எச்சரித்துள்ளார். (உ-ஓ)

### தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான

## பயனில்லாத யுத்தத்தால் ரூ 5,000 கோடி வீணாகியது

### என்கிறார் அமைச்சர் ரஞ்சன்

கொழும்பு, மார்ச் 10

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக இலங்கை அரசுப் படைகள் பிரயோசனமில்லாத யுத்தம் ஒன்றை நடத்தினர். இதற்காக 5 ஆயிரம் கோடி ரூபா பணத்தை அரசு செலவு செய்திருக்கிறது.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் இயங்கி வந்த இராணுவக் கூட்டு நடவடிக்கைச் செயற்திட்டக் குழுவைக் கலைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்தது.

அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அமைச்சர் மேலும்சொன்னதாவது;

இலங்கையின் சகல ஆயுதப் படைகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பொலீஸ் நிலையத்துக்கும் நூறு பொலீஸார் வீதம் நியமிக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இராணுவம் பாசறைகளுக்குள் வைக்கப்பட்டிருக்கும் — என்றார். (ஓ-எ)

## உதவி அரச அதிபர்களுக்கு இரண்டு பதவிப் பெயர்கள்

யழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்கு இரண்டு பதவிப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்ட ஒரு சுற்று நிருபத்திலேயே இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் அதே பதவிப்பெயருடன் மத்திய அரசுடன் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும். மாகாணசபையுடன் பிரதேச செயலாளர் என்ற பதவிப் பெயருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

உதவி அரச அதிபரின் அலுவலகத்தில் உள்ள பெயர்ப் பலகையில் இரண்டு பதவிப் பெயர்களும் பொறிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-3)

## எல்லா ரயில் நிலையங்களுக்கும் பொதிகளை அனுப்ப முடியும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொழும்பு - காங்கேசன் துறை இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து எல்லா ரயில் நிலையங்களுக்குமான பொதிகளை ஏற்குமாறு ரயில் நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் யாழ் -தேவி ரயில் சேவை நடைபெற்றபோது கொழும்புக்கு அனுப்புவதற்கான பொதிகள் மட்டுமே ஏற்கப்பட்டன.

நேற்று அனுப்பப்பட்ட ஒரு சுற்று நிருபத்தின் படி சகல ரயில் நிலையங்களிலும் காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணிவரை பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஆரியகுளம், புல்லுக்குளம் நவீனமயப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பழுதடைந்த நிலையில் உள்ள ஆரியகுளம், புல்லுக்குளம் ஆகியன நவீனமயப்படுத்தப்பட உள்ளன.

இந்த இரண்டு குளங்களிலும் உள்ள அசுத்தங்களை அகற்றி அலை ஆழமாக்கப்பட்டு நவீனமயப்படுத்தும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சிறிய வள்ளங்களில்சவாரி செய்யும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. (ஒ-3)

## சென்றலைட்ஸ்

### விளையாட்டுக் கழகம்

### அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்: - 11-3-1990 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: - காலை 9 மணி
இடம்: - யாழ் மத்திய கல்லூரி

தற்போதைய மாணவர்கள், பழைய மாணவர்கள், நண்பர்கள், அனுதாபிகள், நலன் விரும்பிகள் எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
(11970)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-03-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## லொறியில் கொள்ளை

கொழும்பு. மார்ச் 10

திருகோணமலை நகருக்கு அருகில் மட்டிக்களிப் பகுதியில் நேற்று லொறி ஒன்று கொள்ளையிடப்பட்டது.

ரூபா 60 ஆயிரமும் அபகரிக்கப்பட்டதாக அறியவந்தது. ( உ )

## இடிஅமினை விஞ்சிய படைகள்!

கொழும்பு, மார்ச் 10

இடி அமின் படைகளிலும் பார்க்க மோசமாக கொலைகாரப் படைகள் தென்பகுதியில் இயங்குகின்றன.

சுதந்திரக்கட்சி எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்கா இப்படித் தெரிவித்தார்.

கொழும்பு றோட்டறிக் கழகம் நடத்திய நண்பகல் விருந்துபசாரத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். (உ - எ)

## 'காணி உறுதி' ஆய்வரங்கு

யாழ்ப்பாணம் மார்ச் 10

இளையவனின் காணி உறுதி சிறுகதை தொகுப்பு நூல் ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை (11-3-90) வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு வேலணைவடக்கு கிராமசேவகர் திரு. கே. சிவகுலசிங்கம் தலைமையில் நூல் ஆய்வரங்கம் நடைபெறும். வரவேற்புரை கந்தையா சோதிதாஸன் நிகழ்த்துவார். (க-10-51)

### சுகாதாரத்துக்குப் பங்கம்:

## தேநீர்க் கடைகள், பேக்கரிகள் லைசென்ஸுகள் ரத்தாகும்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

சூழல் மாசுபடும் வகையில் இயங்கும் தேநீர்க் கடைகள், இறைச்சிக்கடைகள், பேக்கரிகள் ஆகியவற்றின் லைசென்ஸுகள் ரத்துச்செய்யப்படும்,

இப்படிக் கூறினார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சூழல் மாசுபடும் வகையில் இயங்கக்கூடாது என்றும் மற்றும் சில நிபந்தனைகளையும் இந்த வியாபார நிலையங்களுக்கு விரைவில் தெரிவிப்போம்.

அந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத விடத்து அவற்றின்லைசென்ஸுகள்ரத்துச்செய்யப்படும் என்றார். (ஓ-எ)

## திருமலையில் 2 நாட்களில் 5 கொள்ளைச் சம்பவங்கள்

திருகோணமலை, மார்ச் 10

கடந்த இருநாட்களில் திருகோணமலையில் ஐந்து இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கடந்த செவ்வாய் இரவு மடத்தடியில் ஒரு வீட்டிலும், புதன்காலை பத்து மணிக்கு கிறீன் வீதியில் உள்ள ஒரு வீட்டிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அன்றுமாலைநகரில்வைத்து வீதியால் சென்றுகொண்டிருந்த பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டது.

பிரதான வீதியில் உள்ள டாக்டர் ஒருவரின்வீட்டிலும், நகரின் மத்தியில் உள்ள மற்றொருவரின் வீட்டிலும் இதே தினத்தில் கொள்ளையடிக்கப்பட்டது. (உ-150)

## சார்க் மாநாடு மாலைதீவில் நடைபெறலாம்

### வங்காளப் பத்திரிகையில் செய்தி

சார்க் உச்சிமாநாடு மாலைதீவில் நடைபெறலாம் என்று வங்காளப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகூப் கான் விஜயம் செய்தார்.

அப்போது மாலைதீவில் உச்சி மாநாட்டை இவ்வாண்டு நடத்த வேண்டும் என்று பங்களாதேஷ் அரசு பாகிஸ்தான் அமைச்சரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது.

புதன்கிழமை டாக்காசென்ற பாகிஸ்தான் அமைச்சர் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்ய இருப்பது தெரிந்ததே. (ஓ-எ)

### லிபியா நிராகரிப்பு

லிபியா மீண்டும் இரசாயன ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் குற்றச் சாட்டை லிபிய ஜனாதிபதி மும்மார் கடாபி நிராகரித்து விட்டார். (எ)

## OBITUARY

### BENJAMIN

Basil Joseph Benjamin (Diesel and Motors, Colombo) beloved husband of Dr. Mrs. Nirmala Benjamin (Colombo North Medical College), Loving father of Shobana Arjuna and Aravindan, Loving son of Mr. M. Benjamin and late Mrs. Benjamin, 83, Main Street, Jaffna, Son-in-law of late Mr. S. Srinivasan and Mrs. S. Srinivasan (Uduvil), Brother of Zelina, Thilaga, Kamala and Shanti, Brother-in law of Dr R. P. Ariyanayagam, A St J. Segarajasinghe, B Nagalingam, C. E. Xavier, Mrs Kalanithi Narendran, Mahendravarman, Miss Malini, Mrs. S. Ravindran, Vijayavarman and Ravivarman died under Tragic Circumstances funeral Saturday 10th March No. 9, Fifty Seventh Lane, Wellawatte, Colombo-6.

Informent :
Mrs. K. Nagalingam

(11972)

## அரசாங்கம் மறுப்பு

பயங்கரவாதத்திற்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை அடக்கவும் தனியான இராணுவப் பிரிவு ஒன்றை அரசு அமைக்கும் என்று வெளியான செய்திகளை அரசாங்கம் மறுத்துள்ளது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயலக்சுமி கைலைநாதன்

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி விஜயலக்சுமி கைலைநாதன் அவர்கள் 1990-03-05 ந் திகதி காலமானார்கள். அன்னார் கைலைநாதன் (பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி கோபிகாவின் அன்புத் தாயாரும், காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும், மைலிட்டி தெற்கைச் சேர்ந்த அண்ணாமலை, காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும், S. P. S. ரான்ஸ்போட் சேர்விசைச் சேர்ந்த சிவனேசன், சிவலிங்கம், சுத்தானந்தன், சர்வானந்தன், விவேகானந்தன், நடராசா (ஜேர்மன்), சிவபாதம் (ஜேர்மன்), செல்வநாயகம் (சுவிஸ்). சிவராசா (கனடா), சோமசுந்தரம் (சுவிஸ்), திருமதி சரோஜினிதேவி சிவநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னம்மாவின் பெறாமகளும், பிரகாஷ் ரான்ஸ் போட் சேர்விஸ் காலஞ்சென்ற சந்திரசேகரம் குலசிங்கம், கந்தசாமி, சரஸ்வதி, சத்தியதேவி சரோஜினிதேவி (சுவிஸ்), சகுந்தலாதேவி (சுவிஸ்), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1990-03-10 ந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல. 44, செம்பியன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தவர்கள்.

இல. 44, செம்பியன் லேன்,
கொக்குவில்.
(11965)

### சபாபதிப்பிள்ளை நல்லையா

வல்வெட்டி கொத்தங்கலட்டியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை நல்லையா 9-3-90 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். இவர் சிலோன் டிரேடிங் கம்பனி [Ceylon Trading Company] முன்னாள் உத்தியோகத்தரும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தவராசா செல்வராசா [பிரான்ஸ்], சித்திரா, கௌரி, வசந்தா, விஜயா ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. சின்னையா, காலம் சென்ற திருமதி சின்னையாவின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-3-90 வெள்ளிக்கிழமையன்று குடும்ப மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர் மற்றும் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி நல்லையாவும், பிள்ளைகளும்.

கொத்தங்கலட்டி,
வல்வெட்டி.
[12023]

### அழகம்மா சதாசிவம்

அழகம்மா சதாசிவம் காலமாகிவிட்டார். இவர் உரும்பராய் தெற்கு காலஞ்சென்ற Guard சதாசிவத்தின் அன்பு மனைவியும் மகாலிங்கம், அஞ்சலிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமநாதனின் (சேவையர்) அன்பு மாமியுமாவார். ஈமக்கிரியைகள் உரும்பராய் தெற்கில் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இராசரத்தினம்
சகோதரர்.

உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.
[12025[

### திருமதி தில்லைநாயகி பாலசுப்பிரமணியம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தில்லைநாயகி பாலசுப்பிரமணியம் 09-03-1990 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (முன்னாள் பருத்தித்துறை சிவன் கோயில் முகாமையாளர்) அன்பு மனைவியும், சுந்தரவல்லி, கலாவல்லி (பிரான்ஸ்), அமிர்தவல்லி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராஜா (பருத்தித்துறை சிவன் கோயில் முகாமையாளர்), சுரேந்திரன் (பிரான்ஸ்), இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தாரணி, தர்சினி, சிவசங்கர், சாந்தரூபன், வர்ஷினி, சுவந்தினி, சுபோதினி, சாருஜன், வியாஷன், துளசி ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 10-03-1990 சனிக்கிழமை மாலை 4-00 மணியளவில் ஆனைக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றாரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. இரவீந்திரன்

அதிகார் வளவு,
ஆனைக்கோட்டை.
[11973]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKYLINES**
For Quality Photostat Copying,
Electronic Typewriting
and
Roneo works
281 B, CLOCK TOWER ROAD,
JAFFNA.



தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்
வேலைகளுக்கு
**ஸ்கைலைன்ஸ்**
281 பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

## கருத்துக் கலசம்

மயூரா

### வாடா மல்லிகை

மல்லிகை—

அரும்பாகி, மொட்டாகி, மலர்ந்து பூவாகி, மணம் வீசி, ஈற்றில் வாடிப் போகும் மலர்.

ஆனால் அதே பெயரில் மலர்ந்து, கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக வாடா மல்லிகையாக திகழ்ந்து வருகிறது ஒரு மலர்.

அந்த வாடாமலரின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு இதழ் இன்று மலர்கிறது,

அந்த மலர் — 'மல்லிகை'

ஒரு சிற்றிலக்கிய ஏடு — அதுவும் விற்பனைக்காக விரசத்தை நாடாத ஒரு தரமான இலக்கிய ஏடு — இருபத்தி ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவது என்றால் அது ஒரு பெரும் சாதனைதான்,

மதவெறி, சாதிப்பாகுபாடு, வர்க்க சுரண்டல் போன்ற சேறு, சகதிகளில் மூழ்கிக் கிடந்த ஒரு சமூகத்திலிருந்து செந்தாமரையாய் பூத்த மலர் மல்லிகை.

இந்த மண்ணின் மலராகவும் மணம் பரப்பும் மலர் அது.

கால் நூற்றாண்டு காலம் — ஓர் சிற்றிலக்கிய ஏட்டுக்கு இது ஒரு பெரும் யுகம்.

எத்தனையோ சிரமங்கள், நெருக்கடிகள், அவலங்கள் வந்தபோதிலும் இலக்கிய தார்மீக பலத்தின் மீது அசையாத நம்பிக்கையோடு பற்றுறுதியுடன் இந்த யுகத்தைக் கடந்திருக்கிறது மல்லிகை.

''இலக்கியம் விடுதலையைப் பெற்றுத்தந்ததில்லை; ஆனால் எந்த விடுதலையும் இலக்கியம் இல்லாமல் பிறந்ததுமில்லை. அந்த வகையில் முழு மனுக்குலத்தின் விடுதலைக்கான இலட்சியத்தைத் தேடித்தான் நான் தேடல் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன்'' — என்று ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார் மல்லிகை ஆசிரியர்.

அவரது தேடலின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு இது.

அவர் தேடல் தொடரட்டும்! அதன் பயன் சமூகத்துக்குக் கிடைக்கட்டும்!

# மாணவரது ஆளுமையை வளர்க்க ஆசிரியருக்கு உதவும் உளவியல் முறை

உளவியலும் கல்வியும் மிகப்பரந்த ஆய்வுத்துறைகளாக விளங்குகின்றன. தேடலும் மெய்ப்பொருளைக் கண்டறியும் தேவையும் தொடர்கின்றன.

மிக இளமை நிலையில் உள்ள உளவியல் ஆய்வுகளை அடியொற்றி மிகவும் பாரிய சமூக முடிவுகளை எடுக்க முடியுமா? என்ற கேள்விகளும் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன.

வேகமாகப் பெருக்கெடுக்கும் அறிவு, மிகவும் சிக்கல் அடைந்து செல்லும் சமூகம் என்பவற்றின் மத்தியிற் கற்றலையும் கற்பித்தலையும் எளிமைப்படுத்தவும் வினைத்திறன்படுத்தவும் கல்வி உளவியலறிவு இயக்கபூர்வமான துணையாகி வருதலை மறுக்க முடியாது.

கல்வி வளர்ச்சிச்செயல் முறையின் அச்சாணியாகவும் உள்ளார்ந்த தொடர்புடையவராகவும் ஆசிரியர் கருதப்படுகின்றார்.

கல்வி வளர்ச்சிக்குத் துணை செய்யும் அனைத்து ஆற்றல்களையும் தொடர்புகளையும் வரன் முறையாக ஆராயும் இயலாக உளவியல் விளங்குகின்றமையாற் கல்வி உளவியல் இன்றி ஆசிரியத்துவம் முழுமையடைய மாட்டாது.

கல்வியின் வரையறை இன்று மிகவும் விரிவு பெற்றுச் செல்கின்றது. கல்வி என்பது ஒரு சில பாடங்களுடன் மட்டும் கட்டுப்பட்டிருந்த வரையறை உடைந்து விட்டது.

மனிதனதும் சமூகத்தினதும் முழு வளர்ச்சிக்குமான, என்றுமே விட்டகல முடியாத தொடர்சாதனம் கல்வி என்று உணரப்படுகிறது. இந்த முழுநிறைவான செயற்பாட்டில் எவ்வகையிலும் அந்நியப்படாது நிற்கும் ஆற்றலைக் கல்வி உளவியல் வழங்குகின்றது.

கல்வி உளவியலும் குழந்தை உளவியலும் உளவியலின் ஒன்று இணைந்த கூறுகள்.

குழந்தையின் இயல்பு, உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகியவற்றின் விருத்தி, சமூக இசைவாக்கம், உளமொழி இயல் அழகுணர் திறன், கவர்ச்சிகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்தம் மனநலம் என்பவற்றை ஆசிரியர் அறிந்திருக்கும் பொழுது சிறாரை அறிவுடன் சங்கமிக்கச் செய்யும் பணி வெகு எளிதாகி விடுகின்றது.

குழந்தைகளுக்குரிய கல்வி அவர்களின் உடலியக்க நடத்தைகளைத் தழுவிச் செல்ல வேண்டியுள்ளது.

குழந்தையின் மனநலம், சமூக இசைவாக்கம் என்பவை உடலியக்கங்களுடன் இடையறாத தொடர்பு கொண்டிருக்கும்.

உடலியக்க முதிர்ச்சியும் கல்வியும் குழந்தை நிலையில் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

குழந்தைக் கல்வியானது மனவெழுச்சி முதிர்ச்சியுடன் இணைந்து செல்ல வேண்டும். உடலும் உள்ளமும் கிளர்ந்தெழும்நிலை மனவெழுச்சி என்று கொள்ளப்படும்.

கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகள் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்கும்.

'மனவெழுச்சியோடு இணைந்த கற்றல்' என்ற கோட்பாடும் உளவியலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சி, அன்பு, வியப்பு என்ற மனவெழுச்சிகளோடு இணைந்த கற்பித்தல் அதிக வினைத்திறன் கொண்டு இருக்கும் என்பதை ஆய்வுகள் நிலைநிறுத்தியுள்ளன.

சிறுவர்களின் இரகசிய மொழி அவர்களின் உளவியல் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய தொடர்பு ஊடகம் என்பதை உணர வேண்டும்.

#### அவிந்த எரிமலை

மாணவர்களது பிரச்சினைகளை ஆசிரியர் அறிந்து கொள்வதற்கு உளவியலறிவு வாய்ப்புத் தருகின்றது. சில பிரச்சினைகள் வெளிப்படையாகத் துலங்கும். சில பிரச்சினைகள் அவிந்த எரிமலை போன்று மாணவரது உள்ளத்திலே குமைந்த வண்ணம் இருக்கும்.

மாணவரது நடத்தைகளை நுட்பமாக நோக்கும் பொழுது பிரச்சினையின் தெறிப்புக்களை ஓரளவாயினும் அறிந்து கொள்ள முடியும்.

நாணமும் கூச்சமும் உளப் பிரச்சினைகளைப் பிறிதொரு வகையிலே வெளிப்படுத்துகின்றன.

உளத்தாக்கங்களால் நிகழ்ந்த சிறுமையுணர்ச்சியும், தாழ்வுணர்ச்சியும் நாணம், கூச்சம் முதலியவற்றை ஏற்படுத்துகின்றன.

தாழ்வுணர்ச்சி ஓரளவு காணப்படுதல் இயல்பானதாயினும், மிகையான தாழ்வுணர்ச்சியே பிரச்சினையின் வெளிப்பாடாகும்.

இச்சந்தர்ப்பத்தில் மாணவருக்குத் தன்னம்பிக்கை தரும் பணிகளை ஆசிரியர் மேற்கொள்ளல் வேண்டும்.

உடல், உளம் சார்ந்த நோய்களும் சிறாரின் உளப் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன. அதீதசோம்பல், இணைப்புறு பயம், நரம்புத்தளர்ச்சி, பதகளிப்பு, பொதுவான நியமங்களை விட்டு வழுவுதல் போன்றவை மாணவரிடத்துக் காணப்படுமாயின் அவை கல்வியின் முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்யும்.

இவை நலிவடைந்த சமூக பொருளாதாரக் கோலங்களின் தவிர்க்க முடியாத வெளிப்பாடாக இருப்பதனால் ஆசிரியர் மட்டும் தனித்து அத்தகைய பிள்ளைகளுக்கு உதவுதல் கடினமாகின்றது.

எல்லா மனிதரும் எந்த வயதிலும் கற்கும் திறன் உடையோராய்க் காணப்படுகின்றனர்.

**பயிலுநர் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் என்றெல்லாம் நாட்டில் பரவலாக ஆசிரிய நியமனம் தற்சமயம் இடம்பெற்று வருகின்றது.**

**இதன் மூலம் தொழில் வாய்ப்பு மட்டும் கிடைக்கவில்லை; வளமிக்க எதிர்கால சந்ததியினரைக் கட்டி எழுப்பும் பொறுப்பும் தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்பதை ஆசிரியர் நியமனம் பெறுவோர் நினைவில் கொள்ள வேண்டும்.**

**''ஆசிரியரும் உளவியலும்'' என்ற தனது நூலில் கலாநிதி சபா. ஜெயராசா இத்துறையில் ஆசிரிய சமுதாயத்துக்குத் தேவையான பல அரிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.**



**அந்த நூலின் சில பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.**

நீண்ட பரிணாம வளர்ச்சியின் காரணமாக மனிதனிடத்துப் படிமலர்ச்சி கொண்டுள்ள மூளையின் அமைப்பு கற்றலுக்கு உறுதுணையாகின்றது.

மனித உழைப்பும், கற்றலும் வேறு பிரிக்கமுடியாதவை.

உழைப்பில் நிகழ்ச்சி வளர்ச்சி, கற்றலில் நிகழ்ந்த வளர்ச்சியாயிற்று. உழைப்பின் கல்வி வடிவமாக எழுந்த மொழியானது கற்றலை மேலும் விசைப்படுத்த உதவுகின்றது.

#### கல்வி இலக்குகள்

அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உளவியக்க ஆட்சி என்றவாறு கல்வி இலக்குகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இந்த ஆட்சிகளை ஆசிரியர்கள் மேலும் விரிவுபடுத்தல் வேண்டும்.

சமூகம் பற்றிய உணர்வு மாணவனுக்கு எவ்வளவு தூரம் ஏற்பட்டுள்ளது, பயனுள்ள ஒரு சமூகப்பிரசையாக அவன் மாற்றப்பட்டுள்ளானா என்பது கல்வி இலக்கிலும் மதிப்பீட்டிலும் இடம் பெறல் வேண்டும்.

இந்தப் பண்புகளுக்கு அழுத்தங் கொடுக்கப்படாமையின் அவலங்களை இன்றைய யதார்த்த வாழ்விலே காண முடிகின்றது.

#### நல்லாசிரியன்

மாணவர் எதிர்நோக்கும் பல்வகையான பிரச்சினைகளுக்கு நண்பனாயும் நல்லாசிரியராயும் நின்று அறிவுரை பகர்தலும் வழிகாட்டலும் இன்றைய தேவைகளாக உள்ளன.

மாணவரது ஆற்றல், விருப்பம், கவர்ச்சி, இசைவாக்கம் என்பவற்றை அறிந்து எதிர்கால வாழ்க்கைக்கு நல்லாற்றுப்படுத்தல், வழிகாட்டல் எனப்படும்.

சிக்கல் நிரம்பிய சமூகத் தொழிற்பாடுகள், கல்விச் செயல் முறைகள் என்பவற்றுக்கு இடையே அலைபட்டு நிற்கும் மாணவனுக்கு வழிகாட்டும் ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

கல்விக்கு வழிகாட்டல், தொழிலைத் தெரிந்து எடுப்பதற்கு வழிகாட்டல், சமூகப் பண்பினனாவதற்கு வழிகாட்டல் என்றவாறு வழிகாட்டலை வகைப்படுத்தலாம்.

#### ஆளுமை முழுமையடைய...

மாணவரது ஆளுமையை முழு நிறைவாக வளர்ப்பதை உறுதி செய்வதில் உளவியலும் ஆசிரியத்துவமும் பங்கு கொள்ளவேண்டி உள்ளன.

ஆளுமை என்பது பல்வேறு பண்புக் கூறுகளைக்கொண்ட ஒன்றிணைந்த முழுமையினை விளக்கும் ஒரு எண்ணக் கருவாகும்.

அறிவுசார் நடத்தைகள், எழுச்சிசார் நடத்தைகள், மனோபாவங்கள், அனுபவங்கள், பழக்கவழக்கங்கள், பற்றுக்கள், அழகுணர் திறன் என்ற பல்வேறு பண்புகளின் அடிப்படையில் ஒருவனிடத்துக் காணப்படும் தனித்துவமாகிய ஆளுமை முழு நிறைவாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

ஆளுமைப்பண்புக்கூறுகளில் யாதாயினும் ஒருசிலபண்புகள் வளர்தலும் வேறு சில பண்புகள் மழுங்கடிக்கப்படுதலும் பொருத்தமான நடவடிக்கைகளாக மாட்டாது.

ஆளுமையின் ஒருங்கிணைக்கப்பட்ட பண்புக் கூறுகளை வளர்ப்பதையே நவீன கல்வி தனக்குரிய தலைமைப்பணியாகக் கொள்கின்றது.

நன்றி:
'ஆசிரியரும் உளவியலும்'

- கலாநிதி சபா. ஜெயராசா -

## உள்ளன்பு கொள் மனிதா!

[ஆதி செஞ்சுருட்டி]

மானிடச் சட்டையுள் ஞான வொளியென
வாழும் பரம்பொருளை - மனிதா
நானது வென்று தியானிப்ப தேமிக
நல்ல உபாசனையாம்!

இனிய நல்லமு தூறிடும் தூய
இதயக் கடலினிலே; - அன்புக்
கனிய வுண்டதைக் கண்டு களிப்பவர்
காலத்தை வென்றிடுவார் - இந்த
ஞாலத்தை வென்றிடுவார்!

அருமை யாகிய ஆயுளை ஆணவம்
அள்ளி விழுங்காமல்
பெருமை யாகிய பேரின்பமாதல்
பிறப்புரிமை மனிதா!

வண்டு தேனி எறும்புகள் போலே
வளம் பெற மாந்தர் குலம்
தொண்டு செய்து சுதந்திர வெற்றி
துலங்கிட வாழ் மனிதா!

கருதி வந்த கடமையைச் செய்து
களிப்புறு நன் மனிதா!
சுருதி கூடிய பாட்டென வாழ்வு
சுகந்தரும் பார் மனிதா!

தின்று தூங்கித் தெருச் சண்டை போட்டுத்
திரிதல் அழகாமோ?
ஒன்று கூடி உலகினில் வாழ்ந்திட
உள்ளன்பு கொள் மனிதா!

— கவியோகி சுத்தானந்த பாரதியார் —

கவியோகி சுத்தானந்த பாரதியார் தனது 93 ஆவது வயதில் கடந்த புதன்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரின் கவிதைகள் சில இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இக் கவிதைகள் கவியோகியை ஆசிரியராகக் கொண்டு வெளியான 'பாரதசக்தி' மாத சஞ்சிகையின் 1946 ஆம் ஆண்டு அக்டோபர் இதழில் பிரசுரமானவையாகும்.

# சிறந்த விமர்சகராக சில உத்திகள்

ஓர் இலக்கியப் படைப்பை விமர்சனம் செய்ய முனையும் ஒரு விமர்சகன், அது ஒரு விமர்சனம் என்ற எல்லைக்கு உட்படாமல் அதுவும் ஒரு படைப்புபோல் தோன்றும் படிச் செய்வதே நல்ல விமரிசன வேலை.

படைப்பின் நயங்களும், சுவைகளும் வெறுமையாக மெச்சப்படாமல், மெச்சும் சொற்களில் நயமும், புதுமையும், சுலைவீச்சும், ஆழமான ரசிகமன உட்கிடக்கையும் வெளிப்படும்படி விமர்சிப்பதே சிறந்த விமர்சன உத்தி.

வாசக ரசனைக்கே அகப்படாத வெகு நுட்பமான, மனஆழ, இலக்கிய நயங்களும் விமர்சகனின் எழுதுகோலில் சிக்குவது உண்டு.

விமர்சகன்மேல் கோபம் கொள்ளத்தூண்டும் வகையிலும் சில கடுமையான பதங்களை விமர்சகர்கள் தாட்சண்யமின்றிச் சில சமயங்களில் உபயோகித்து விடுவதுண்டு.

இந்தக் கறாரும் கடுமையும் கூட சில உண்மைகளைத் துணிவாகக் கூறும் முறையோ என்று எண்ணவைத்து விடுவதுண்டு.

ஒரு படைப்பிலக்கியவாதியின் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் காலமாற்றத்தை ஒட்டியோ, அவர் தம் சொந்த எண்ணப்போக்கை ஒட்டியோ மாறுபடலாம். முரண்பாடுகள் இல்லாமல் வாழ்தல், எழுதுதல் எல்லோருக்கும் சாத்தியமல்ல; அவசியமுமல்ல.

ரசனை ஒருமை சிலருக்குத்தான் வாய்க்கும். ஒத்த ரசனை உடையவர்களாக எல்லாரும் இருக்கவேண்டும் என்று ஒரு வாசகன் எதிர்பார்க்கமாட்டான்.

முற்றாக பழைமையை மறுத்த புதுமை இல்லை. பழைமையில் இருந்து கிடைத்ததுதான் புதுமை என்பது பல அறிஞர்களின் ஒருமித்த கருத்து.

பழைமை விரும்பிகளாக இருப்பதைவிட பழமையில் சிறந்த அம்சங்களை ஏற்கும் புதுமைப் போற்றிகளாக இருப்பதேமேல்.

#### நல்ல விமர்சனம்

நல்ல விமர்சனம் என்பது காரசாரமான வாதப் பிரதிவாதங்களை எழுப்பவல்லது. பொதுவாக விமர்சனங்கள் படைப்பு குறித்து மிகையாக சிலாகிப்பதைவிடக் குறை காணும் நோக்கிலேயே எழுதப்படுகின்றன.

காய்தல், உவத்தல் இன்றி ஆய்தலே சிறந்த விமர்சனம்.

நிறையச் சொற்களைக் கொண்டு ஒரு சிறிய விஷயத்தை விமரிசித்தலும் ஒரு பிரச்சினையைப் பலவித கோணத்தில் ஆய்தலும் நல்ல விமர்சகனின் திறமைக்குச் சான்று.

படைப்பாளியை விட விமர்சகன் விசாலமான படிப்பு அறிவும் சொல்திறனும் கொண்டவனாக இருத்தல் அவசியம். படைப்பாளியின் ஆக்கம் எந்த நோக்கில் எந்த உட்கருத்தில் எழுதப்பட்டதோ அதையே விமர்சகனும் ஆய்ந்துணர்தல் வேண்டும்.

விமர்சனத்தைப் படித்துவிட்டு படைப்பாக்கத்தைப் படிக்க ஆவல்கொள்ளும் அளவுக்கு விமர்சனம் அமைதல் வேண்டும்.

காரணமின்றி மெச்சுவதோ காரணமின்றித் தூற்றுவதோ நல்ல விமர்சன நெறியாகாது.

விமர்சனம் என்பதும் ஒரு படைப்பிற்குரிய கருத்தோட்டங்களைக் கொண்டதாகவும், படிக்க ஆவல்கொள்ளும் அளவுக்குச் சிறந்த சொற்பிரயோகங்களும், நடையழகும் கொண்டதாகவும் அமைதல் வேண்டும்.

நிறையப் படைப்புக்களைப் படித்த அனுபவமும், நல்ல ரசனை உள்ளமும் ஒரு விமரிசகனுக்கு அத்தியாவசியமானது.

★

- ச. உமாபதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவியின் அதிஷ்டம்



'அம்மா போயிட்டு வாறன்' —தாயிடம் சொல்லிக்கொண்டு சைக்கிளில் ஏறிப் புறப்பட்டாள் கீதா.

வாசல் கேற்றைத் தாண்டும்போது, தாய் சறோ கூப்பிட்டபடி பின்னால் வரவே சைக்கிளின் வேகத்தைக் குறைத்து, 'என்னம்மா' என்றாள்.

'தேவியும் உன்னோடு கோயிலுக்கு வாறனென்று சொன்னவள். சைக்கிளை விட்டிட்டு தேவியையும் கூட்டிக்கொண்டு நடந்து போ பிள்ளை.'

தாய் சொல்லிமுடிப்பதற்குள் கீதாவுக்குக் கோபம் பொங்கியது.

'தேவி என்னோடு வாறதென்றால் நான் கோயிலுக்குப் போகமாட்டன்' என்றாள் உறுதியாக.

'ஏன் தேவி உன்னோடு வந்தால் என்ன குறைஞ்சு போயிடும்'

'அம்மா! அன்றைக்கு உடுப்புவாங்க ரவுணுக்குப் போகேக்கை தேவியைக் கூட்டிக்கொண்டுபோய் எனக்கு ஒரே அவமானமாய்ப்போச்சு. கொஞ்சம் நாகரீகமாய் டிரெஸ் பண்ணிக்கொண்டு வரத்தெரியாது. வயதுபோன ஆள்மாதிரி சீலை ஒன்றைக் கட்டி, இழுத்துப் போர்த்துக்கொண்டு, தலைமயிரை நுனிவரையும் பின்னிவிட்டுக்கொண்டு சுத்தப் பட்டிக்காடு மாதிரி வந்தாள். என்ரை ஃபிரெண்ட்ஸ் எல்லாரும் தேவியை ஆரென்று கேட்க, சொந்தக்காரி என்று சொல்லவே வெட்கமாயிருந்தது. இன்றைக்கும் தேவியைக் கூட்டிக்கொண்டு போனால் என்ரை மானம் போயிடும். நான் போறன். ஏதாவது சொல்லிச் சமாளியுங்கோ'

சொல்லிவிட்டு சைக்கிளை வேகமாகச் செலுத்தினாள் கீதா. ஒரேயொரு பிள்ளையென்று நினைச்சபடி நடக்கவிட்டால் நாகரீகம் நாகரீகம் என்று அலைகிறாளே' என்று சறோ கவலைப்பட்டுக் கொண்டிருக்க, தேவி வந்துவிட்டாள்.

மாமி கீதா எங்கே' என்று கேட்டுக்கொண்டு வந்தவளுக்கு உண்மையைச் சொன்னால் வேதனைப்படுவாளென்று எண்ணிய சறோ பொய் சொல்லத் தீர்மானித்தாள்.

'பிள்ளை அவள் கோயிலுக்கு போகுமுன் தன் சிநேகிதியிட்டை புத்தகமொன்று வாங்கவேணுமென்று அவசரமாய் போயிட்டாள், குறைநினைக்காதே'

அதுக்கென்ன மாமி அதைப்பற்றிப் பரவாயில்லை. எத்தினை பேர் கோயிலுக்குப் போய்க்கொண்டிருப்பினம் அவர்களோடு சேர்ந்து போறன்.' அமைதியாய்க் கூறிவிட்டு நடந்தாள் தேவி.

வழியில் யாருடைய துணையையும் அவள் எதிர்பார்க்கவில்லை. அபிராமி அந்தாதிப் பாடலொன்றை மென்மையாய் உச்சரித்தபடி கோயிலை அடைந்தாள். பூசை ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. மனம் கசிந்துருகி அம்பிகையை வழிபட்டு, ஆலயத்தை மும்முறை வலம் வந்து வணங்கிவிட்டு வெளியில் வந்தாள்.

கீதாவும் அவளது நண்பிகளும் சைக்கிளைப் பிடித்தபடி சுவாரஸ்யமாய் சிரித்துக் கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்டாள் தேவி. தேவியைக் கண்டதும் கீதா முகத்தை வேறுபுறம் திருப்பினாள். 'கோயிலுக்கு வரும்போது என்னை விட்டுவிட்டு வந்ததிற்காகத்தான் கீதா சங்கடப்பட்டு முகத்தைத் திருப்புகிறாளோ' என்று எண்ணிய தேவி கீதாவை நோக்கிச் சென்றாள்.

'கீதா என்னை விட்டிட்டு வந்ததிற்காகத்தான் கீதா சங்கடப்பட்டு முகத்தைத் திருப்புகிறாளோ' என்று எண்ணிய தேவி கீதாவை நோக்கிச் சென்றாள்.

கீதா, என்னை விட்டிட்டு வந்ததிற்காகக் கவலைப்படுகிறீர் போலிருக்கு. நான் குறைநினைக்கவில்லை. அதைப்பற்றி யோசியாதையும் என்ன' என்று அன்பாகக் கூறிவிட்டு நடக்கத் தொடங்கினாள். ஏளனச் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு கீதாவும் சைக்கிளில் புறப்பட்டாள்.

இரவு ஏழுமணி. பொருளாதாரப் புத்தகத்தை விரித்து வைத்துப் படித்துக்கொண்டிருந்தாள் கீதா. தன் நாகரீகப் போக்குக்கு கம்பஸில் நுழைந்திட்டால் கலகலப்பாயிருக்கும் என்று நினைத்துப் படிப்பிலே கொஞ்சம் கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தாள்.

முதல் தடவை எடுத்த உயர்தரப்பரீட்சை முடிவு கம்பஸிற்குப் போவதற்குச் சாதகமாய் அமையவில்லை, மீண்டும் அப்பரீட்சை எடுப்பதற்குச் சிரமப்பட்டுப் படிக்கிறாள்.

படித்துக் கொண்டிருக்கும்போது கோயிலில் நடந்த சம்பவம் நினைவுக்கு வரவே கீதாவுக்கு அடக்க முடியாமற் சிரிப்பு வந்து விட்டது.

'புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்து தாயிடம் சென்றாள். இரவுச்சாப்பாட்டிற்குப் பிட்டு அவித்துக்கொண்டிருந்த சறோ 'படிப்பு முடிஞ்சுதே கீதா என்றாள்.

'இல்லை அம்மா. தேவியைப் பற்றி நினைக்கச் சிரிப்பு வந்திட்டுது கோயிலில் தேவி என்னைக் கண்டிட்டு வந்து சொல்கிறாள்.

'தன்னை விட்டிட்டு வந்ததுக்காக நான் கவலைப்படுகிறன் போலிருக்காம். தான் குறை நினைக்கேலையாம். அதை நினைக்கச் சிரிப்புத்தான் வருகுதம்மா' என்றாள்.

சிரிக்காதை பிள்ளை. நீ செய்தது பெரிய பிழை. பாவம் தேவி. தகப்பனும் இறந்திட்டார். தாயும் நோயாளி. சொந்தமென்று பக்கத்திலிருக்கிற நாங்கள் தானே அந்தப் பிள்ளைக்கு உதவவேணும்' என்று சறோ சற்று உரக்கச் சொன்னது பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த சிவானந்தனின் காதுகளில் விழுந்து விட்டது.

'என்ன பிரச்சனை' என்று கேட்டவாறு சமயலறைக்கு வந்தார். சறோ நடந்த விஷயங்களைக் கணவர் சிவானந்தனிடம் கூறினாள்.

எதற்கும் அவசரப்பட்டு ஆத்திரப்படாமல் ஆராய்ந்து பார்க்கிற சிவானந்தன் மகளிடம் அமைதியாய்க் கேட்டார்.

'தேவி என்னுடைய தங்கச்சியின் மகள். உனக்கு மச்சாள். அவளோடு சேர்ந்து போறதில் உனக்கென்ன பிரச்சினை'

'அப்பா! இப்ப எல்லாப் பெண்களுமே ஃபாஷனாய் உடை உடுத்து அலங்கரித்துக் கொண்டு திரிகிறார்கள். நாங்கள் மட்டும் பட்டிக்காட்டுத் தனமாய்ப் போனால் பகிடி பண்ண மாட்டார்களே. இப்பிடித் தலைவாரவேணும் உடை அணியவேணும் என்று தேவிக்குச் சொல்லிக் கொடுத்துப் பார்த்தன். ஆனால் அவள் அதெல்லாம் கூடாதென்று என்னையே திருத்திறாள். அதாலை தான் எனக்குத் தேவியைப் பிடிக்காமல் போயிட்டுது' என்றாள் கீதா.

'நீ சொல்வதிலும் நியாயம் இருக்குத்தான். காலத்துக்கேற்றதாய் கொஞ்சம் நாகரீகமாய் இருக்கத்தான் வேணும். ஆனால் அதிலையே மூழ்கிப் போயிடக் கூடாது. சினிமாவுக்குக் கடைத்தெருவுக்குப் போகிறபோது நாகரீகமாய்ப் போகலாம். ஆனால் கோயிலுக்கு உந்தப் பஞ்சாபி, ஜீன்ஸ், மிடி எல்லாம் போட்டுக்கொண்டு போகக் கூடாது. எங்களது பண்பாட்டின் அடையாளச் சின்னங்களாய் எப்பவும் நிலைத்து நிற்பவை கோயில்கள். இனி நீயும் கோயிலுக்குப்போகிறபொழுது சேலை கட்டி அடக்கமாய்ப் போக வேணும் கீதா' – உறுதியாய்க் கூறினார் சிவானந்தன்.

'அப்பா, ஸாரி கூட அழகாகக் கட்டலாம். ஆனால் தேவி அதையும் பழையகாலப் பெண்களைப் போல அநாகரீகமாய்க் கட்டுவாள். இப்பவெல்லாம் வெளிநாடுகளுக்குப் போய் வருகிறதால் அனேகமான ஆண்கள் நாகரீகமாயிருக்கிற பெண்களைத் தான் கல்யாணம் செய்ய விரும்புவார்கள். இப்பிடியே பட்டிக்காட்டுப் பெண்ணாய் இருந்தாளென்றால் தேவியை யாருமே கல்யாணம் செய்யவும் சம்மதிக்கமாட்டினம்' என்று கூறிவிட்டுப் படிப்பதற்குச் சென்றாள் கீதா.

மகள் கூறியது தந்தையைச் சிந்திக்க வைத்தது. தேவிக்குத் தகப்பனுமில்லை. அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கிற பொறுப்பைத் தேவியின் தாய் தன் அண்ணன் சிவானந்தனிடமே ஒப்படைத்திருந்தாள். அவரும் தேவிக்கு மாப்பிள்ளை தேடும் முயற்சியில் ஏற்கெனவே ஈடுபட்டிருக்கிறார்.

'கல்யாணம் பொருந்தி, தேவியைப் 'பெண்' பார்க்க வந்தால் கீதா சொல்கிற மாதிரி நாகரீகமில்லாத பெண் என்று சம்மதிக்காமலும் போயிடுவினம். எதுக்கும் 'பெண்' பார்க்க வரும் போது கீதாவைக் கொண்டு தேவிக்கு நாகரீகமாய்ச் சேலை உடுத்து அலங்காரம் செய்யவேண்டும்' என்று தீர்மானித்தார் சிவானந்தன்.

தான் படாடோபமின்றி அடக்கமாயிருப்பதால் கீதாவுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பதைத் தேவி புரிந்து கொண்டதால் அவளிடமிருந்து ஒதுங்கியே இருக்கிறாள்.

ஆனால் சறோ மாமியிடம் தேவிக்குப் பிரியம் அதிகம். வீட்டில் தன் வேலைகள் முடிந்துவிட்டால், கீதா ரியூஷனுக்குப் போயிருக்கிற நேரங்களில் சறோ மாமிக்கும் வீட்டு வேலைகளில் உதவி செய்வாள்.

ஒரு நாள் சிவானந்தனின் பழைய நண்பரொருவர் சிவானந்தன் வீட்டுக்கு வந்தார். 'உங்களுக்குத் தெரிந்த இடங்களில் நல்ல மாப்பிள்ளை இருந்தால் சொல்லுங்கள்' என்று கதையோடு கதையாக நண்பரிடம் சொல்லி வைத்தார் சிவானந்தன், ஒரு வாரம் கழித்து, அந்த நண்பர் ஒரு ஜாதகக் குறிப்பும் அனுப்பி கடிதமும் எழுதினார்.

இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருக்கும் தன் மகன் வந்திருப்பதாகவும், அவனுக்குத் திருமணம்செய்து பெண்ணையும் அவனுடன் அனுப்பப் போவதாகவும், சிவானந்தனின் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புவதாயும் எழுதியிருந்தார்.

தேவிக்கு மாப்பிள்ளை தேடிப்போக கீதாவை விரும்பி வருகிறார்களே என்று திகைத்தாலும், ''வலிய வருகிற சம்பந்தத்தை செய்து வைப்போமே'' என்று எண்ணியவராய் கீதாவின் ஜாதகத்தோடு பொருத்தம் பார்ப்பித்தார். ஜாதகங்கள் பொருந்தவே அதனை நண்பருக்கு அறிவித்தார்.

மறுநாளே மகனையும் கூட்டிக் கொண்டு பெண் பார்க்க வந்துவிட்டார் நண்பர். கீதா நவநாகரீகமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். 'பொப்' தலையும், உதட்டுச் சாயமும், ஸ்ரிக்கர் பொட்டுமாய் நின்ற தன்னை 'இங்கிலாந்து மாப்பிள்ளை நன்றாக ரசிக்கப் போகிறார்' என்றே எதிர்பார்த்தாள். ஆனால்... நடந்தது வேறு.

கீதாவைப் பார்த்ததும் மாப்பிள்ளையின் முகம் மாறிவிட்டது. கேள்விக்குறியோடு தந்தையைப் பார்ப்பதும், வெளியில் பார்ப்பதுமாக இருப்புக்கொள்ளாமல் தவித்தார்.

மாப்பிள்ளையின் தந்தைக்கும் குழப்பமாகிவிட்டது. மகனுக்கு ஏற்ற பெண் என்று தீர்மானித்துத்தானே பெண் பார்க்க அழைத்து வந்தார். ஏதோ தன் கணக்கில் தவறு நேர்ந்துவிட்டதை உணர்ந்து, சிறிது நேரம் சமாளித்து உரையாடிவிட்டு மகனுடன் வீட்டுக்குத் திரும்பினார். ஒன்றையும் புரிந்துகொள்ளாமல் கீதா கற்பனைகளில் மிதந்தாள்.

சிவானந்தனுடன் வெளிப்படையாய்க் கதைத்துக் குழப்பத்தைத் தீர்க்க எண்ணி, மறுநாளே நண்பர் சிவானந்தனின் வீட்டுக்கு வந்தார்.

''சிவா! நீங்கள் என்னை மன்னிக்கவேணும். முதலே எல்லா விஷயங்களையும் விபரமாய்க் கதைத்திருந்தால் இப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்காது. என்னுடைய மகன் எங்கடை பழைய பண்பாடுகளை பாரம்பரியங்களை மதிக்கிறவன். உயர்கல்வி பெறுவதற்காக இங்கிலாந்துக்குப் போனாலும் எங்களது சம்பிரதாயங்களை எள்ளளவும் மீறாமல் உடும்புப்பிடியாய்ப் பிடித்துக்கொள்பவன்.

நான் முதல் முறை உங்கள் வீட்டுக்கு வந்தபோது, திருநீற்றுப்பூச்சும், சாந்துப் பொட்டும், முழுப்பாவாடை சட்டையுமாய் அழகான ஒரு பெண் நிற்பதைக் கண்டு, அவள்தான் உங்களது மகளாயிருக்குமென்று நானாகத் தீர்மானித்திட்டன்'' என்று நண்பர் சொன்னதும் சிவானந்தனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

''ஓ... அன்றைக்கு நீங்கள் கண்டது என் சகோதரியின் மகள் தேவி. உங்கள் மகன் எதிர்பார்க்கிற அம்சமெல்லாம் நிறைந்தவள். நான் குறுகிய மனம் உள்ளவனில்லை. இப்பகூட நீங்கள் சம்மதித்தால் நானே முன்னின்று தேவியை உங்கள் மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறன்''—

சிவானந்தனின் வேண்டுகோளுக்கு நண்பர் சம்மதித்து, மகனுக்கு விஷயத்தைப் புரியவைத்து, ஜாதகப் பொருத்தம் பார்த்து, அடுத்த முகூர்த்தத்திலேயே தேவியின் திருமணம் சிறப்பாக நடந்தது.

இப்போது கீதாவுக்கு தேவியின் மீது அபாரமான மதிப்பு ஏற்பட்டுவிட்டது. கீதாவின் தாய் சறோவுக்கு, தேவியின் அதிஷ்டத்தைப் புகழ்ந்து புகழ்ந்து இன்னும் வாய் ஓயவில்லை.

''அதிகம் சீதனமில்லாமல் இப்படி ஒரு வாழ்க்கை தேவிக்குக் கிடைத்தது அந்த அம்மனுடைய அருள்தான்'' என்றாள் சறோ.

''அம்மா நானும் தேவியைப் போல் ஒழுங்காய் கோயிலுக்குப் போனனான் தானே''– என்று கீதா கேட்கும்போது பரிதாபமாயிருந்தது.

''போனாய்தான் ஆனால் தேவியைப் போல் பயபக்தியோடை மனமுருகி வழிபட்டிருக்கமாட்டாய். மற்றவர்களின் உடுப்பு நடப்பைப் பார்த்து, சிநேகிதிகளோடு அரட்டை அடித்துக்கொண்டு நின்றிருப்பாய். இனியாவது பக்தியாய் அடக்கமாய் அம்மனை வழிபடு உனக்கும் அம்மனது அருள் கிடைக்கும்''.

(யாவும் கற்பனை)

**- எம். இந்திராணி -**

சஞ்சீவி சிறுகதை

## பொது அறிவுப்போட்டி இல. 35

1. 'மனித கம்பியூட்டர்' என உலகநாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்டவர்? ... ... ... ... பி. டி. உஷா / திருமதி சகுந்தலாதேவி
2. ஒரு நதியின் கரையில் உள்ள நகரம்? ... ... ... .. கெய்ரோ / பீக்கிங்
3. இமயமலையில் உள்ள புனிதத் தலங்களில் ஒன்று? ... ... பத்ரிநாத்/சிதம்பரம்
4. உலகில் எத்தனை கடல்கள் உண்டு? ... ... .. ... ... ... ... 1 / 5
5. ஆவியாகும் தன்மை இதற்கும் உண்டு? ... ... .. ... நீர் / உயிர்
6. இதனைக் குறைத்தால் பெண்ணுக்கு அழகு என்றார் ஒளவையார்? ... ... ... ... உணவு / உடை
7. இதற்கும் தோகை உண்டு? ... ... ... ... ... ... ... மயில் / கரும்பு
8. நவமணிகளில் ஒன்று? ... ... ... ... குண்டுமணி / பவளம்
9. ஸ்ரீ இராமரின் குலகுரு இவர்? ... ... ... ... வசிட்டர் / விஸ்வாமித்திரர்
10. முதலில் விண்வெளிப் பயணத்தை தொடங்கிய நாடு எது? ... ... ... ... ... ரஷ்யா / அமெரிக்கா
11. உலகப் புகழ்பெற்ற ஓவிய மேதை? ... ... ... பிக்காஸோ / ரவிவர்மா
12. நோயாளிக்கு உறவு யாவர்? ... ... ... ... ... ... மருத்துவன் / நோய்

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

பொது அறிவுப்போட்டி இல: 35
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 21 - 03 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# விண்வெளியில்

## பறக்க விரும்பும் அமெரிக்க நாட்டு மாணவர்!

□ அமெரிக்கச் சிறுவர்களுக்கு ஆகாயத்தில் பறக்கும் விண்வெளி வீரர்களாக ஆக வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக உள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான ''நாசா''விற்கு ஒரு வாரத்தில் 250க்கும் மேற்பட்ட கடிதங்கள் சிறுவர்களிடமிருந்து வருகின்றன.

அந்தக் கடிதங்களில், ''நான் விண்வெளி வீரன் ஆவதற்கு விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டு சிறுவர்கள் எழுதுகிறார்கள்.

இது பற்றி ''நாசா''வின் இயக்குநர் கூறும்போது, ''20 வருடங்களுக்கு முன்னால் விண்வெளிக்குச் செல்வதைப் பற்றிய கதைகளைத்தான் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுவோம். ஆனால் இப்பொழுது, ''விண்வெளிக்கு நாங்கள் எப்படிப் போகவேண்டும்?'' என்று சிறுவர்கள் கேட்கும் அளவுக்கு அமெரிக்காவில் விண்வெளி ஆராய்ச்சி வளர்ந்திருக்கிறது'' என்று கூறுகிறார்,

சிறுவர்களின் மனதைக் கவரும் வகையில் ''நாசா'' பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் முக்கியமானது ''விண்வெளிக் கல்விப்பணித் திட்டம்'' என்பதாகும்.

இந்தத் திட்டத்தில் வருடத்திற்கு 12 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு விண்வெளி ஆராய்ச்சியைப் பற்றி சொல்லிக்கொடுப்பதோடு மட்டும் நிறுத்தாமல் அவர்களே [illegible] போய், விண்வெளி வீரர்களின் உடைகளை அணிந்து கொண்டு, உடல் எடை இல்லாமல் பறந்து பார்க்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

''நாசா''வின் மற்றொரு திட்டத்தில் 12 முதல் 18 வயதுவரை உள்ள சிறுவர் சிறுமிகளுக்கு விண்வெளிப் பயணம் சம்பந்தப்பட்ட போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

இது தவிர பள்ளி மாணவர்களுக்கு விண்வெளிப் பயணம் பற்றிய சிறப்புப் பயிற்சிகளும் கோடை விடுமுறை காலத்தில் நடத்தப்படுகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியில் இறங்க விரும்புபவர்களுக்கு பல தனியார் அமைப்புகளும் உதவிசெய்து வருகின்றன. இதில் முக்கியமானது ''இளம் விண்வெளி வீரர் குழு'' என்பதாகும். இதில் ரஷ்ய நாட்டில் இருந்தும் சிறுவர் சிறுமியர் வந்து பயிற்சி பெற்றுச் செல்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கு வருடந்தோறும் லட்சக்கணக்கான குழந்தைகள் மிகவும் ஆர்வத்தோடு வருகிறார்கள்.

இவர்கள் விண்வெளி வீரர்கள்போல உடைகள் அணிந்துகொண்டு பயிற்சிகள் செய்து பார்க்கிறார்கள்.

அமெரிக்க சிறுவர்களிடம் இப்பொழுது பொங்கி எழுந்திருக்கும் இந்த ஆர்வத்தின் பயனாக வருகின்ற நூற்றாண்டில் அமெரிக்கா திறமையான விண்வெளி வீரர்களைப் பெற்று மேலும் பல பெரிய சாதனைகளை விண்வெளியில் செய்யப்போவது உறுதி. ★

## யாருக்கு எதனைப் பரிசளிப்பது?

□ யாருக்கு, என்ன பரிசளிப்பது என்று திகைக்காதீர்கள்.

அறிஞர் பால்மோர் கூறுவதன்படி நடந்தால் ஒவ்வொருவருக்கும் நாம் பரிசுகளை வழங்கிக்கொண்டே இருக்கலாம். இனி வாசியுங்கள்;

பகைவனுக்கு மன்னிப்பைப் பரிசளி.

நண்பனுக்கு உள்ளத்தைப் பரிசளி.

குழந்தைக்கு நன்னடத்தையைப் பரிசளி.

தந்தைக்கு மரியாதையைப் பரிசளி.

தாய்க்கு உன்னைப்பற்றிய பெருமைப் படத்தக்க நல்லொழுக்கத்தைப் பரிசளி.

மனைவிக்குச் சகிப்புத்தன்மையைப் பரிசளி.

எல்லா மனிதர்களிடத்தும் தாராள குணத்தைப் பரிசளி. ★

## செய்மதிகளில் சூரியசக்தி

● வானவெளியில் சஞ்சரிக்கும் செய்மதிகளில் உள்ள மின் நிலையங்கள் இயங்க சூரியசக்தியே இப்போது பயன்படுத்தப்படுகிறது. சோவியத் விஞ்ஞானிகள் இதில் வெற்றி கண்டுள்ளனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்ளின் நடத்திய நேர்முகப் பரீட்சை

□ சார்லி சாப்ளின் உலகப் புகழ்பெற்ற புரட்சி மனப்பான்மை கொண்ட நகைச்சுவை நடிகராகவும், படத் தயாரிப்பாளராகவும் இருந்தார்.

அவர் தயாரிக்கவிருந்த ஒரு படத்திற்கு நடிகர் தேர்வு நடந்து கொண்டிருந்த போது ஓர் இளைஞர் அவரைச் சந்தித்துத் தமக்கு அவருடைய படத்தில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உமது திறமையை நிரூபிக்கக் கூடிய சான்று ஏதாவது இருக்கிறதா? என்று சார்லி சாப்ளின் கேட்டார்.

'இருக்கிறது' என்று உள்ளூர்ப் பிரமுகர்கள் சிலரிடம் வாங்கி வந்திருந்த நற்சான்றுக் கடிதங்களைக் காண்பித்தார்.

அந்தக் கடிதங்களை வாங்கிப் பார்த்த சாப்ளின், 'இவை போதாது' என்று கூறி அனுப்பி விட்டார்.

இரண்டொரு நாட்கள் கழித்து அந்த நண்பர் மறுபடியும் சார்லி சாப்ளினிடம் வந்தார்.

'பிரபல ஹாலிவுட் நடிகர்கள் சிலரிடம் சான்றுக் கடிதங்கள் வாங்கி வந்திருக்கிறேன்' என்றார்.

அந்தக் கடிதங்களைப் படித்துப் பார்த்த சாப்ளின், 'இந்தக் கடிதங்களா[illegible]ம் பயன் ஏதும் இல்லை' என்று கூறி அனுப்பி விட்[illegible]ர்.

இளைஞர் விடுவதாக இல்லை.

தொடர்ந்து அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பெரிய பதவியில் இருப்போர் என மாறி மாறி நற்சான்றுக் கடிதங்களை வாங்கி வந்த வண்ணம் இருந்தார்.

அந்தக் கடிதங்களுக்கும் சார்லி சாப்ளின் ஒரு சிறிது மதிப்பும் அளிக்கத் தயாராக இல்லை. இளைஞர் சோர்வும் சலிப்பும் அடைந்து விட்டார்.

'வேறு யாரிடம் தான் என் திறமை குறித்துச் சான்று வாங்கி வரவேண்டும். அதையாவது தெளிவாகச் சொல்லுங்களேன்' என்று எரிச்சலுடன் கேட்டார்.

சார்லி சாப்ளின் புன்னகையுடன் கூறினார்:

'இளைஞரே, உமக்கு நடிப்பதற்குச் சந்தர்ப்பம் தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர். நடிப்புத் திறமை உமக்கு இருப்பதாகக் கூறுகிறீர். உமக்கு நடிக்கத் தெரியும் என்று என்னிடம் நேரடியாக நிரூபித்துக் காண்பிப்பது ஒன்றுதான் உண்மையான சான்று. இத்தனை பேருடைய நற்சான்றுக் கடிதங்கள் உம் நடிப்பாற்றலை நான் விளங்கிக் கொள்ள எவ்வாறு உதவ முடியும்?'

'இதை நீங்கள் முன்பே என்னிடம் கூறி இருக்கலாமே?' என்று ஆத்திரம் பொங்கக் கேட்டான் இளைஞன்.

'நீர் உண்மையில் ஒரு நடிகராக இருந்தால் நடிப்புக் கலையில் ஆர்வம் இருந்தால் சான்றுக் கடிதங்களைத் தேடியிருக்க மாட்டீர். என்னிடம் நடித்துக் காண்பிக்க முயற்சி எடுத்திருப்பீர்' எனப் பளிச்சென பதில் அளித்தார் சார்லி சாப்ளின்.

— 'முன்னேறுவதற்கு 30 வழிகள்' என்ற நூலிலிருந்து.

# தோல் சுருக்கம் நீங்க உதவும் பச்சைத்தண்ணீர்

□ இளமையாக இருக்க, டி வி விளம்பரங்களில் காட்டும் 'கிரீம்' வகைகளை உபயோகிக்க வேண்டும் என்ற நம்மவர்கள் நினைக்கிறார்கள்.

இது தவறான எண்ணம் தினமும் 'ஜில்' என்று இருக்கும் பானைத் தண்ணீரில் எட்டு டம்ளர் குடித்து வந்தால் சருமம் பளபளப் இருக்கும்.

தண்ணீரில் உள்ள ஈரப்பசை தோலை மிருதுவாக்கச் செய்து கன்னத்திலும் கண்களிலும் விழும் சுருக்கத்தைத் தடுக்கிறது.

இதைக் கண்டு பிடித்திருப்பது வேறு யாருமல்லர். பலவித 'கிரீம்' களை உபயோகித்து வெறுத்துப்போன மேல்நாட்டுப் பெண்கள் தான்.

இதைத் தவிர பச்சைக் காய்கறிகள் சருமத்துக்கு வேண்டிய சத்துக்களைக் கொடுக்கிறது.

துண்டுகளாக வெட்டி, குளிர வைத்த வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால், சுருக்கங்கள் பக்கத்தில் நெருங்காது.

இவை எல்லாம் நம் பாட்டி, தாத்தா கடைப் பிடித்து வந்த விஷயங்கள் தான். ★

# நவரத்தினத்தைக் கண்டுபிடிக்கும் வழி!

★ முத்து என்றால் நுரையற்ற பாலில் மிதக்க வேண்டும்.

★ மரகதத்தைக் குதிரை மூக்கு முன்னால் கொண்டு சென்றால் தும்ம வேண்டும்.

★ பச்சைக்கல் தீ ஒளியின் முன் சிவப்பாகத் தெரியும்.

★ சுத்தமான வைரம், வைர ஊசியால் அழுத்தினால் உடையாது.

★ கோமேதகத்தைப் பசு நெய்யில் போட்டால் குங்குமப்பூ வாசனை வரும்.

★ பவளத்தில் சோதனை ஊசி தவிர வேறு இடத்தில் இறங்காது.

★ புஷ்பராகத்தை சந்தனக்கல் மீது வைத்தால் தாமரைப்பூ வாசனை வரும்.

★ வைடூரியத்தை பச்சிலைச் சாற்றில் போட்டால் வெள்ளையாக மாறும்.

★ நீலக் கல்லை பச்சிலை சாற்றில் போட்டால் ஒலி கிளம்பும்.

(— அரிய செய்தி 1001 நூலிலிருந்து)

## பஞ்சாமிர்தம் பலாசுஅமர்தம்

# பூமியை நோக்கி வரும் புதிய வால் விண்மீன்!

□ ஹேலி வால் விண்மீனைவிட 10மடங்கு பிரகாசமான வால் விண்மீன் (Comet) இப்போது சூரிய மண்டலத்தின் மையத்தை நோக்கி மணிக்கு 1. 23 லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

இந்த வால் விண்மீன் வடகோளார்த்தத்தில் வானில் வருகிற மே 25 ஆம் திகதி வாக்கில் புலப்படும்.

புதிய வால் விண்மீன் நமக்கு நன்கு தெரிந்த ஹேலி வால் விண்மீனைவிடப் பூமிக்கு அருகில் பூமியைக் கடந்து செல்லும். அப்போது அது பூமியில் இருந்து சுமார் 3. 6 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும்.

ஹேலி வால் விண்மீன் 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்து செல்வதாகும். ஆனால் புதிய வால் விண்மீனின் சுற்றுப்பாதை பரவளைய வடிவில் (Parabolic) அமைந்திருப்பதால் இது ஒரே ஒரு தடவைதான் பூமிக்கு அருகில் வரும். மீண்டும் இது தலை காட்டாது இப்போதைய கணக்கீடுகள் கூறுகின்றன.

புதிய வால் விண்மீனின் பெயர் 'ஒஸ்டின் 1989 சி 1'' என்பதாகும்.

நியூசிலாந்தைச் சேர்ந்த வானவியல் விஞ்ஞானி ரொட்னி ஆர். டி. ஒஸ்டின் இந்த விண் மீனைக் கடந்த ஆண்டில் கண்டுபிடித்தார். அதன் காரணத்தால் அவர் பெயரே இந்த விண் மீனுக்கு வைக்கப்பட்டது.

தென் அமெரிக்க சிலி (Chile) நாட்டில் உள்ள லோ சில்லாவன் ஆய்வுக் கூட விஞ்ஞானிகள் சமீபத்தில் இப்புதிய வால் விண்மீனைப் படமாக எடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வால் விண்மீன் இப்போது சூரியனில் இருந்து சுமார் 23 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

வருகிற ஏப்ரல் 9 ஆம் திகதி சூரியனை 5 கோடி கிலோ மீற்றர் தொலைவில் கடந்து சூரியனைச் சுற்றி முடித்து சூரியனிடம் இருந்து விலகிச் செல்ல ஆரம்பிக்கும். அது சூரியனை நெருங்கும் போது அதன் வேகம் 2. 56 லட்சம் கிலோ மீற்றராக இருக்கும். ★

# விண்வெளி சென்று திரும்பிய $1\frac{1}{4}$ கோடி தக்காளி விதைகள்!

□ செயற்கைக் கோள்மூலம் விண்வெளிக்குக் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒன்றேகால் கோடி தக்காளி விதைகளை அமெரிக்கா முழுவதிலும் உள்ள பள்ளி மாணவருக்கு விநியோகிக்க அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' முடிவு செய்துள்ளது.

இந்த விதைகளை வைத்து மாணவர் ஆராய்ச்சி செய்வர். இதர நாடுகளுக்கும் இந்த விதைகள் அனுப்பி வைக்கப்படும்.

அமெரிக்காவில் 'கொலம்பியா' விண்வெளி ஓடம் அண்மையில் விண்ணில் இருந்து ஒரு செயற்கைக் கோளைப் பத்திரமாகப் பிடித்து பூமிக்குக்கொண்டு வந்தது நினைவிருக்கலாம்.

அந்தச் செயற்கைக் கோளில்தான் இந்தத் தக்காளி விதைகள் வைத்து அனுப்பப்பட்டிருந்தன.

ஆறு ஆண்டுகாலம் அந்தச் செயற்கைக் கோள் விண்வெளியில் சுற்றி வந்து கொண்டிருந்தது.

அந்தச் செயற்கைக் கோளில் 57 விதமான அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பரிசோதனைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் இந்தத் தக்காளி விதைப் பரிசோதனையும் ஒன்றாகும். தக்காளி விதை நீண்டகாலம் விண்வெளியில் இருந்தால், அவற்றில் மாற்றங்கள் ஏதேனும் ஏற்படுமா என்பதை ஆராய்வதற்காக இவ்வாறு அந்தச் செயற்கைக் கோளில் விதைகள் வைத்து அனுப்பப்பட்டன.

விண்வெளிக்குச் சென்று திரும்பியுள்ள இந்த விதைகள் தனித்தனி உறைகளில் போடப்பட்டு பாடசாலைகளுக்கும் அனுப்பப்படும்.

ஒவ்வொரு உறையிலும் சாதாரண தக்காளி விதைகள் ஐம்பதும், விண்வெளி சென்று திரும்பிய தக்காளி விதைகள் ஐம்பதும் இருக்கும்.

இந்த விதைகளை மாணவர் நட்டுப் பரிசோதனை நடத்துவர். சாதர்ரணத் தக்காளி விதைகளும், விண்வெளி சென்று திரும்பிய தக்காளி விதைகளும் எவ்வாறு வளர்கின்றன? அவை செடியாக வளர எவ்வளவு காலம் பிடிக்கின்றன? இரு செடிகளின் பழங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பது பற்றியே இந்த ஆராய்ச்சி நடத்தப்படும்.

மற்றச் செடிகளைக் காட்டிலும், தக்காளிச் செடி விதைகள் தாம் பல தலைமுறைகளானாலும் அதிகமான மாறுதல் இல்லாமல் உள்ளன.

எனவே தான் விண்வெளிப் பரிசோதனைக்குத் தக்காளி விதைகள் தெரிந்தெடுக்கப்பட்டன என்று விஞ்ஞானி ஜிம் ஆல்ட்சன் தெரிவித்தார்.

''உயிருள்ள தாவரப்பொருள் ஒன்று, விண்வெளியில் நீண்டகாலம் இருந்தது இதுவே முதல் தடவையாகும்'' — என்று நாஸா நிர்வாகி திரு. ரிச்சர்ட் ட்ரூலி சொன்னார். ★

# பழனியில் பழத்தைத் தவறவிட்ட கருணாநிதி

□ சிவனும் சக்தியும அமர்ந்திருக்கிறார்கள்.

சிவனின் கையில் மாம்பழம் இருக்கிறது.

யாருக்கு இதனைக் கொடுப்பது?

உலகத்தைச் சுற்றி முதலாவதாக வருபவனுக்குத்தான்



கருணாநிதி!

இம்மாம்பழம் என்று சிவன் கூறவே,

முருகப்பெருமான் மயில் வாகனத்தில் ஏறி 'விண்' என்று புறப்படுகிறார் உலகைச் சுற்றி வர.

பார்க்கிறார் தொப்பை வயிறுடன் உள்ள பிள்ளையார்.

சிவனையும் சக்தியையும் சுற்றி வந்து [illegible] பிள்ளையார் [illegible]

பிள்ளையார் கைகளிலே மாம்பழம் இருக்கிறது.

உலகைச் சுற்றி விட்டு வந்திறங்கிய முருகன் இதைக் காணுகிறார். கோபம் கொள்கிறார்.

கோவணத்துடன் பழனிக்கு புறப்படுகிறார். 'பழம் நீ' என்று சிவன் முருகனைப் பார்த்து அழைக்கிறார்.

இந்தக் காட்சியைக் கலைஞர் கருணாநிதி பழனித் தேர்தலின்போது தனது தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் விவரித்திருக்கிறார்.

'பழம் நீ'— என்றனர் சிவனும் சக்தியும் முருகனைப் பார்த்து என்று புராணம் கூறும் பழனியில் 'பழம் இதோ' என்று வெற்றிக்கனி வழங்கிட வேண்டும் பழனி மக்கள்' —, இப்படி கழகப் பத்திரிகை 'முரசொலி' யில் கடிதமூலம் கலைஞர் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

பழனி தேர்தலில் 'பழம்' கலைஞருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் தி. மு. க. வுக்குச் சார்பாக ஆத்மீகக் கதைகளை எல்லாம் தி. மு. க. தலைவர்கள் மூலம் கேட்கும் வாய்ப்பு பழனி மக்களுக்குக் கிடைத்தது.

ஒரு கூட்டத்தில் தி. மு. க. எம். பி. கோபாலசாமி பேசுகையில், நாடெங்கும் சிவ[illegible] ஆனால் சிவனுக்கு [illegible] தேசித்த முருகனுக்கு பழனியில் மட்டும்தான் ஆலயம் உண்டு' — என்றார்.

பழனியின் பெருமைதான் என்னே! ★

## சுவையான தண்ணீர்

□ பசுபிக் கடல் தீவுகளில் ஒன்று ஹவாய்.

உல்லாசப் பயணிகள் உலகின் பல பாகங்களிலும் ஹாயாக தங்க ஹவாய்க்குத் தான் செல்கின்றனர்.

அந்த ஹவாய்த் தீவில் உள்ள இயற்கை ஊற்றுத் தண்ணீர்தான் உலகிலேயே மிகவும் சுவையானது

## தலை கீழாக நடக்கும் மிருகம்

□ என்ன மிருகம் மாதிரி தலை கீழாக நடக்கிறார் என்று நமது நாட்டில் பெரியவர்கள் கண்டிப்பது வழக்கமானதே.

மனிதனுக்குத் தேவையான குணங்களுக்கு மாறாக மிருகத்துக்குரிய குணங்களை உடையவர்களைப் பார்த்தே இப்படிப் பெரியோர் கண்டிக்கின்றனர்.

ஆனால் உண்மையிலேயே ஸ்லாக் என்ற வகை மிருகம் தலைகீழாகத்தான் நடக்கின்[illegible] என்பது விந்தையான செய்திதான். ★

# வேலைப்பளுவால் அகால மரணமடையும் ஜப்பானியர்

□ விஞ்ஞானக் கருவிகள் முதல் நிர்வாக நடைமுறை வரைஎதற்கெடுத்தாலும் ஜப்பான் நாட்டைப் பாருங்கள் என்று பலரும் சொல்வது வழக்கம்.

அங்கு சென்று திரும்பியவர்களும் ஜப்பானியரின் வேலைத்திறன் கண்டு வியக்கிறார்கள்.

ஆனாலும் 'அதிகவேலை' என்ற ஜப்பானியர்களின் பழக்கம் அவர்களில் பலருக்கு ஆட்கொல்லியாகி விடுகிறது என்று இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானியரின் சராசரி ஆயுட்காலம் 79 ஆண்டுகள்.

ஆனால் அதிக வேலைப் பளு காரணமாக பல ஜப்பானிய நிர்வாகிகள் ஐம்பது வயதுக்குள்ளாகவே இறந்து விடுகிறார்கள்.

திடீர் மாரடைப்பே இதற்குக் காரணம் என்று ஜப்பானிய வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

1988 இல் வேலைப் பளு காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 500க்கு மேல் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. ★

# அரசரா, ஆண்டவரா உலகில் பெரியவர்?

● மொகலாயப் பேரரசர் அக்பர் ஒரு சமயம் தனது சபையோரைப் பார்த்து — 'நான் பெரியவனா? அல்லது கடவுள் பெரியவரா?' — என்று கேட்டார்.

பதிலுடன் அதற்கான காரணமும் கூறப்படவேண்டும் என்று அக்பர் பணித்தார்.

ஒருவருமே வாய் திறக்கவில்லை.

பீர்பாலைக் கேட்டார் மன்னர் அக்பர்.

உடனே பீர்பால் —

அரசே, அண்டசராசரம் முழுவதும் கடவுளுடையதாக இருப்பதால் கடவுளால் தனது அரசை விட்டு ஒரு மனிதனைக்கூட நாடு கடத்த முடியாது.

'ஆனால் தாங்களோ உங்களுக்குப் பிடிக்காதவனை வெகு சுலபமாக நாடு கடத்தி விடுகிறீர்கள். ஆகவே நீங்கள தான் பெரியவர்'— என்று கூறினார்.

பீர்பாலின் கூற்றின் உட்பொருளைப் புரிந்துகொண்ட மன்னர் வெட்கித் தலை குனிந்தார். ★

## இலட்சியம்



பரமஹம்ஸர்

□ இராமகிருஷ்ண மிஷனின் இலட்சியம் (Motto) 'உலகம் ஒரு குடும்பம்' என்பதுதான். ★

## குறட்டை எப்படி உண்டாகிறது?

□ உறங்கும்போது அடிநாக்கையும், அதையடுத்து மிருதுவான இடங்களையும் கட்டுப்படுத்தும் தசைகள் ஓய்வுகொள்கின்றன. அப்போது மூச்சுவிடவேண்டியிருக்கின்றது. இரு பக்கத்திலிருந்தும் வரும் மூச்சுக் காற்றால் அந்தத் தசைகள் அசைகின்றன. அப்போது 'கர்' என்று சப்தம் உண்டாகிறது. அது தான் குறட்டை.

'இனியவை 200' என்ற நூலிலிருந்து.

## யானைகளின் விசிறிகள்

□ யானைகளின் காதுகள் அவற்றிற்கு விசிறிகளாகப் பயன்படுகின்றன.

ஆபிரிக்காவில் உள்ள யானைகளின் காதுகள் சுமார் 3½ அடி நீளம் கொண்டவை.

பெரிய உடம்பு கொண்ட யானை தன் உடல் சூட்டை வெளியேற்ற வசதியாகப் பெரிய காதுகள் அமைந்துள்ளன.

காடுகளில் மிக நுட்பமான ஒலியைக் கேட்பதற்கும் இந்தப் பெரிய காது உதவிகிறது. ★

## சிரிக்க, ரசிக்க, சிந்திக்க

□ மனோதத்துவ மருத்துவரைப்பார்க்க ஒரு நோயாளி சென்றார். வந்த காரணத்தைக் கேட்டார் மருத்துவர்.

நோயாளி சொன்னார்; ''பத்திரிகைகளில் நிர்வாண மனிதர்களின் படங்களைப் பார்க்கும் போது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டு விடுகிறது.''

''அதிர்ச்சி ஏற்பட வேண்டிய காரணமென்ன? நீங்கள் வைதீகமான மனப்போக்கு கொண்டவரா?''

''அதெல்லாம் இல்லை சார். நான் ரெடிமேட் ஆடைகள் விற்கும் கடைக்குச் சொந்தக்காரன்.''

—'சிரிக்க ரசிக்க, சிந்திக்க நூலிலிருந்து.

## 'கம்' என்று ஒரு மந்திரம்

□ 'கம் என்று சும்மா இரு... எல்லாம் தானே நடக்கும்? என்று பேச்சுவாக்கில் சொல்வது உண்டு.

உண்மையில் 'கம்' என்பது விநாயகரின் பீஜமந்திரம் 'ஓம் கம் கணேசாய நம' என்பது விநாயகரது சடக்கா மந்திரம்,

'கம்' என்ற விநாயக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தால் எல்லாக்காரியங்களும் விக்கினமின்றி பரமமங்களமாக முடியும் என்பதே இதன் பொருள்.

–வாரியார் உரையிலிருந்து.

★

## கடவுளும் மனிதனும்

□ வானத்தில் இருந்து கடவுள் பூமிக்கு வந்து மனிதனைப் பார்த்தார்.

'பூமி எப்படி இருக்கிறது'?- இப்படி மனிதனைக் கேட்டார் கடவுள்.

மனிதன்: மெய்ஞ்ஞானத்தில் பூமி தழைத்துக்கொண்டிருக்கிறது.

பிறகு பூமியில் இருந்து மனிதன் வானத்துக்குச் சென்று கடவுளைப் பார்த்தான்.

வானம் எப்படி இருக்கிறது?- மனிதன் கடவுளைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு கடவுள், 'விஞ்ஞானம் என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது'- என்றார்.

— 'கண்ணதாஸானின் குட்டிக் கதைகள்' நூலிலிருந்து.

## கொஸ்மோஸ் 2

□ உலகின் மிகச்சிறிய மருத்துவக் கண்டுபிடிப்பான கொஸ்மோஸ்-2 (Cosmos-II) என்ற கருவி அமெரிக்காவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இருதய நோயினால் பாதிக்கப்பட்ட வயதான ஒருவரது உடலில் இக்கருவியைப் பொருத்திய பின்னர், அவருடைய ஆயுள் நீடிக்கிறது.

ஒரு சிறிய தேக்கரண்டி அளவைவிட, குறைவான அளவிலான இக்கருவி எதிர்கால விஞ்ஞான உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

★

## மறந்து விடாதே!

□ துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு.

ஆனால் அது கற்பித்த பாடத்தை மட்டும் மறந்து விடாதே.

— அல்பேனிய பழமொழி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கீதை கூறும் ஆழ்ந்த இரகசியம்

**இந்துநாகரிகம்: பகவத்கீதை**
ஜி. சி. ஈ. உயர்தர மாணவருக்குரியது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### தியான யோகம்

அடுத்து வருவது தியான யோகம். கர்ம யோக ஞான யோகங்களில் சித்தி பெற்றவனுக்குண்டாகும் ஆத்மானுபலம் இந்த அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

எந்த விதமான துக்கம் வந்தாலும் சற்றும் அசையாத மன நிலைதான் உண்மையான யோகநிலை. மனத்தின் இயல்பு. சலனநிலைதான் - சஞ்சலந்தான். ஆனால் வைராக்கியத்தின் துணை கொண்டு; மனதின் குரல்காட்டத்தைக் கட்டுப்படுத்திவிட முடியும்.

நல்ல முயற்சியில் ஈடுபடும் ஒருவன், அந்த முயற்சியில் தோற்றால் கூட, நல்லது செய்ய முயன்றான் என்ற காரணத்துக்காக அவனுக்கு நல்ல கதியே கிடைக்கும். உடலை வருத்திப் பல்லாயிரம் ஆண்டுகள் தவம் செய்யும் ரிஷிகளைவிட, ஞானிகளைவிட, முறையாகக் கடமையாற்றுபவர்களைவிட, யோகி உயர்ந்தவன். ஆகவே அர்ச்சுனா, ஒரு யோகியாவதே உன்னுடைய லட்சியமாக இருக்கட்டும். யோகி என்பதற்கு இலட்சணம் அல்லது இலக்கணம் என்ன? முழுக்க முழுக்க என்னையே நம்பி, என்னை மட்டுமே அணுகி, என்னை முழு அளவில் சார்ந்து என்னைத் தன்மனதில் நிறுத்தித் தொழக் கூடியவனே யோகிகளில் எல்லாம் உயர்ந்த யோகி. இதுவே தியான யோகம்'

இந்த முதல் ஆறு அத்தியாயங்களிலும் ஆன்மாவின் இயல்பு, அதன் குறைபாடு, அந்தக் குறைபாட்டை நீக்க அது எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சி ஆகியவை விளக்கப்பட்டன.

### ஞான விஞ்ஞான யோகம்:

ஏழு தொடக்கம் பன்னிரண்டாம் அத்தியாயம் வரை உள்ள பகுதியில் பிரமத்தின் இயல்பு விளக்கப்படுகிறது. ஏழாம் அத்தியாயம் ஞான விஞ்ஞான யோகம்; இது ஸத் எனப்படும். பரம்பொருள் பற்றிய விளக்கம் கொடுக்கிறது.

இறைவன் உலகெங்கணும் அந்தராத்மாவாகி வியாபித்தும், அதைக் கடந்தும் எப்படி இருக்கிறார் என்பதும் சகுண நிர்க்குணப் பிரமங்களின் இயல்புகளும் இங்கு விளக்கம் பெறுகின்றன.

''நான் நீரில் சுவையாகவும், சந்திர சூரியரிடத்து ஜோதியாகவும், எல்லா வேதங்களிலும் ஓங்காரமாகவும், வானில் ஓசையாகவும் மக்களிடத்து, ஆண்மையாகவும், இருக்கிறேன். சுருக்கமாகக் கூறினால் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப்பொருள்களிலும் நானே உறைந்து இருக்கிறேன் என்பதை நீ உணர்ந்து கொள். மனிதன் இவைகளை அறியவொட்டாமல், அவனது சத்துவ, ராஜச, தாமஸ குணங்கள் தடுக்கின்றன. எனவே அவற்றை நீக்குவது அவசியம். என்னைச் சரண் புகுந்து பக்தி யோகத்தில் நிலைபெற்று நிற்பவனுக்கே அது சாத்தியமாகும்'' — என்கிறார்.

### விஸ்வரூப தரிசன யோகம்:

அது வளரக் கண்ணனது பெருமைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அர்ச்சுனன், தான் பகவானது விஸ்வரூபத்தைக் காண விழைவதாகவும், அதைக் காட்டி அருளும்படியும் வேண்டுகின்றான். அந்த விஸ்வரூபத்தைக் காண்பதற்குரிய திவ்ய விழிகளைப் பகவான் அர்ச்சுனனுக்கு அளிக்கிறார். அவன் அவற்றால் கண்ணனுடைய விஸ்வரூபத்தைக் கண்டு மகிழ்கிறான். (அந்த விஸ்வரூபத்தில் அண்ட சராசரங்கள் அனைத்துமே அடங்கியிருக்கக்கண்டு, வியப்புற்று கண்ணனைத் துதிக்கிறான்.) பிறகு அர்ச்சுனனது வேண்டுகோளின் பேரில் கண்ணன் தமது பழைய உருவத்தை எடுத்ததுடன், தமது உண்மையான சொரூபத்தைக் காணவும் தம்மை அடையவும் பக்தி ஒன்றே வழி என்று உபதேசிக்கிறார். இது பகவத்கீதையின் பதினோராவது அத்தியாயம்.

### பக்தி யோகம்:

இது பகவத்கீதை கூறும் பன்னிரண்டாவது யோகம். ஞான யோக பக்தி யோகங்களுள் ஞானயோகம் தாமதித்தே பலனளிக்கும். அதில் மனதை நிறுத்துவது கஷ்டமானது. பக்தி யோகமே விரைவில் பலனை அளிக்கும்.

பக்தி யோகம் என்பது அன்பு வழியாகும். இதற்கு ஆழ்ந்த இறைப்பற்று என்று பொருள் கூறலாம். நிலையற்றனவும் அழிந்து போவனவுமான பொருள்களில் வைக்கும் அன்பே துன்பத்திற்குக் காரணமாகின்றது.

எல்லாப் பொருள்களுக்கும் என்றும் மூல காரணமாய் இருக்கின்ற இறைவன் மீது செலுத்தும் அன்பே, என்றும் நிலையான இன்பம் தரும். எந்தவகையாகத் தொழுதாலும், நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் என் உருவத்தை மனதில் தேக்கி, எண்ணத்தை அதனுடன் இணைத்து, ஒரு நிலையாக்கி என்னைத்தானாகவே ஆக்கிக் கொள்பவன் எளிதாக என்னை அடைய முடியும். ஏனெனில் என் உருவத்தை விட்டு, உருவமில்லாத என் ஒளிவடிவத்தை மட்டுமே நெஞ்சில் நிறுத்தி மனத்தை ஒரு நிலைப்படுத்துவது எளிதான செயல் அல்ல. என்னை அடைய எளிய வழி, உயிர்கள் அனைத்திடமும் உள்ளன்பு கொண்டு பழகுவது. நண்பன், பகைவன், நல்லவன், கெட்டவன், மானம், அவமானம், இகழ்ச்சி, புகழ்ச்சி ஆகியவற்றையெல்லாம் ஒரு மாதிரியான உணர்ச்சியுடன் கவனிப்பவன் என் பக்தன். என்கிறார் பகவான்.

### மோட்ச சந்யாச யோகம்

பகவத்கீதையின் பதினெட்டாவது அத்தியாயம் மோட்ச சந்யாச யோகம்.

அதில் பகவான் சொல்வது: 'உலகில் ஒவ்வொருவருக்கும் அவரவர் இயல்புக்கேற்ப தான் தொழில்களை வகுத்து வைத்திருக்கிறேன்'

'தொழில்களில் உயர்வு தாழ்வில்லை. எல்லாத் தொழில்களும் சமமானவையே. தமக்கென வகுக்கப்பட்ட தொழில்களை ஒவ்வொருவரும், 'இதை நான் செய்கிறேன்' என்ற எண்ணமின்றி ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்தல் வேண்டும். ஒரு தொழிலும் செய்யாதிருப்பவன் பாவத்தைச் சேர்க்கிறான். இறைவனைத் தமக்குரிய கர்மங்களால் ஆராதித்து முத்தி பெறலாம்.

இறுதியாகப் பகவான்,

'அர்ச்சனா, எல்லா அறங்களையும் விட்டுவிட்டு, என்னையே சரண் புகு! எல்லாப் பாவங்களில் இருந்தும் நான் உன்னை விடுவிக்கிறேன், துயரப்படதே!' என்கிறார்.

இதுவே பகவத்கீதை இறுதியாகக் கூறும் ஆழ்ந்த ரகசியம்.

(முற்றும்)

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**
(பி. ஏ. இலங்கை, கல்வி டிப்ளோமா)




# வாழ்க்கைப் 'போரை' நடத்த வழிகாட்டும் பகவத் கீதை

ரோஜா மலரைக் கண்டால் நமக்கு இன்பம் ஏற்படுகிறது.

ஆனால் அதன் பக்கத்தில் உள்ள முள் நம்மைக் குத்தும் போது துன்பம் ஏற்படுகிறது.

ரோஜாவைப் படைத்த கடவுள் அதை முள் இல்லாமல் படைத்திருக்கக்கூடாதா என்று நாம் எண்ணுகிறோம்.

ஆனால் கடவுள் ஒரு பொருளையும் அப்படிப் படைக்கவில்லை.

உலகில் எல்லாப் பொருள்களும் இன்பமும், துன்பமும் கலந்துதான் காணப்படுகின்றன.

இன்று இன்பமாகத் தோன்றும் பொருள் நாளைக்குத் துன்பமாக மாறுகிறது.

இன்று துன்பமாகத் தோன்றும் பொருள் நாளைக்கு இன்பமாக மாறுகிறது.

அப்படியானால் இந்த வாழ்க்கையை எப்படித்தான் வாழ்வது?

நல்லவேளையாக, எப்படி வாழ்வது என்று கீதை சொல்லிக் கொடுக்கிறது.

கீதை என்றால் ஏதோ மோட்சத்துக்குப் போகும் வழியைச் சொல்லிக்கொடுக்கும் நூல் என்றுதான் நாம் நினைக்கிறோம்.

ஆனால் கீதை மோட்சத்துக்குப் போகும் வழியுடன் அன்றாட வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்றும் சொல்லிக்கொடுக்கிறது.

யுத்தம் செய்யமாட்டேன் என்று தேர்த்தட்டில் உட்கார்ந்து அர்ச்சுனனைப் பார்த்து, கிருஷ்ணர் 'சில நீதி'கள் கூறிவிட்டு, ஆகையால் போருக்குத் துணிந்தவனாக எழுந்திரு!' என்று கூறுகிறார்.

ஆனால் அப்படிப் போர் செய்தால் எந்த மனப்பான்மையுடன் செய்யவேண்டும் என்றும் சொல்லிக்கொடுக்கிறார்.

போர் என்றால் இன்பமும் இருக்கும், துன்பமும் இருக்கும். லாபமும் இருக்கும். நஷ்டமும் இருக்கும். வெற்றியும் இருக்கும். தோல்வியும் இருக்கும். எது எப்பொழுது ஏற்படும் என்று சொல்லமுடியாது.

நம் வாழ்க்கையும் ஒரு போர்தான்.

அது தொடர்ந்து இன்பமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு.

லாபம் கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது தவறு.

வெற்றி கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்று நினைப்பது தவறு.

வாழ்க்கையில் எல்லாம் கலந்துதான் வரும். ஆகவே, அவற்றைச் சமமாகப் பார்க்கக் கற்றுக் கொண்டால்தான் வாழ்க்கை நிம்மதியாகச் செல்லும்.

இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பது, துன்பம் வந்தால் துவண்டு விழுவது கூடாது.

இந்த இரண்டையும் சமமாகப் பார்க்கிறவர்கள் தாங்கள் எடுத்த காரியத்தில் வெற்றி காண்பார்கள்.

தோல்வியிழந்து விட்டோமே என்று அவர்கள் சோர்ந்து போகமாட்டார்கள். மீண்டும் முயற்சி செய்வார்கள். வெற்றி காண்பார்கள்.

**- சுவாமி பரமதீர்த்தானந்தர் -**

# தலைமுடி உதிர கவலையும் ஒரு காரணம்!

ஆண்களுக்கும் சரி பெண்களுக்கும் சரி தலைமுடி கொட்டுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு என்ன காரணம்... ?

தோல் வியாதிகள் அதாவது கிரியான் என்கிற காளான் நோய், தலையில் பொடுகு அரிப்பு ஏற்பட்டு சொரிதல், கொப்பளம், அக்கி உண்டாகுதல், மற்றும் பல ஊரல் வியாதிகள் காரணமாக இருக்கின்றன.

இது தவிர உடல் நோய்கள் காரணமாகவும் முடிகள் உதிர்ந்து போகும். தைராய்டு சுரப்பு குறைவது, டைபாய்ட் நிமோனியா, சுரங்கள் ஏற்படுவது, புரதச்சத்து உடலில் குறைவது, ரத்தசோகை நோய் போன்றவை முடி கொட்டுவதற்குக் காரணமாக இருக்கின்றன.

சில மருந்து வகைகள் உட்கொள்ளுவதாலும், எக்ஸ்ரே கதிர்கள் படுவதாலும் முடிகள் உதிர்ந்து போகும். சிபிலிஸ் என்கிற பால்வினை நோயினாலும் முடிகள் உதிரும்.

முடி உதிர்வதற்கு, குறிப்பாகப் பெண்களுக்கு மனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மன உளைச்சல், கவலைகள் காரணமாக ஒரே நாள் இரவில் தலைமுடி முழுவதும் உதிர்ந்து போன நோயாளியை நான் கண்டிருக்கிறேன்.

குழந்தை பிறந்தவுடன் தாய்மார்களுக்கு முடி கொட்டுவது பிரசவத்திற்குப் பின் திடீர் என இரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாறுதல்களும், சுரப்பிகளின் மாறுதல்களும்தான்.

தலைமுடியை இறுக்கிப் பின்னுவதாலும், 'ஹேர்பின்'களை இறுக்க குத்துவதாலும் கூட தலை ஓரத்தில் உள்ள முடிகள் கொட்டிப் போக வாய்ப்பு உண்டு.

பரம்பரை தீப்புண் தோல் புற்றுநோய் ஆகியவையும் முடி உதிர முக்கிய காரணம் ஆகும்.

இதில் மயிர் வேர்க்கால்களை அழிக்கின்ற பரம்பரை வழுக்கை, தீப்புண் தழும்புகள், தோல்புற்றுநோய், எக்ஸ்ரே கதிர்வீச்சு தாக்குதல், கிரியான், அக்கி நோய்கள் ஆகியவற்றில் மீண்டும் முடியை வளரச் செய்ய முடியாது.

மற்ற இடத்தில் உள்ள மயிர்க்கால்களை பதிப்பதன் மூலம் முடியை வளரச் செய்யலாம்.

மற்றவகை முடி உதிர்வுகளை வளரச் செய்ய வழி என்ன ?

முடி உதிர்வுக்கான மூல காரணத்தை கண்டு பிடித்து அதை நீக்க வேண்டும்.

முடி வளர்வதற்கான சத்துள்ள ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். அதாவது, புரதச்சத்து, இரும்புச் சத்து விட்டமின்ஸ் எடுப்பதால் மயிர்க்கால்களுக்கு நல்ல ரத்த ஓட்டம் ஏற்பட்டு முடி வளர்ச்சியுறும்.

தலைக்கு மசாஜ் செய்வதன் மூலமும் மயிர்க்கால்களுக்கு இரத்த ஓட்டமும் கிடைக்கும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புருவம், தலை முன் பகுதியில் முடிகொட்டிய நிலையில் திருமணம் தடைப்பட்ட இளம்பெண் ஒருத்தி என்னிடம் சிகிச்சைக்கு வந்தார்.

மயிர் உதிர்ந்த பகுதியில் ஊசி மருந்து செலுத்தி வந்தேன். ஆறே மாதத்தில் வியக்கத்தக்க அளவு அந்த இடத்தில் முடிவளர்ச்சி ஏற்பட்டது. இப்போது மணம் முடித்து மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

முடிவளர்ச்சிக்கென கூறி கடைகளில் சில எண்ணைகள் விற்கப்படுகின்றன. அவை பயன் தருமா?

சில பயன் தருகின்றன என்றாலும் அழுத்தித் தேய்த்து 'மசாஜ்' செய்வதன் மூலம் மயிர்கால்களுக்கு இரத்த ஓட்டம் அதிகமாகி முடிவளர வாய்ப்பு உண்டு.

பெண்கள் தலைக்கு ஷாம்பு தேய்ப்பது இப்போது அதிகரித்து விட்டது. இது நல்லதா...?

ஷாம்பு ஓரளவுக்குப் பயன்படுத்தலாம். ஆனால் தொடர்ந்து பயன்படுத்துதல் கூடாது. காரணம் இதில் இரசாயனப் பொருட்கள் சேர்க்கிறார்கள். அடிக்கடி பாவிப்பது நல்லதல்ல. ★

**- டாக்டர். ஆர். முத்துலட்சமி -**
(தோல்நோய் மருத்துவ பேராசிரியை)




## அடிக்கடி கண்ணாடி பார்த்தால் பெண் குழந்தை பிறக்குமா?

★ கர்ப்பிணிப் பெண்கள் படுத்து எழுந்திருக்கும்போது வலது கையை ஊன்றினால் ஆண்குழந்தை பிறக்கும்.

★ கர்ப்பிணிகளுக்கு வாந்தி அதிகமாக இருந்தால் பெண்குழந்தை பிறக்கும்.

★ கர்ப்பிணிகள் வாசற்படியில் தலைவைத்துப் படுத்தால் பிரசவம் சிரமமாக இருக்கும்.

★ அடிக்கடி கண்ணாடியையே பார்த்துக் கொண்டிருக்கும் கர்ப்பிணிகளுக்கு பெண்குழந்தை பிறக்கும்.

★ கர்ப்பிணிகள் யாருக்கும் தெரியாமல் எதையும் ரகசியமாகச் சாப்பிடக் கூடாது.

— 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்னும் நூலில் இருந்து

# பறவை முட்டைகளிலே பல வினோதங்கள்

பறவை என்ற பெயர் எதனால் ஏற்பட்டது? பறத்தல் என்ற செயலைச் செய்கின்றபடியால் பறவை என்ற காரணப் பெயர் ஏற்பட்டது!

அப்படியாயின் பறக்கவே பறக்காத தீக்கோழி, கீவி, 'எமு' போன்ற பறவைகள் இருக்கின்றனவே! அவை பறவைகள் இல்லையா?

அவையும் பறவைகளே! ஆரம்பத்தில் அவையும் பறந்து கொண்டுதான் இருந்தன. காலமாற்றத்தில்; பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக அவை பறத்தலை இழந்து – பறக்காத பறவைகளாகி விட்டன!

பறவைகள் பறக்கின்றனவோ இல்லையோ, ஆனால் கட்டாயம் அவை முட்டை இட வேண்டும்! அப்போதே அவை பறவைகள் என்ற வகுப்பிற்குள் அடங்கும்.

பறக்கின்ற பாலூட்டி இனமான வௌவால் இருக்கிறது. முட்டை இட்டுக் குஞ்சு பொரித்து பாலூட்டுகிற 'பிறிக்கப்பஸ்' இருக்கிறது. ஆனால் குட்டி போட்டு பாலூட்டுகிற பறவை இனம் உலகில் எங்குமே இல்லை.

இந்தப் பறவைகள் இடுகின்ற முட்டைகளிலேதான் எத்தனை வினோதங்கள்.


### முட்டையின் பருமன்

முட்டையின் பருமன், வடிவம், நிறம் என்பன பறவைக்குப் பறவை மாறுபடுகின்றன. உலகிலேயே மிகப் பெரிய பறவையான தீக்கோழி மிகப்பெரிய முட்டையையும், மிகச்சிறிய பறவையான 'ஹம்மிங் பேர்ட்ஸ்'– (இராகப் பறவை) மிகச்சிறிய முட்டையையும் இடுகின்றன.

ஆனால் பெரிய பறவைகள் எல்லாம் பெரிய முட்டைகளையே இடும் என்றோ, சின்னப்பறவைகள் சிறிய முட்டைகளை இடுமென்றோ ஏற்றுக்கொள்ள முடியாது.

முட்டையில் இருந்து வெளிவரும் குஞ்சின் வளர்ச்சியின் அளவே முட்டையின் பருமனைத் தீர்மானிக்கிறது.

முட்டையினுள் பூரண வளர்ச்சி அடைந்து வெளிவரும் கோழி, தீக்கோழி, தாரா, கானான் கோழி போன்ற பறவைகளின் குஞ்சுகள் பொரித்த இளமை நேரங்களிலேயே சுயமாக [illegible] உணவை உண்ணவும் செய்கின்றன.



எனவே இத்தகைய பறவைகளின் குஞ்சுகள், முட்டைக்குள்ளேயே பூரணவளர்ச்சி அடைவதற்காக – முட்டைக்கு அதிகளவு உணவு சேமித்து வைக்கப்பட வேண்டும். எனவேதான் அதிகளவு உணவு சேமிப்பைக் கொண்ட இந்த முட்டைகள் பெரிதாக இருக்கின்றன.

பருந்து, கிளி, மைனா, காகம் போன்ற பறவைகள், தூவிகள் முளைக்காத, கண்கள் சிவக்காத இறைச்சிப் பிண்டம் போன்றிருக்கும் சிறிய குஞ்சுகளைப் பொரிக்கின்றன.

இவை முட்டையில் இருந்து பொரித்து வெளியே வந்த பின்பு, பெற்றோர் பறவைகளின் உணவூட்டலால் இவற்றின் வளர்ச்சியில் பெரும் பகுதி நிகழ்கிறது. எனவே முட்டையினுள் சிறிதளவே வளர்ச்சியடையும் இவற்றிற்கு முட்டையினுள் சிறிதளவு உணவுப் பொருள் இருந்தாலே போதுமானது.

எனவேதான் இத்தகைய பறவைகளின் முட்டைகள் சிறிதாக இருக்கின்றன .

பெரிய பறவைகள் எல்லாம் பெரிய முட்டையையும் சிறிய பறவைகள் எல்லாம் சிறிய முட்டையும் இடும் என்ற கருத்து தவறானதாகும்.

இதற்கு உதாரணமாக பருந்தையும் கானான் கோழியையும் எடுக்கலாம்.

கானான் கோழியைவிட பருந்து ஏறத்தாழ 5 மடங்கு பெரியது. ஆனால் பருந்தின் முட்டையை விடக் கானான் கோழியின் முட்டை பல மடங்கு பெரிதாக இருக்கும்.

இதற்குக் காரணம், கானான் கோழி வளர்ச்சி அடைந்த குஞ்சைப் பொரிப்பதற்காக அதிகளவு உணவுப் பொருள் கொண்ட பெரிய முட்டையை இட வேண்டி இருக்கிறது. பருந்து அதிகளவு வளர்ச்சி அடையாத குஞ்சைப் பொரிப்பதால் குறைந்தளவு உணவுப் பொருள் கொண்ட சிறிய முட்டையை இடுகிறது.

### முட்டையின் உருவம்

பறவைகளின் முட்டைகள் பொதுவாக உருண்டை, கோள இருமுனை கூம்பிய வடிவங்களைக் கொண்டன. அதிக வேகமாகப் பறக்கின்ற பறவைகள் நீளமான முட்டைகளை இடுகின்றன எனவும், முட்டையின் அகல நீளத்திற்கும் பறவையின் பறக்கும் வேகத்திற்கும் தொடர்பு இருப்பதாக பலவைஇயல் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

கூடு அமைக்காமல், மலை இடுக்குகள், பாறை வெடிப்புகள், கரடுமுரடான தரைப் பகுதி போன்ற இடங்களில் இடப்படும் முட்டைகள் ஓரளவிற்கு கரடுமுரடான ஓட்டை உடையன.

இதனால் இம்முட்டைகள் மலைகளில் இருந்தோ பாறைகளில் இருந்தோ உருண்டு விழாமல் பாதுகாக்கப்படுகிறது.

### முட்டைகளின் நிறம்

பொதுவாக பறவைகளின் முட்டைகள், பறவையின் சாடு இருக்கும் சூழல் நிறத்திற்கு ஒத்தவையாகவே காணப்படும். அநேகமான பறவைகளின் முட்டைகள் ஊத்தை வெள்ளையில் மண்ணிறப் புள்ளிகள் உடையதாகவே காணப்படும்.

எதிரிகளைக் கவரும், கடும் நிறங்களான சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்களில் பறவைகள் முட்டைகளை இடுவதில்லை. முட்டைகளில் காணப்படும் புள்ளிகள், சூலகக்கானால் முட்டைகள் வரும்போது உண்டாகின்றன எனக் கூறப்படுகிறது. சிலவகைம் பறவைகளின் முட்டைகள் அடைகாத்தலின்போது நிறமாற்றத்திற்குட்படுகின்றன.

'ரியா' என்ற பறவை பச்சைநிற முட்டைகளை இடுகிறது. அடைகாத்தலின் போது இம்முட்டைகள் மஞ்சள் நிறமாக மாறி பின் நீல நிறமாக மாறி ஈற்றில் வெண்மை அடைகின்றன.

'ஈமு' என்ற பறவையின் முட்டைகள் ஆரம்பத்தில் பச்சை நிறமாக இருக்கும். பின்னர் இவை கறுப்பு நிறமாக மாறிவிடுகின்றன. தாரா, வாத்துப் போன்ற நீர்ப் பறவைகளின் முட்டைகள் வளுவளுப்பானதாயும் நீர் உட்புக விடாததாயும் காணப்படும்.

(வளரும்)

**- வடகோவை வரதராஜன் -**

## ஒளி விளக்கு!

எங்கள் வீட்டு விளக்கு
எளிமையான விளக்கு
அழகு ஒளியை வீசும்
அருமையான விளக்கு

எடிஸன் தந்த விளக்கு
இயங்காமற் போனால்
நாங்கள் பாடம் படிக்க
நன்றாய் உதவும் நமக்கு

எண்ணெயிலே எரியும்
இலகுவான விளக்கு
இரவில் அதற்கு வேலை
பகலில் உண்டு வீவு

— செல்வன்
[illegible]தசுந்தரம் ஸ்ரீகரன்
புளியங்கூடல்

## அறிவியல் வினா விடை

● தாவரங்களுக்கு வெய்யில் நேரங்களில் தண்ணீர் ஊற்றக்கூடாது: மாலையில்தான் ஊற்ற வேண்டும் என்கிறார்களே, அது சரியா?

தாவரங்கள் வெய்யில் நேரத்தில் முக்கிய வளர்சிதை மாற்றங்களான சுவாசித்தல் ஆவிப்போக்கு மற்றும் ஒளிச்சேர்க்கை போன்ற செயல்களில் ஈடுபட்டிருக்கும். அச்சமயத்தில் தண்ணீர் ஊற்றினால் இச்செயல்களின் வேகம் குறையவோ அல்லது கூடவோ வாய்ப்பு உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வாழ்க்கைப் போராட்டத்தை திரையில் காட்டும் 'கமரா' வின் பங்கு

"தில்லானா மோகனாம்பாள்" திரைப்படத்தில் ஒரு காட்சி வரும்.

அதில் சண்முகசுந்தரமான சிவாஜியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்பார் மனோரமா.

"உங்களுடைய நாதசுரத்தில் தான் நீங்கள் வாசிக்கிற அருமையான இசை எழுகிறதா? அல்லது எல்லா நாதசுரத்திலும் அப்படி உங்களால் வாசிக்க முடியுமா"? என்பார் அவர்.

நாதசுரத்தில் ஒன்றுமில்லை வாசிக்கிற ஆளைப் பொறுத்துத்தான் இசையின் தரம் மாறுகிறது என்ற பொருளில் அந்தக் காட்சியின் விளக்கம் கிடைக்கும் மனோரமாவுக்கு.

அதுபோல கையாளுகிற கமிராக்கள், கருவிகள் எல்லாம் ஒன்றுதான்.

ஆனால் பயன்படுத்துகிற மனிதர்கள்தான் வேறு.

அதனால்தான் ஒரு மார்க்கஸ் பார்ட்லேயை ஒரு வின்சென்ட்டை ஒரு அசோக்குமாரை, பாலுமகேந்திராவை, ஸ்ரீராமை அடையாளம் காணமுடிகிறது ரசிகர்களுக்கு!

பொதுவாக ஒரு திரைப்படத்தின் கதையினை, காட்சிகளை அதன் டைரக்டர் எப்படிப் பார்க்கிறார். ஆழமாகப் பார்க்கிறாரா சோகமாகப் பார்க்கிறாரா. வேடிக்கையாகப் பார்க்கிறாரா—

காட்சியில் அவர் பார்வையில் இனிமை அதிகமாக, கடுமை அதிகமா, இன்பமா, துன்பமா—என்பதைப் பொறுத்துத்தான் ஒரு ஒளிப்பதிவாளர் அதற்கேற்ப கமிராவை இயக்க வேண்டும்!

அதாவது டைரக்டரின் கண்களாக செயல்படுவதுதான் கமிரா.

டைரக்டரின் மனக்கண்ணில் நினைப்பவைகளுக்கு சமிரா கண்கள் மூலம் ரசிகர்களுக்கு காட்சி வடிவம் தருகிற பணிதான் ஒளிப்பதிவாளரின் வேலை!

ஆனால் டைரக்டர் சொல்கிற கதைப்போக்கினை மனதில் அசைபோட்டு, காட்சிகளின் அடிப்படைகளை கிரகித்துக்கொண்டு அந்த அடித்தளத்தின் மீது தங்களுக்கே உரிய தனிப்பாணியால் படைப்பாற்றல் திறனால் புதிய மெருகினைச் சேர்ப்பது வித்தியாசமான கோணங்களில் பார்ப்பது ஒளியின் நிறங்களை மாற்றுவது எல்லாம் ஒளிப்பதிவாளர்களின் கடமை ஆகும்.



சிவாஜிகணேசன்

ஸ்ரீராமைப் பொறுத்தவரை அவர் படம் பிடிக்கும் காட்சிகளில் வித்தியாசமான ஒளிப்பதிவு டெக்னிக்குகளை புகுத்தி வேறுபட்ட கோணங்களில் காட்சிகளை, குறிப்பாக பாடல் சீன்களை படம் பிடிப்பார் என்பதற்கு 'அக்னி நட்சத்திரம்' ஒரு அற்புதமான உதாரணம்.

ரசிகர்களிடையே மட்டும் அல்லாமல் தலைசிறந்த கமிராமன்கள் மத்தியிலேயேயும் ஒளிப்பதிவு குறித்த ஒரு விவாத மேடையாகவே மாறியதுண்டு அந்தப்படம்.

'மனிதர்கள்தான் முக்கியம் டெக்னோலஜி அல்ல' என்கிறார் ஸ்ரீராம்! ஒரு சினிமாவைப் படம் பிடிக்கும் முன்பாக தொடக்கம் முதல் இறுதிவரை அதன் முழுக் கதையையும் அணு அணுவாக கேட்டு புரிந்து கொள்வார் ஸ்ரீராம்.

கதையின் காலம், கதாபாத்திரங்களின் கலாச்சாரம், நம்பிக்கைகள், வாழ்க்கைப்போராட்டங்கள், வாழ்வியல் முறைகள் ஆகியவற்றை மனதில் படம் பிடித்துக் கொள்வார்.

அப்படி படம் பிடித்துக் கொள்ள அவைகளை ஏற்கனவே சித்தரித்துள்ள சினிமாப்படங்களைப் பார்த்தாலே போதும் என்கிறார் ஸ்ரீராம்!

ஜப்பான் நாட்டின் கலாச்சாரம் தெரியவேண்டுமானால் 10, 15 ஜப்பான் படங்களை பார்த்தால் புரிந்துகொள்ளலாம் என்கிறார்!

ஒரு குறிப்பிட்ட ஜப்பான் படம் பற்றிச் சொன்னார்:

"மண் சரிவு அடிக்கடி உண்டாகிக் கொண்டிருக்கும் ஒரு பகுதி. அங்கு வாழும் ஒரு குடும்பத்தினருக்கு சரிந்து விழுகிற மண்ணை அப்புறப்படுத்திக் கொண்டிருப்பதுதான் வேலை. அதுதான் அவர்களின் வாழ்க்கைப் போராட்டம்.

> 'அக்னி நட்சத்திரம்' புகழ் ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம் அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

ஒரு நாள் மண் சரிவோடு ஒரு வாலிபனும் தரையில் வந்து விழுகிறான். அவனைப் பிடித்து வைத்து அந்த குடும்பப் பெண்ணுக்கு மாப்பிள்ளை ஆக்குகிறார்கள்.

பிறகு அவனும் அவர்களோடு சேர்ந்து மண் சரிவை அகற்றும் வேலையில், வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபடுகிறான்.

இது போன்ற படங்களைப் பார்க்கும்போது உலகில் எப்படியெல்லாம் மனிதன் வாழ்கிறான். போராடுகிறான் என்ற விசாலமான பார்வை, விழிப்புணர்வு உண்டாகிறது என்று கூறிய ஸ்ரீராம் ஒரு வித்தியாசமான கேள்வியையும் தொடுத்தார்.

உலகத்திலேயே அதிகம் மழை பெய்கிற பூமி சிராபுஞ்சி என்ற பகுதி. அது இந்திய நாட்டில்தான் உள்ளது.

அந்த சிராபுஞ்சிக்குள் நுழைந்து அங்கே அத்தனை மழைக்குள்ளும் ஜீவமரணப் போராட்டம் நடத்துகிற மனிதர்களின் கதையை சினிமாவாக எடுப்பதுபற்றி நாம் சிந்தித்து இருக்கிறோமா? அவர் இப்படிக் கேட்டார்.

திரைப்படக் கல்லூரி புதிய டெக்னிக்குகளை கற்றுத்தந்தது என்பதைவிட உலகில் எப்படியெல்லாம் மனித வாழ்க்கை மாறுபடுகிறது என்ற விழிப்புணர்வை அந்தக் கல்லூரி ஊட்டியது என்பதுதான் முக்கியமான விஷயம் என்கிறார் ஸ்ரீராம்!

இந்த மனித வர்க்கத்தின் வேறுபட்ட வாழ்வியல் முறைகளோடு உணர்வுபூர்வமாக ஒன்றிப்போகிற மனிதாபிமானம்தான் முக்கியம்! எனவே மனிதர்கள்தான் முக்கியம். டெக்னிக்குகள் இரண்டாம் தரம்தான் என்கிறார் ஸ்ரீராம்! (எ-4)

வெள்ளித்திரையில்

## ஹொலிவூட் சென்ற சுதா சந்திரன் 'மயூரி' ஆங்கிலப்படமாகிறது!

நடிகை சுதாசந்திரனின் பரதநாட்டிய சிறப்பு நிகழ்ச்சி, அமெரிக்காவைச் சேர்ந்த வாஷிங்டன் நகரில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் முடிவில் ரசிகர்கள் எழுந்துநின்று எழுப்பிய கை தட்டல் ஒலி இடிமுழக்கம்போல் ஒலித்தது.

இந்தப் பாராட்டு சுதாவின் நடனத்துக்காக மட்டும் அல்ல.

அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற விபத்துக்குப் பிறகும் மனோதிடத்துடன் முயன்று மீண்டும் சிறந்த நடனக்கலைஞராக தன்னை நிரூபித்ததற்காகவும் தான்!

அன்று அங்கு கூடியிருந்த ஒவ்வொருவருக்கும் சுதா வலதுகாலை இழந்த சம்பவம் பற்றி நன்கு தெரிந்து இருந்தது.

அமெரிக்காவில் நியூயார்க், நாஷ்வில்லி, தம்பபா, வாஷிங்டன், சிகாகோ, சார்ல்ஸ்டன், சான்பிரான்சிஸ்கோ, லாஸ்ஏஞ்சல்ஸ் ஆகிய இடங்களில் இவரது நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.

வாஷிங்டனில் ஒரு இளம் பெண், இவரைச் சுற்றி இருந்த ரசிகர்களின் கூட்டத்தை கஷ்டப்பட்டு விலக்கிக்கொண்டு இவரது அருகில் வந்து,

இவரை நெருங்கி கண்ணீர் வடித்தபடியே இவரிடம் ஒரு கடிதத்தைக்கொடுத்தாராம். அதில், 'உங்கள் சாதனைக்கு எனது பாராட்டுக்கள்' என்று குறிப்பிடப்பட்டு இருந்ததாம்.

நாஷ்வில்லி நகர மேயர் இவருக்கு அரசு மரியாதைக்கு உரிய வகையில் 'சாவி' கொடுத்து வரவேற்பு அளித்துள்ளார்.

பொஸ்டனில் இவரது நடன நிகழ்ச்சி நடந்தபோது முன்னாள் ஜனாதிபதி கென்னடியின் சகோதரர் மகன் எட்வர்டுஜுனியர் இவருக்கு போன் செய்து, தன்னை நேரில் வந்து சந்திக்க முடியுமா. என்று கேட்டாராம். இவரும் எலும்பு புற்றுநோய் காரணமாக ஒரு காலை இழந்தவர்.

ஆனால் அவரைச் சந்திக்க சுதாவால் இயலாமற் போய் விட்டதாம்.

சுதாசந்திரன் நடித்த 'மயூரி' படம் ஒரு ஹொலிவிட் படத் தயாரிப்பாளரால் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட உள்ளது.

எனவே சுதா ஹொலிவுட்டுக்குச் சென்று அந்தத் தயாரிப்பாளரையும் சந்தித்தார். (எ-4)


★ நம்பிக்கை
★ நாணயத்தின்
★ சின்னம் ⟹ ஷ்ப்ரா

நிலையான முதலிடுகள்
கீழ்க்கண்ட வட்டி விதங்களில் வரவேற்கப்படுகின்றன.

3 வருடங்கள் 24%
2 வருடங்கள் 23%
1 வருடம் 20%

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230.000 | 4.365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1 791.516 | 8,263.918 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386.371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்த முன் லாபம் | 5,783,720 | 9,876,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827.514 | 8,505,201 | 16,880,879 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

பணிப்பாளர் சபை:

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களுக்கு:-

## ஷ்ப்ரா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலை பேசி இல. 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

★ இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ★




தன்னையறிந்தவனே தத்துவ ஞானியாகின்றான். தன்னையறிந்தவனே இறைவனையும் உணரத் தலைப்படுகின்றான்.

தன்னையறியத் தனக்கொரு கேடில்லை.
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்.
தன்னையறியும் அறிவை அறிந்தபின்,
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே

என்பது திருமூலர் திருவாக்கு.

இவ்வாறு தன்னையறிந்து சிவபோகத்தைப் பெற இந்த உடம்பைப் பயன்படுத்தும் வகை பற்றியும், அதன் சிறப்புப் பற்றியும் எமக்கு உணர்த்துவது திருவாசகம்,

நம் பழவினைகள் பாறும் வண்ணம் மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்த சிவானந்தத் தேன் தான் திருவாசகம்.

இத்தகைய திருவாசகத்திலே ஆழ்ந்து திளைத்தவர் திருக்கேதீச்சரம்-திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்ன சுவாமிகள். ஈழத்திலே சிறப்படைந்து வந்த மெய்ஞான பரம்பரையில் தம்மையும் இணைத்துக் கொண்டவர். சுவாமிகள் திருவாசகத்தின் அதி அற்புதச் சிறப்பினை உணர்ந்து அதில் பெரிதும் ஈடுபட்டதோடு, அதனை உள்ளம் உருக ஓதி உணர்ந்தவர்.

சுவாமிகள் வேறு, திருவாசகம் வேறு என்ற பேத இருள் மறைந்து திருவாசக சுவாமிகள் எனச் சிறப்படைந்தார். திருக்கேதீச்சரத் திருத்தலத்தையடைந்து இறை பணியாற்றினார். மடம் அமைத்து அன்ன தானம் வழங்கினார். திருவாசகப் பாடல்களை அடியார்களுக்கு உணர்த்தினார். ஆன்மீகக் கருத்துக்களையும், உபதேசங்களையும் மக்களுடைய வாழ்வு சிறக்க வாரி வழங்கினார். இத்தகைய சிறப்புப் பெற்ற சுவாமிகள் 1988 இல் சமாதியடைந்தார். அடிகளாரின் புனித அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறவன் புலவில் நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு சிவ சம்பந்தமாகிய திருக்கேதீச்சரம், திருவாசகம் ஆகிய இரு சாதனங்களினால் எம்பெருமானின் திருவருளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்ட சுவாமிகளின் சீரிய கருத்துக்களையும், ஞான உபதேசங்களையும், அருட்பாக்களையும் அடியவர்களுக்குப் பரப்பவும், சுவாமிகளின் சமாதிக்குப்


திருவாசக சுவாமிகள்

பூசை வழிபாடுகள் செய்யவும் சுவாமிகளது திருநாமத்தைக் கொண்டு 1988 இல் உருவாகியது திருக்கேதீச்சரம் - திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையாகும்.

இச்சபை 1989 ஆம் ஆண்டு முதல் ஈச்சமோட்டை ஞான வைரவர் ஆலயத்திலே, மாதந்தோறும் முதல் வரும் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் திருவாசகம், பண்ணிசை மற்றும் ஆன்மீக விரிவுரைகள் ஆகியவற்றைத் தக்காரைக் கொண்டு நடாத்தி மாதந்தோறும் நிகழ்ந்த நினைவுச் சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிடும் சீரிய பணியிலும் சபை ஈடுபட்டிருப்பது பாராட்டிற்குரியது.

சுவாமிகளின் நினைவாக நிகழ்ந்த சொற்பொழிவுகள் இளந்தலை முறையினர்க்கும் சமூகத்திற்கும் நன்கு பயன்பட வேண்டும் என்ற உயர் நோக்கத்தின் பெறுபேறே இந்நூல்.

தொகுப்பு: து. துரைராசா
வெளியீடு: ஸ்ரீமத் சுவாமிகளின் தொண்டர்சபை
விலை : ரூபா 10-00 (யாழ்ப்பாணம் புத்தகசாலைகளில் கிடைக்கும்)
விமர்சனம்: **கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**

ஏறக்குறைய ஐம்பது பக்கங்களைக் கொண்ட இந்நூலின் கண் ஆசியுரைகள் ஆகியவற்றுடன் எட்டு சொற்பொழிவுகள் எழுத்துருப் பெற்றுள்ளன. அத்துடன் மேலும் ஐந்து கட்டுரைகளும் நூலினை அணி செய்கின்றன.

சமய பண்பாட்டுச்சிறப்பு, திருவாசகத்தின் பெருமை, ஆன்மீகம், பக்திச் சிறப்பு. மந்திரத்தின் பெருமை, திருமுறைப்பெருமை, அவை காட்டும் வாழ்வு நெறி போன்றவை இக்கட்டுரைகளுள் காணப்படும் பிரதான அம்சங்கள்.

இந்நூலின் கண் அமைந்த கட்டுரைகள் ஒவ்வொன்றும் உளப்பண்பாட்டுக்கும், சமய மேம்பாட்டுக்கும், தன்னை உணர்வதற்கும் ஏற்ற வழிவகைகளைக் கூறி நிற்கின்றன. திருவாசகம் சுவாமிகளின் நினைவாக வெளிவந்துள்ள இக்கட்டுரைகள் இளந்தலைமுறையினர் சமய வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதற்கேற்ற வழிவகைகளைக் கூறி நிற்கின்றன.

இந்துசமயம், இந்துநாகரீகம் ஆகிய பாடங்களை உயர் வகுப்பில் பயிலும் மாணவர்களினதும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களினதும் சிந்தனைகளைத் தூண்டவல்ல கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

சுருங்கக்கூறின், திருவாசக சுவாமிகளின் மெய்ஞான கருத்துக்களைப் பரப்பும் தொண்டர் சபையின் சீரிய தொண்டாகவும், அதே சமயம் எம்மவர்க்கு வாய்த்த ஒரு பண்பாட்டுக் களஞ்சியமாகவும் இந்நூல் அமைகின்றது.

# மன்னிக்காத ஊழியன்

பேதுரு யேசுவிடத்தில் வந்து,

''ஆண்டவரே...! என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் [illegible] வந்தால் அவனை நான் எத்தனை தரம் மன்னிக்கவேண்டும்..? ஏழுதரம் மட்டுமோ...?''

அதற்கு யேசு,

''ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுவதுதரம் மட்டும் என்று உங்களுக்குச் சொல்கிறேன்.

எப்படியெனில், பரலோக ராஜ்சியம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டும் என்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.

அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கியபோது, பதினாயிரம் தரம் கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக்கொண்டு வந்தார்கள்.

கடனைத் தீர்க்க அவனுக்கு வழி இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும், அவன் மனைவி பிள்ளைகளையும், அவனுக்கு இருக்கும் எல்லாவற்றையும் விற்றுக் கடனைத் தீர்க்கும்படி கட்டளை இட்டான்.

அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து வணங்கி, ''ஆண்டவனே...! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்' என்றான்.

அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனமிரங்கி அவனை விடுதலை செய்து, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டார்.

ஆனால், அந்த ஊழியக்காரனோ புறப்பட்டுப் போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்த, தன்னுடன் வேலை பார்க்கும் மற்ற வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப்பிடித்து, அவன் தொண்டையை நெரித்து,

'நீபட்ட கடனை எனக் [illegible] தீர்க்கவேண்டும்' என்றான்.

அப்போது அந்த வேலைக்காரன் அவன் காலில் விழுந்து, 'என்னிடத்தில் பொறுமையாயிரும். எல்லா



வற்றையும் உமக்குக்கொடுத்துத் தீர்க்கிறேன்' என்று வேண்டிக்கொண்டான்.

அவனோ சம்மதியாமல் அவன் பட்ட கடனைத் தீர்க்கும் வரை அவனைக் காவலில் போடுவித்தான்.

நடந்ததை அவனுடன் வண்வேலை பார்க்கும் மற்ற வேலைக்காரர்கள் கண்டு மிகவும் துக்கப்பட்டு ஆண்டவனிடத்தில் வந்து நடந்ததை எல்லாம் அறிவித்தனர்.

அப்பொழுது அவனுடைய ஆண்டவன் அவனை அழைத்து, 'பொல்லாத ஊழியக்காரனே! நீ என்னை வேண்டிக்கொண்டபடியால் அந்தக் கடன் முழுவதையும் நான் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கியதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரர்களுக்கு இரங்கவேண்டும் எனக் கோபமாகக்கூறி, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்து தீர்க்கும்வரை உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தார்.

நீங்களும் உங்கள் சகோதரன் செய்த பிழைகளை மனப்பூர்வமாய் மன்னிக்காமல் போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்' என்றார்.

மத்தேயு 18:21-35

கிறிஸ்து உங்களை மன்னித்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்.

கொலோசெயர் 3:13

★

# துன்பங்களைத் தடுக்க தர்மம் உதவும்!

● மூன்று செயல்கள் இருக்கின்றன. எவரில் இவை குடிகொண்டிருக்கிறதோ அவர் மீது அல்லாஹ் தம் அடைக்கலம் என்ற போர்வையைப் போர்த்தி விடுகின்றான். மேலும் அவரைச் சுவர்க்கத்தில் நுழையவும் வைக்கின்றான்.

அவையாவன:- இயலாதவர்களுக்கு உதவுதல், பெற்றோர் மீது அன்பு காட்டுதல், அடிமைகளுக்கு உதவுதல்— ஆகியவை என பெருமானார் (ஸல்) [illegible] கள்.

● தர்மத்தை தாண்டி எந்தத் துன்பங்களும் வராது!

எனவே தர்மம் செய்வதில் தீவிரமாக இருங்கள். ஏனெனில், தர்மத்தைத் தாண்டிக் கொண்டு துன்பங்கள் (பலாய் முஸீபத்துகள் உங்களை) வந்து அணுகாது.

● தர்மத்தை குடும்பத்திலிருந்து தொடங்குங்கள்.

தம்முடைய அவசியத் தேவைகளிலிருந்து மிகுதியாக உள்ளதைத் தர்மம் செய்வதும், தம் குடும்பத்தினரிலிருந்து (தர்மம் செய்யத்) தொடங்குவதும் மேலான தர்மமாகும்.

● அறம் செய்தல் இறைவனின் சினத்தைத் தணிய வைத்து தீய இறப்பை விட்டு நம்மைத் தப்ப வைக்கிறது.

● அமானிதப் பொருட்களைக் கொண்டு சத்தியம் செய்ய வேண்டாம்!

**பெருமானார் (ஸல்) அவர்களின் பொன் மொழிகள்**

அமானிதப் பொருளைக் கொண்டு எவர் சத்தியம் செய்கின்றாரோ அவர் நம்மில் உள்ளவர் அல்லர்.

● மையத்தை (இறந்த உடலை) மூன்று பின் தொடர்ந்து செல்கின்றன.

★ அவருடைய குடும்பத்தினர்.

★ அவருடைய பொருள்.

★ அவருடைய செயல்கள்.

ஆனால், அவற்றில் இரண்டு திரும்பி விடுகின்றன. ஒன்று (அவரோடு) தங்கி விடுகின்றது. அவருடைய குடும்பத்தினரும், பொருளும் திரும்பி விடுகின்றன. அவருடைய செயல்களே அவரோடு தங்கி விடுகின்றன.

● மனிதன் இறந்துவிடின் அவனுடைய செயல்களும் முடிவுற்று விடுகின்றன. ஆனால், மூன்று செயல்கள் பின் தொடரும்.

நேமமாக நடந்து வரக் கூடிய தர்மம்.

மக்கள் பயன் அடைந்து வரும் கல்வி. (அதாவது அவன் கற்றுக் கொடுத்த கல்வி)

அவனுக்காக இறைஞ்சும் நல்ல வழித் தோன்றல்கள்.


● மனிதனின் கெட்ட பாத்திரம் வயிறு!

மனிதனுக்கு அவனுடைய வயிற்றை விட மிகக் கெட்ட பாத்திரம் வேறொன்றும் இல்லை. எனவே, அவனை நிலை நிறுத்தச் சில கவளம் உணவு போதுமானது. ஆனால், அவன் அதிகமாக உண்ண வேண்டிய தேவை ஏற்படின் அவன் வயிற்றின் மூன்றில் ஒரு பாகம் உணவிற்கும், மற்றொரு பாகம் தண்ணீருக்கும், வேறொரு பாகம் (திக்கு முக்கு ஏற்படாது மூச்சு விடுவதற்கும் வைத்துக் கொள்ளவும்.

தொகுப்பு: - பாத்திமா அமீரா அஜ்மல் -

★

# சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

# போட்டி இல: 109

**இடமிருந்து வலம்:**

1. சாவித்திரியின் கணவன் 5. இந்திராணி தலைகீழாக உள்ளது 6. பிரபலமான முருகன் ஆலயம் 9. மலையை இப்படியும் அழைப்பர் 10. ஒரு சொல் சேர்த்தால் வீடு வரும் 11. நதிகளில் ஒன்று 13. உலோகங்களில் இதுவும் ஒன்று 14. தாய்நாடு 15. கழனி 17. மயில் ஆடும், குயில் ? 18. எல்லை.

**மேலிருந்து கீழ்:**

1. நதிகளின் இணைப்பு 2. அகங்காரம் 3. அவதாரங்களில் ஒன்று குழம்பியுள்ளது 4. புகலிடம் சேர்தல் 7. இலக்குமி 8. புலவர்களில் ஒருவர் 10. கை, மெய்களால் கருத்தை உணர்த்துவது குழம்பியுள்ளது 11. உடலுறுப்பு 13. அன்பு 14. கடைசிச் சொல் சேர்த்தால் பிரபலமான ஒரு கவிஞர் 15. ஒரு எழுத்து சேர்த்தால் வருமானம் 16. நெற்களின் இடையில் வளர்வது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**முடிவு திகதி: 14 - 03 - 1990**

சொற்சிலம்பம் இல: 109
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம் ..............................
..............................

**சொற்சிலம்பம் இல: 108 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பரமபதம் 4. ரி. பி 5. ரகு 6. அடி 7. அமராபதி 8. சவரன் 9. கரி 10. குமரி 11. பதவுரை 12. பா 13. புதர் 14. மலைப்பு 16. கார் 17. புனை.

**மேலிருந்து கீழ்**

1. பரவசம் 2. ரகு 3. பரமன் 4. பிடி 6. அதிகரி 7. அரமாதர் 10. குளரப்பு 11. பதர் 12. பாலை 13. புகா 15. மது.

**பரிசு பெற்றவர்கள் விபரம்**

**முதலாவது பரிசு:**
ரி. ராஜேந்திரன், சோமசுந்தரம் லேன், ஆனைக்கோட்டை.

**இரண்டாவது பரிசு:**
த. துரைச்சாமி, கந்தகிரி, வட்டூர், வட்டுக்கோட்டை.

**மூன்றாவது பரிசு:**
ப. தெய்வேந்திரன், 7, பேக்கரி லேன், யாழ்ப்பாணம்.

# கிருமிநாசினிகளால் ஏற்படும் தாக்கத்தை தடுக்கும் வழிவகைகள்

உலகில் அதிகரித்து வரும் சனத்தொகையின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உணவுற்பத்தியில் பல பசுமைப்புரட்சிகள் (பரம்பரை அமைப்பு அலகுகளில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் at gene level) மேற்கொள்ளப்பட்டன. அதனால் அதிக விளைவு தரும் பயிரினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அதிக விளைவு தரும் இப்பயிரினங்கள் (High Yield (Varieties) அவற்றின் கலச்சாற்றின் இயல்பிற்கு ஏற்ப அதிக நைதரசன் உறிஞ்சும் இயல்பைப் பெற்றதனால் பீடைப்பூச்சிகட்கு விரைவில் தாக்கப்படும் இயல்பைப் பெற்றுள்ளன. இதனால் பீடை கொல்லிப் பாவனையும் கட்டாய தேவையாக்கப்பட்டுவிட்டது.

பீடைகொல்லிகளின் நச்சியல்பைக் கருத்திற்கொண்டு, விவசாய அமைச்சானது அதன் அறிமுகம், பாவனையில் பல சட்டமூலங்களை இயற்றியது.

உதாரணமாக, பீடை கொல்லிக் கட்டுப்பாட்டுச் சட்டம் இல: 33 (1980) இன்படி சட்ட இல: 20 பயிர் அறுவடை. எந்த ஒரு நபரும் ஒரு பீடை கொல்லியைப் பாவித்தபின் அப்பீடை கொல்லியின் வாழ்வுக்காலம் (Pre - Harvert Interval) முடிவடையும் முன் அறுவடைசெய்து சந்தைப்படுத்தலாகாது.

உண்மையில் பயிரினத்துக்கு வீசப்படும் பீடைகொல்லியானது பின்வரும் மாற்றங்கட்கு உள்ளாகின்றன.

(i) ஒளிப்பிரிக்கை (சூரிய ஒளி)

(ii) ஆவியாதல்

(iii) தாவரத்தினால் உள்ளெடுக்கப்பட்டு குறிப்பிட்ட காலத்துள் நச்சுநீக்கல்

(iv) மண் நீரினுள் சேருதல்.

எமது பிரதேசத்தில் பெரும்பாலான விவசாயிகள் பீடை கொல்லியின் வாழ்வுக் காலத்தை கவனிக்காது வெகுவிரைவாக அறுவடை செய்கின்றனர்.

அத்துடன் சிபார்சு செய்யப்பட்ட செறிவு, பிரயோகிக்கப்படும் இடைவெளி (Frequency) என்பவற்றைக் கவனியாது அதிக செறிவிலும் அதிக மீடிறனிலும் (Frequeucy) விசுறுகிறார்கள்.

இங்கு பீடைப் பொருளானது தடுப்பு நடவடிக்கையாகவே (Pre Lective) அன்றி (Cwrative) சிகிச்சை முறையாக பாவிக்கப்படவில்லை.

இவ்வாறு செய்வதனால் பீடைகொல்லிகளின் மீதியை (Residues) பயிரின் அறுவடையில் தேங்கச் செய்வதுடன் அப்பிரதேச குடிநீரிலும் இருக்கச் செய்கின்றார்கள். இறுதியாக விகார இயல்பை தோற்றக் கூடியதும் (Mutagenic) நரம்புக் கலங்களை தாக்கக்கூடியதுமான இப்பீடைப் பொருள்களை நுகரும் நாமே பாதிக்கப்படுகின்றோம்.

எனவே, இவற்றைத் தடுப்பதற்கு பின்வரும் நடைமுறைகளை எடுக்கவேண்டும்:-

(i) சம்பந்தப்பட்ட அதிகாரிகள் (குறிப்பாக விவசாயத்துறை மற்றும் நகர, கிராம சபை அதிகாரிகள்) இவற்றை ஆராய்ந்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

(ii) அதிக நச்சுப்பீடை கொல்லிகளை பாவனையில் இருந்து நிறுத்துதல்.

(iii) மாற்றுப்பீடை கொல்லித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்

(அ) உயிரியற்கட்டுப்பாடு

(ஆ) தொடர்புபடுத்தப்பட்ட பீடைக்கட்டுப்பாடு (Integrated Pest Control) இதுவே அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

(iv) பீடை கொல்லி இறக்குமதியில் தாராள பொருளாதாரக் கொள்கையை நிறுத்துதல்.

(v) இதில் அக்கறையுள்ள சகல சமூகப் பிரதிநிதிகளும் தமது பிரதேசங்களில் இத் துர்ப்பிரயோகத்தை மேற்பார்வையிட்டு விவசாயிகட்கு ஆலோசனை வழங்குதல்.

- ந. ஜெயகுமாரன் -

★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 ஆம் ஆண்டில்

# எய்ட்ஸ் நோய்க்கு உலகில் பலர் பலியாவார்; சோவியத் சோதிட நிபுணர் ஆரூடம்!

**சனி,** யுரேனஸ், நெப்டியூன் போன்ற பெரிய, மெதுவாக இயங்கும் கோள்கள் மகரத்தில் இருக்கும். பல ஆண்டுகளாக இக்கோள்கள் மகரத்திலேயே இருப்பதால் உலக நாடுகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கமுடிகிறது. கடகத்தில் இருக்கும் புளூட்டோ மனிதர்களுக்குத் துணிவையும், தீரத்தையும் கொடுத்து நாடுகளின் செல்வாக்கைக் குறைக்கும். இந்த நான்கு கோள்களையும் சார்ந்துள்ள நாடுகளின் கொள்கைகளை இக்கோள்களே தீர்மானிக்கும். மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜேர்மனி, சோவியத் யூனியன், பிரிட்டன் அமெரிக்கா, இஸ்ரவேல், ஐஸ்லாந்து, ஸ்வீடன், நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், ஆஸ்திரியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளே அவை.

மகரத்தில் இருக்கும் சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கோள்கள் முக்கிய, எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தும். இந்த மாற்றங்கள் மக்களை இடையறாத பதற்ற நிலையில் வைத்திருக்கும்.

### சனியின் குணம்

சனி, மக்களுக்குத் துன்பத்தைக் கொணருகிறது. ஆயினும் எல்லாப் பாதகங்களையும் தாக்குப் பிடித்து நிற்கும் பலத்தையும் அது தருகிறது.

யுரேனஸ் அனுகூலமான இடத்தில் இருக்கும்பொழுது அது மனித வாழ்வுக்கும் பலமளிக்கிறது. சம்பவங்களுக்கு எதிர்பாராத திருப்பங்களை வழங்குகிறது. ஆக்கபூர்வமான முடிவுகளுக்கு நம்பிக்கை அளிக்கிறது.

குழப்பங்களும் பைத்தியக்காரத்தனமும் நெப்டியூனின் குணங்களாகும். ஆயினும் அது அறிவாற்றலை ஊக்குவிக்கிறது. நட்பு வீடுகளில் இருக்கும்போது படைப்பாக்க ஆற்றலைப் பாதுகாக்கிறது.

### மார்ச் 20

மார்ச் 20 அன்று 9 : 19 மணிக்கு சூரியன் மேஷத்தில் நுழைவான். அப்போது 1990 ஆம் ஆண்டிற்கான உலக ராசிபலன்கள் தீர்மானிக்கப்படும். அது புதனுடன் சேர்ந்துகொள்ளும். இவ்வாறு கலக்கும்போது புதன் அஸ்தங்க தோஷமாகிவிடும்.

இச்சந்தர்ப்பத்தில் அரசியல் நெறிகள் மிகவும் அனுபவம் வாய்ந்த விமர்சகர்களையும் குழப்புமளவிற்கு உச்ச நிலையடையும். இச்சேர்க்கை வியாழன் சம்பந்தமாக மிக மோசமான கேந்திர அம்சத்தைக் கொண்டிருக்கும்.

> மாஸ்கோ சோதிடரான திரு. வாசிலி மகரேவிச் 1990 ஆம் ஆண்டில் நடக்கவிருக்கும் உலக நிகழ்ச்சிகளை இங்கு முன்கூட்டியே நமக்குக் கூறுகிறார்—
>
> 35 வயதாகும் இவர் மாஸ்கோ மருத்துவமனை ஒன்றில் அக்குபங்சரில் தேர்ந்த மருத்துவ நிபுணராகப் பணிபுரிகிறார்.
>
> "ஒரு புதிய கண்ணோட்டத்தில் உலக நடப்புகளையும் அன்றாட நிகழ்ச்சிகளையும் ஆய்வு செய்வதற்காக" தாம் ஜோதிடம் கற்றதாக இவர் கூறுகிறார்.

கடகத்தின் ஆளுகைக்குட்பட்ட நாடான இந்தியாவில் 1989 ஜூலை 31 முதல் தோன்றிவந்த பல பிரச்சினைகள் நிவர்த்தியாவதை நடைமுறையில் காண்பார்கள்.

இக்கிரகம் தனது 12 ஆண்டுச் சுற்றிற்காகச் செல்லும் என்று நம்பப்படுகிறது. சூரியனிலிருந்தும் புதனிலிருந்தும் 90 டிகிரி விலகியிருக்கும் வியாழன், மக்களுடைய கருத்துக்களுக்கு எதிராகச் செயற்படுமாறு அரசாங்கங்களைத் தூண்டும். இது குடிபெயர் தலை அதிகரிக்கும்.

அரசாங்க நல்வாழ்வுத் திட்டங்களைப் பாதிக்கும். விஞ்ஞானிகள் ஒருவர் மற்றவருடைய கண்டுபிடிப்புகளைத் திரும்பவும் செய்வர். அது மத வெறியைத் தூண்டும். உலக சுற்றுலாவைப் பாதிக்கும். நிலக்கரி மற்றும் கனிமச் சுரங்கங்களை மூடிவிடுமாறு தொழிலதிபர்களைக் கட்டாயப்படுத்தும். அரசியல் எதிர்ப்பும் அரசாங்க எதிர்ப்புச் சக்திகளும் உத்வேகம் பெறும். தொழிலாளர் மோதல்களும் அரசியல் கவிழ்ப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கலாம்,

விவசாயத்திற்கான வாய்ப்புகள் இருண்டுகிடக்கின்றன. கல்வி, குறிப்பாக கல்லூரிக் கல்வி வெறிகொண்ட சீர்திருத்தங்களுக்குப்பலியாகும்.

அயல்துறை விவகாரங்களில் பிரதேசப் பிரச்சினைகள் மோதல் நிலையை உருவாக்கும். எல்லைச் சண்டைகள் வெடிக்கும். தேர்தல்கள் எதிர்பாராத முடிவுகளைக் கொணரும்.

பல நாடுகள் தமது பங்காளிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தும். முடிவுகள் மேற்கொள்ளுவதில் தரப்புகள் பட்டும்படாமல் நடந்துகொள்ளும். தமது ஒப்பந்தக் கட்டுப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் அரசியல் தலைவர்களின் சுயமதிப்பீடுகள் வீழ்ச்சியடையும்.

### மேஷத்தின் செல்வாக்கு

மேஷத்தின் செல்வாக்குப் பெற்றநாடுகள் தமது இராணுவ நடவடிக்கைகளை அதிகரிக்கும். அவற்றின் கொள்கைகள் அவசர கோலமானவையாகவும் ஆக்கிரமிப்பு விழைவுள்ளவையாகவும் இருக்கும்.

கும்பராசி நாடுகளின் கொள்கைகளைப்பற்றிக் களிப்படையும் நாடுகளுக்குப் பெருத்த ஏமாற்றம் காத்திருக்கிறது.

ஆகஸ்டு 19 வரை கடக ராசியிலிருக்கும் வியாழன், யுரேனஸ், நெப்டியூன், சனி முதலியவற்றிலிருந்து 180 டிகிரி விலகியிருக்கும். புளூட்டோவுடன் ஒரு முக்கோணமாக இருக்கும்.

மே 13 அன்று யுரேனசுடன் அது மோதும்போது ஏற்படும் தீய அம்சம் பல ஆபத்தான ஆச்சரியங்களை ஏற்படுத்தும். கூட்டாளிகள் ஒருவருக்கொருவர் துரோகமிழைப்பர். தவறான தகவல்களினால் தவறான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

### விரும்பத்தகாத நிகழ்வுகள்

ஜூன் 4 அன்று வியாழனும், நெப்டியூனும் இணைந்து விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை ஏற்படுத்தும். புதிய மதவெறி கொண்ட கும்பல்கள் தோன்றும். போதை மருந்துகளுக்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும். பெரும் இரசாயன நிறுவனங்களில் விபத்துக்கள் ஏற்பட்டு சுற்றியுள்ள பகுதிகளில் நீர்வளங்கள் பாதிக்கப்படும்.

பாவகிரகமான சனியுடன் வியாழன் சேரும்போது நாடுகளிடையே நிதி சம்பந்தமான மோதல்கள் ஏற்படும். அவற்றின் சர்வதேசப் புகழ் மங்கும். சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மோசமடையும். வெள்ளம், நிலநடுக்கங்கள், இதர இயற்கைப் பேரிடர்களும், தொற்று நோய்களும் ஏற்படும் வாய்ப்புண்டு.

எய்ட்ஸ் நோய்க்குப் பலர் பலியாகக் கூடும். கர்மக் கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருக்கும். எய்ட்ஸ் நோயாளிகளின்பால் மானுட இனம் இரக்கத்துடன் நடந்துகொள்ளும்.

இந்த இரக்க உணர்வுடன் தகுந்த சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டிய தருணமாகும் இது. ஆயினும் மனித முயற்சிகள் பல கடக்கமுடியாத தடைகளைச் சந்திக்கும்.

யுரேனஸ், நெப்டியூன், சந்திரன் ஆகியவை ஒரே வீட்டில் இருப்பது தேசிய ஆன்மாக்களை உருவகப்படுத்துகிறது.

### கும்பராசி

கும்ப ராசியின் செல்வாக்குப்பெற்ற நாடுகளில் எதிர்பாராத புரட்சிகளுக்கு இது கட்டியம் கூறுகிறது. கும்பத்தின் வீட்டில் யுரேனஸ் ஆதிக்கஞ் செலுத்துகிறது.

1932-33 ஆம் ஆண்டுகளில் நாஸிசம் ஆட்சிக்கு வந்தசமயத்தில் இதேபோன்ற நிலைமை இருந்தது. இப்போதைய நிலைமை அந்த அளவுக்கு கடுமையாக இல்லை.

ஆயினும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வுகள் காணப்படும். ஆனால் இத்தீர்வுகள் காணப்படுமேயன்றி ஜனநாயக ரீதியானவையாக இராது.

ஆயினும், கும்பத்தில் செவ்வாய்க்கு இணையாக மகர வீட்டில் சனி இருப்பதால் இந்த நாடுகளின் மக்கள் அடக்குமுறைகளுக்கு உள்ளாவர்.

ஆகஸ்ட் 18 அன்று கும்பத்திற்கு எதிராக சிம்ம வீட்டில் வியாழன் நுழையும்போது பொருளாதார அரசியல் பிரச்சினைகள் மோசமடையும்.

வரவிருக்கும் கடினமான காலம் தனது மதிப்புகளை மறுமதிப்பீடு செய்து தனது அவசரப் பிரச்சினைகளுக்கு யதார்த்த உணர்வில் தீர்வு காணுமாறு உலகை நிர்ப்பந்திக்கும்.

- சோவியத்நாடு -
பெப்ரவரி 1990 -

## என் நிலை...?

அடியேனின்
வசீகர விழிகள்
பார்வைக்கல் எறிய,
அவளோ—
புன்னகைப்பூ சிந்துவாள்
என
எண்ணியிருந்தேன்!
அவளோ—
அப்பாவை அழைக்க,
இளமைக் கனவுகளின்
சாம்ராஜ்யம்
'பேச்சுக்களில்'
தொடங்கலாம்
என
நினைத்திருந்தேன்—
ஆனால்
நடந்ததோ.........
விழுந்தது...எனக்கு...?!
ஒரு பல்!!

- சத்தியன்

## இதயங்களை விலை பேசலாமா?

இலவசம் என்றதும்
பரவசம் அடையும்
இளைஞர்களே!
எங்கள்
இதயங்களை மட்டும்
ஏன் விலைபேச
அனுமதிக்கிறீர்கள்?

- மானிநகர் வதனி

## குற்றமா?

நீ
கண்களினூடாகக்
காட்டியவற்றை
நான்
கவிதையினூடாகக்
காட்டினேன்...!
இது குற்றமா?

- தாஸ்

## இதய கீதங்கள்

இதயகீதங்கள்
இன்னிசை முழக்கங்கள்
உதய மாகட்டும்
உலகம் ஒளிரட்டும்

உதய வானிலே
ஒழுகும் ஒளியிலே
புதிய பாதைகள்
புறப்பட்டு போகட்டும்

பழமையின் கோலங்கள்
புதுமையாய் மலரட்டும்
இளமையின் மிடுக்குகள்
இங்கித மாகட்டும்

காவியம் ஆயிரம்
கவிதையில் வளரட்டும்
ஓவியம் சிற்பம்
ஓமென ஒலிக்கட்டும்

கன்னியர் வீரமும்
கவிஞர்கள் தீரமும்
இன்னிசை முழக்கமாய்
இமயத்தை எட்டட்டும்

முன்னிய கருமங்கள்
முட்டின்றி முடியட்டும்
அந்நிய ரெம்மை
அன்புடன் பேணட்டும்

துன்பமும் துயர்களும்
தூசாய் ஒழியட்டும்
இன்பமும் எளிமையும்
எங்குமே சுவறட்டும்.

முருகவே பரமநாதன்

## நிம்மதி

என் இதயம்
நிம்மதியைத் தேடுகிறது
இன்னும்
உன் முகவரி
கிடைக்கவில்லை.

- சி. பத்மராஜா



**தான்சன் கல்வி நிலையம்**

தெல்லிப்பழை.

ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. J. R. சூரி |
| கணிதம் | — | திரு. மகேந்திரன், மதி |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| சமூகக்கல்வி | — | திரு. திருக்குமார் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| ஆங்கிலம் | — | திரு. ஹரிதாஸ் |



சஞ்சீவி சஞ்சிகை

10 - 03 - 1990 சனிக்கிழமை



**தான்சன் கல்வி நிலையம்**

தெல்லிப்பழை

A/L DAY CLASS

நடைபெறுகின்றன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. சண் |
| வர்த்தகம் | — | திரு. சிவா |
| கணக்கியல் | — | திரு. யோகன் |
| | — | திரு. வாசன் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| தமிழ் | — | திரு. கணேஷ் |
| இந்து நாகரீகம் | — | திரு. MR. |


# 'ரகசியப் பொலீஸ்' மோஹன்தாஸ் எழுதும்
# எம். ஜி. ஆரின் இரகசியங்கள்

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர், சினிமாவில் 'ரகசியப் பொலீஸ் - 115' ஆக நடித்தவர்.

ஆனால் அவர் தமிழகத்தில் பத்து ஆண்டு காலமாக ஆட்சி நடத்தியபோது அவரின் 'ரகசியப் பொலீஸ்' ஆகச் செயல்பட்டவர் திரு. கன்டத் மோஹன்தாஸ்.

எம். ஜி. ஆர் ஆட்சியில் புலனாய்வுத் துறைப் பொலீஸ் டைரக்டர் ஜெனரலாகப் பணிபுரிந்தவர் திரு. மோஹன்தாஸ்.

பொலீஸ் துறையில் சேர்ந்த பின்னர் அரசியல் சிக்கல் காரணமாக போக்குவரத்துத் துறையில் பணி புரிந்தார்.

அவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விரைவில் புத்தக வடிவில் வெளியிடப் போகின்றார்.

'நான் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களை உலகுக்குச் சொல்லப் போகின்றேன்' — இப்படிக் கூறும் திரு. மோகன்தாஸின் புத்தகத்தில் பல்வேறு சுவாரஸ்யமான செய்திகள் வெளியாகும் என்று நிச்சயமாக நம்பலாம்.

எம். ஜி. ஆரின் இரகசியங்களை நன்கு அறிந்தவர் மோஹன்தாஸ்.



எம். ஜி. ஆர்.

கடந்தவாரம் தமிழ் நாடு பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றவுடன் செய்தியாளர்கள் திரு. மோஹன்தாஸைச் சந்தித்தனர். தனது சேவைக் காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை அப்போது அவர் நினைவு கூர்ந்தார்.

அவை இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

□ கோடை கால மாலை வேளை. தொலை பேசி மணி அடித்தது. மோஹன்தாஸ் எடுத்தார். 'உடனே வாங்கோ' — இப்படி மோஹன்தாஸ் அழைக்கப் பட்டார்.

பதறியடித்துக் கொண்டு ராமாவரம் தோட்டத்தை அடைந்தார் மோஹன்தாஸ்.

அங்கு எம். ஜி. இராமச்சந்திரன் ஆறுதலாக அமர்ந்தபடி சக அமைச்சர்களுடன் நகைச்சுவையாகப் பேசிக் கொண்டு இருந்தார்.

தான் நடித்த பழைய படங்கள் பற்றியும் எம். ஜி. ஆர், சுவையாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்ட மோஹன்தாஸுக்கு ஆச்சரியம் வந்தது.

பதற்றத்துடன் சென்ற மோஹன்தாஸை அழைத்துத் தனக்கு அருகில் இருக்கும்படி கூறிவிட்டு எம். ஜி. ஆர் சம்பாஷனையைத் தொடர்ந்தார்.

திடீரென்று எம். ஜி. ஆர் எழுந்து கார் அருகில் சென்றார். மோஹன்தாஸையும் தன்னுடன் வரும்படி சைகையால் அழைத்தார்.

சக அமைச்சர்களுக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் எம். ஜி. ஆர் மோஹன்தாஸுடன் காரில் பயணமானார்.

பயணத்தின் போது எம். ஜி. ஆரின் வாய் கர்நாடக இசையை முணுமுணுத்தது.

மோஹன்தாஸ் மெதுவாக 'ஐயா உடனே வரச் சொன்னீங்களே!' — என்றார்.

'ஓ! அதுவா? — இப்படிச் சத்தம் போட்டு எம். ஜி. ஆர். சிரித்தார். 'சில அமைச்சர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். நீங்கள் வந்தது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி இருக்கும்'— இவ்வளவுதான் எம். ஜி. ஆர் சொன்னது.

மோஹன்தாஸ் பின்னர் வீடு திரும்பினார். பிறகு தொலைபேசி அழைப்புக்கள் அடுத்து அடுத்து மோஹன்தாஸுக்கு வந்தன.

எம். ஜி. ஆர் சொன்னது சரியாகி விட்டது.

'எம். ஜி. ஆரும் நீங்களும் என்ன விஷயம் பற்றிப் பேசினீர்கள்' — சக அமைச்சர்கள் தொலைபேசியில் இதனைத்தான் மோஹன்தாஸிடம் கேட்டனர்.

மோஹன்தாஸைத் தனது 'இரகசியப் பொலீஸ்' ஆக எம். ஜி. ஆர் பயன்படுத்தியதற்கு இது ஓர் உதாரணம்.

□ கடுமையாக நோய் வாய்ப்பட்ட பின்னர் சுகமடைந்த எம். ஜி. ஆர் 1985 இல் முதலமைச்சராகப் பதவி ஏற்ற அன்று......

எம். ஜி. ஆரின் பேசும் சக்தி வெகுவாகப் பாதிக்கப் பட்டிருந்தது. சைகை மூலம் தான் அவர் தனது எண்ணத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது.

பொலீஸ் அதிகாரி ஒருவர் வரவழைக்கப்பட்டார். 'உங்கள் மீசைக்காரப் பொலீஸ் அதிபர் எங்கே'— என்று சைகை மூலம் கேட்டார் எம். ஜி. ஆர். அவர் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு விட்டார் என்று எம். ஜி. ஆரிடம் சொல்லப்பட்டது. அவ்வளவு தான். அடுத்த நிமிடம் உத்தரவு பறந்தது. மோஹன்தாஸ் மீண்டும் எம். ஜி. ஆரின் 'இரகசியப் பொலீஸ்' ஆனார்.

எம். ஜி. ஆர். சுகயீனமாக அமெரிக்காவில் இருந்த சமயம், மோஹன்தாஸைப் பிடிக்காத இராம. வீரப்பனும், ஜெயலலிதாவும் மோஹன்தாஸை இடமாற்றம் செய்த விஷயம் அப்போதுதான் எம். ஜி. ஆருக்குத் தெரியவந்தது.

தங்களது தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன என்று இராம. வீரப்பனும், ஜெயலலிதாவும் அந்தக் காலத்தில் மோஹன்தாஸ் மீது குற்றஞ்சுமத்தி வந்தனர்.


□ அமெரிக்காவில் எம். ஜி. ஆர். தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த சமயம் ஒருநாள்......

சென்னையில் உள்ள மோஹன்தாஸ் வீட்டுத் தொலைபேசி மணி அடிக்கிறது.

'மலையாள நடிகர்......... ............நடிகையின் வீட்டில் ........... நடிகையுடன் மது அருந்திக் கொண்டிருக்கிறார். உடனடியாகப் போய்......... நடிகரை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்து வழக்குப் போடுங்கள்'— அமெரிக்காவில் இருந்து தொலைபேசி மூலம் வந்த உத்தரவின்படி செயல்பட்டார் மோஹன்தாஸ். ★



மோஹன்தாஸ்

**உங்கள் குழந்தையின் வாழ்வை நீங்களே பாழாக்கலாமா?**

குழந்தைகள் வண்ணத்துப் பூச்சிக்கு ஒப்பானவர்கள். அவர்கள் வாழும் உலகமோ வண்ண வண்ண மலர்கள் நிறைந்த பூஞ்சோலை. அதுவே அவர்கள் கவலையின்றி ஓடியாடி விளையாடித் திரியும் இனிய உலகம்...... சின்னமுத்து நோயினால், அது ஏற்படுத்தும் பாரதூரமான விளைவுகளினால், உங்கள் அன்புக் குழந்தை இந்த இன்ப உலகில் இருந்து பிரிக்கப்பட்டு இருள்சூழ்ந்த வாழ்வுக்குத் தள்ளப்படுமானால்...... உங்கள் கவனக் குறைவினாலேயே இந்த நிலை ஏற்பட்டது எனப் பிறர் குற்றம் சுமத்துவதை உங்களால் தாங்கிக்கொள்ள முடியுமா?

சின்னமுத்து ஒரு பொல்லாத பிள்ளைப்பருவ நோய். தாய் என்ற முறையில் இந்த நோய் பற்றி நீங்களும் நன்கு அறிந்திருக்க வேண்டும். சின்னமுத்து ஓர் ஆபத்தற்ற, சாதாரண நோய் என்று நினைக்க வேண்டாம் அது மூளைக்காய்ச்சல், கண்குருடாதல், நியூமோனியா, வயிற்றோட்டம், போஷாக்கின்மை முதலிய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லது. அசட்டையாக இருந்தால் குழந்தையின் உயிருக்கே ஆபத்தை உண்டுபண்ணக்கூடியது.

உங்கள் குழந்தைக்கு 9 மாதங்கள் நிரம்பியதும் அண்மையிலுள்ள அரசாங்கத் தாய் சேய் நலப் பராமரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசெல்லுங்கள். அங்கே இலவசமாக வழங்கப்படும் சின்னமுத்து நோய்த்தடுப்பு மருந்தை உங்கள் குழந்தைக்குப் பெற்றுக்கொடுங்கள்.

ஒரே தடவையில் செலுத்தப்படும் இந்தத் தடுப்பு மருந்து உங்கள் குழந்தைக்கு வாழ்நாள் முழுவதும சின்னமுத்து நோயில் இருந்து நிச்சயமான பாதுகாப்புத்தரும்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
யூனிசெப்

துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org